24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 கதிர் 129 பங்குனி 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை 05 ஏப்ரல் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## நிலத்தடித் தண்ணீரில் கழிவு ஒயில் பரவ நொதேன் பவர் நிறுவனம்தான் காரணம்

### உயர்நீதிமன்று நேற்று அதிரடித் தீர்ப்பு
### பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடாக ரூ.2 கோடி

கொழும்பு, ஏப். 5
சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளில் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலக்கப்பட்டமைக்கு நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிலையமே காரணம். அந்த நிறுவனம் அங்குள்ள நிலத்தடி நீர் மாசடையக் காரணமாக அமைந்துவிட்டது. அந்த நிறுவனத்தால் அந்தப் பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று உயர்நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு வழங்கியுள்ளது. நொதேர்ன் பவர் நிறுவனத்தின் இத்தகைய நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட 500க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 20 மில்லியன் ரூபா (2 கோடி) இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்று உத்தரவிட்டது.
சுன்னாகம் நிலத்தடி நீர் >> 21



## உச்ச வெப்பம் மிகஅவதானம்

கொழும்பு, ஏப். 5
அடுத்த சில தினங்களுக்கு உச்சக்கட்ட வெப்பநிலை நிலவும் என்று எதிர்பார்க்கப்படுவதால், பொதுமக்களை மிக அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.
இன்று முதல் 15ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், இலங்கையில் சூரியன் உச்சம் கொடுக்கும். எனவே, தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான முன்னாய்த்த நடவடிக்கைகளை மக்கள் எடுக்க வேண்டும். தண்ணீரை அதிகளவில் அருந்தி மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் எச்சரித்துள்ளது.
(ம)

## பன்னாட்டு இதழியல் மாநாடு யாழ்.நகரில் இன்று ஆரம்பம்

### பேராசிரியர்கள், துறைசார் வல்லுனர்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஏப். 5
4ஆவது பன்னாட்டு தமிழ் இதழியல் மாநாடு யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. மக்கள் இதழியல் அமைப்பு, உதயன் பத்திரிகை, சென்னை பல்கலைக்கழக தொடர்பியல் துறை என்பவற்றின் ஏற்பாட்டில் இரு நாள்களாக அமர்வு இடம்பெறவுள்ளது.
சென்னைப் பல்கலைக்கழக ஊடகத்துறை மற்றும் தொடர்பாடல் பிரிவுத் தலைவர் பேராசிரியர் கோபாலன் >> 21

### வரவு – செலவு மீதான இறுதி வாக்கெடுப்பு இன்று

## ரணில் அரசின் தலை தப்புமா?

- ◆ கூட்டமைப்பு ஆதரவு
- ◆ ஜே.வி.பி., மகிந்த அணி எதிர்ப்பு
- ◆ நடுநிலை வகிக்க சு.க. தீர்மானம்?
- ◆ ஐ.தே.கவின் அதிருப்தியாளர்களுடன் தலைமை அமைச்சர் பேச்சு

கொழும்பு, ஏப்ரல் 5
ஐக்கிய தேசிய முன்னணி அரசின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இன்று மாலை நடைபெறவுள்ளது. >> 21

## கணவனிடம் இருந்து எம்மை காத்தருள்க!

### கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஆறு பிள்ளைகளுடன் தாய் தஞ்சம்

யாழ்ப்பாணம், ஏப். 5
கணவனின் தாக்குதல்களைத் தாங்க முடியாத 37 வயது குடும்பப் பெண் தனது நான்கு பெண்பிள்ளைகள் உட்பட ஆறு பிள்ளைகளுடன் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளார். >> 21

## பொலிஸாரை கண்டதும் ஓட்டமெடுத்த அடாவடிக்குழு

### இருவர் பிடிப்பு

சாவகச்சேரி, ஏப். 5
சாலையில் வந்த மகிழுந்தை வழிமறித்த கும்பல் அதனுள் இருந்தவர்களை வாளால் வெட்ட முயன்றவேளையில் மகிழுந்தில் பயணித்த பொலிஸார் இறங்கவே வாள்களுடன் வந்தவர்கள் தப்பியோட முயற்சித்தனர். அவர்களில் இருவர் கைது செய்யப்பட்டனர்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி பெருங்குளம் சங்கத்தானை சாலையில் நேற்று இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
குறித்த பகுதியில் உள்ள வீடொன்றுக்கு உறவினர் ஒருவர் மகிழுந்தில் வந்துள் >> 21

## தமிழர்களின் ஆதரவுடன் மீண்டும் ஆட்சி அமையும்

### மகிந்தவின் நம்பிக்கை இது

கொழும்பு, ஏப். 5
வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் முழுமையான ஆதரவுடன் மீண்டும் எமது தலைமையிலான அரசு அமைக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித் >> 21

## சட்டவிரோத மண்புதுப்பித்தல் தொழிற்சாலை சிறப்பு அதிரடிப்படையால் நேற்று முற்றுகை!



கிளிநொச்சி, ஏப். 5
மதவாச்சிப் பகுதியில் நீண்ட கால மாக இயங்கி வந்த மண் செப்பனிடும் சட்டவிரோத தொழிற்சாலை நேற்று மாலை சிறப்பு அதிரடிப்படையால் சுற்றி வளைக்கப்பட்டு அங்கிருந்த உழவு இயந்திரங்கள், >> 21

## இந்து சமயத்துக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து உணவு ஒறுப்புப் போராட்டம்


கொடிகாமம், ஏப். 5
இந்து சமயத்துக்கு எதிராக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக் கண்டித்து உணவு ஒறுப்பு போராட்டமொன்று மருதனார்மடம் ஸ்ரீ சுந்தரேச ஆஞ்சநேயர் ஆலய முன்றலில் நாளை காலை 8 >> 21

## வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு ரூ.15 பில்லியனை ஒதுக்க வேண்டும்

### தலைமை அமைச்சரைக் கோருகின்றார் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

கொழும்பு, ஏப். 5
வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான பண நிதியத்துக்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவை 15 பில்லியனாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் >> 21





# உங்கள் பெயருக்கு பின்னால் இருக்கும் இரகசியம்

உங்கள் பெயருக்கு பின்னால் இருக்கும் இரகசியம் என்னவென்று தெரியுமா? தெரிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்.

N-என்ற எழுத்து ஓவிய திறனை குறிக்கும். துடிப்பு மற்றும் முயற்சி வேட்கையுடைய பண்பை கொண்டவரான நீங்கள் பிறரிடம் இருந்து விலக்கியே வைக்கப்படுவீர்கள். அனைத்தி லும் முழுமையை எதிர்ப்பார்க்கும் நீங்கள், உங்கள் துணையை தேர்ந்தெடுப்பதில் மிகவும் அக்கறை கொள்வீர்கள்.

O-அனைத்தையும் விட அறிவு மற்றும் கல்விக்கே முக்கியத்துவம் அளிப்பீர்கள். உங்கள் பெயர் O என்ற எழுத்தில் தொடங்கினால், நீங்கள் ஆசிரியராகவோ, எழுத்தாளராகவோ வருவீர்கள். ஒழுக்கத்துடன் இருக்கும் நீங்கள் எது நல்லதோ, அதன் பக்கமே நிற்பீர்கள். உங்கள் துணையிடமும் அதே குணங்களை தான் எதிர்ப்பார்ப்பீர்கள்.

P-உங்கள் பெயர் P என்ற எழுத்தில் தொடங்கினால், நீங்கள் திறமைசாலியாக, அறிவுக் கூர்மை மிக்கவராக, புதுமை மிக்கவராக இருப்பீர்கள். படபடவென பேசும் உங்களுக்கு எப்படி குதூகலமாக இருப்பது என்பது தெரியும். உடல் தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள், நல்ல அழகான துணையைத் தான் தேடுவீர்கள்.

Q-என்ற எழுத்தில் பெயர் தொடங்குபவர்கள் நல்ல எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் இருப்பீர்கள். பலரும் நாடக ஆசிரியர்களாகவும், இசையமைப்பாளாராகவும், நடிகர்களாகவும் இருப்பார்கள். அவர்களுக்கு திடமான கருத்துகள் இருக்கும். அவர்களுக்கு தனித்துவமான பெர்சனாலிட்டி இருக்கும். ட்ரெண்டை பின்பற்றாமல் புதிதாக உருவாக்குவார்கள்.

R-உங்கள் பெயர் R என்ற எழுத்தில் தொடங்கினால், உண்மையான, கருணையான மற்றும் அன்பு மிக்க மனிதராக இருப்பீர்கள். சவால்கள் என்றால் உங்களுக்கு பிடிக்கும். அதே போல் அனைத்தையும் சுலபமாக எடுத்துக் கொள்வீர்கள். அமைதியுடன் வாழ விரும்பும் நீங்கள், உங்களுக்கேற்ற நல்ல துணையை தேடுவீர்கள்.

S-என்பது பாலுணர்வு, கவர்ச்சி மற்றும் கொடை உணர்வை குறிக்கும். உங்களுக்கு கவர்ச்சி என்றால் பிடிக்கும். அனைவரின் கவனத்தையும் ஈர்க்கவே விரும்புவீர்கள். புதிய ஐடியாக்கள், நிகழ்வுகள் போன்றவைகளை உருவாக்கி, அதனை வெற்றி பெற வைக்க கடினமாக உழைப்பீர்கள்.
கனவு காணும் நபராக, நேர்மையாக, மனக்கிளர்ச்சியுடன் செயல்படுவீர்கள். அதே போல் காதலில் விழாமலும் இருக்க முடியாது.

T-உங்கள் பெயர் T என்ற எழுத்தில் தொடங்கினால், எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பீர்கள்.
சில நேரம் அளவு கடந்த சுறுசுறுப்பால் உங்களால் உறவுகளை பராமரிக்க முடியாது. உங்கள் தொழிலில் கவனம் செலுத்த விரும்பும் உங்களுக்கு, நினைத்தபடி வேலை நடைபெறவில்லை என்றால் மன வலி உண்டாகும். மனதளவில் திடமான வராக விளங்கும் நீங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவீர்கள்.

U-உங்கள் பெயர் U என்ற எழுத்தில் தொடங்கினால், அறிவுமிக்க தனித்துவமான இந்த நபர்கள் சிறந்த ஓவியர்கள் மற்றும் எழுத்தாளர்களாக விளங்குவார்கள்.
ஒழுங்கற்ற முறையில் பராமரிக்காமல் செயல்படுவார்கள். அதனால் இவர்களுடன் வாழ்வது சற்று கடினமாக விளங்கும். ஒருத்தரை திருமணம் செய்வதற்கு பதில் பல பேருடன் உறவில் ஈடுபடும் அனுபவம் கிட்டும்.

V-உங்கள் பெயர் V என்ற எழுத்தில் தொடங்கினால், நீங்கள் ஒரு நடைமுறைவாதியாகதிகழ்வீர்கள். உண்மையுள்ள, காதல் உள்ளம் கொண்ட, மென்மையான இதயம் உள்ளவராக விளங்குவீர்கள். ஆற்றல் வாய்ந்த குணத்துடன் இருப்பதால், வாழ்க்கையில் பலவற்றை சாதிப்பீர்கள்.

W-உங்கள் பெயர் W என்ற எழுத்தில் தொடங்கினால், கொடை உள்ளத்துடன் இருப்பீர்கள். ஃபேஷனுடன், பாசமிக்க, சிறந்த காதல் உள்ளம் கொண்டவாராக இருப்பீர்கள். அவர்களை புரிந்து கொள்வது கடினமாக இருந்தாலும், தெரிந்து கொள்வது உத்தமமாகும். வாழ்க்கையின் எந்த ரகசியத்தையும் அவர்களிடம் பகிர்ந்து கொள்ளலாம். மனதில் பட்டதை பேசும் அவர்கள் தெரிந்தே எதையும் மறைப்பதில்லை.

X-உங்கள் பெயர் X என்ற எழுத்தில் தொடங்கினால், சொகுசை விரும்பும் உங்களை சுலபமாக வழி நடத்தலாம். ஆனால் ஒப்பிய பொறுப்பில் ஈடுபடுத்திக் கொள்ள விரும்ப மாட்டார்கள். வாழ்க்கையில் சொகுசையும், சுகத்தையும் எதிர்ப்பார்ப்பீர்கள். இயற்கையாகவே வலிய போய் எதிர் பாலினரிடம் அதிகமாக வலிவீர்கள்.

Y-சுதந்திரத்தை குறிக்கும் Y என்ற எழுத்து. Y என்ற எழுத்தில் பெயர் தொடங்கினால் நீங்கள் ஒரு துணிச்சல் மிக்க தொழிலதிபராக இருப்பீர்கள்.
எந்த ஒரு இடர்பாட்டை எடுக்கவும் தயங்க மாட்டீர்கள். செயல்திட்ட முன்னேற்றமுடைய யோசிப்பாளரான நீங்கள் பிறரை ஈர்ப்பீர்கள். இவர்கள், வாழ்க்கையில் நடக்கும் நல்லதை பார்த்து மகிழ்வார்கள்.

Z-உங்கள் பெயர் Z என்ற எழுத்தில் தொடங்கினால், இந்த எழுத்தை உடைய பெயரை பார்ப்பது அரிது.
இவர்களை சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருக்க வேண்டும். இவர்கள் ஒரு சிறந்த கவுன்சலராக இருப்பார்கள். பிறரை பற்றி நன்கறிவர்.

# 12 ராசியில்
## எந்த ராசியில் குரு இருந்தால் என்ன பலன்கள்



நவகிரகங்களில் சுப கிரகங்களில் தலை சிறந்த கிரகமாக விளங்குவது குரு பகவான். குரு தனத்திற்கும் புத்திரம், பொருளாதார நிலை, வக்கீல் தொழில், கொடுக்கல் வாங்கல், பொது காரியம், தெய்வீக விஷயங்கள், பூர்வீக புண்ணியம் போன்றவைகளுக்கு காரணன் ஆவார்.

**குரு 7இல் இருந்தால்**
குரு ஜென்ம லக்கினத்திற்கு 7இல் இருந்தால் சுபர் சேர்க்கை மற்றும் சுபர் பார்வையுடன் இருந்தால் மன வாழ்வு மகிழ்ச்சிகரமாக இருக்கும். நல்ல அழகான மனைவி, சிறப்பான குடும்ப வாழ்வு, வசதியான பெண் மனைவியாக வரும் யோகம் உண்டாகும். 7இல் தனித்து இருந்தாலும் ஆட்சி, உச்சம் பெற்றாலும் (கேந்திராதிபதி தோஷம்) தோஷத்தை உண்டாக்கும் பாவிகள் சேர்க்கை பெற்றால் மண வாழ்வில் பிரச்சனை உண்டாகும்.

**8இல் இருந்தால்**
குரு பகவான் 8இல் பலமாக இருந்தால் நீண்ட ஆயுள், நல்ல ஆரோக்கியம், திடீர் தன சேர்க்கை இருக்கும் இடத்தில் நல்ல பெயர் இறுதி நாள்கள் அமைதியாக இருக்கும் நிலை உண்டாகும். குரு பாவிகள் சேர்க்கை பெற்றோ, பலம் இழந்தோ இருந்தால் நோய், உடம்பு பாதிப்பு, சாபத்தால் மன அமைதி இல்லாத நிலை உண்டாகும்.

**9இல் இருந்தால்**
குரு பகவான் 9இல் இருந்தால் தாராள தன சேர்க்கை, பூர்வீகத்தால் அனுகூலம், பெற்றோர் மூலம் அனுகூலம், தந்தைக்கு நீண்ட ஆயுள், பொது பணி, தெய்வீக பணிகளில் ஈடுபாடு உண்டாகும். நல்ல பழக்க வழக்கம், பெரியோர்கள் ஆசி உண்டாகும்.

**10இல் இருந்தால்**
குரு பகவான் 10ஆம் வீட்டில் இருந்தால் உயர் பதவிகளை வகிக்கும் அமைப்பு பண நடமாட்டம் கொடுக்கல் வாங்கல் தொடர்புள்ள தொழில், அல்லது துறைகளில் பணிபுரியும் அமைப்பு, நேர்மையான வழியில் செல்லும் நிலை, பொது காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். கிரக சேர்க்கையுடன் பலம் இழக்காமல் இருப்பது நல்லது. தனித்து இருந்தால் நிறைய தடைகள் உண்டு.

**11இல் இருந்தால்**
குரு 11இல் இருந்தால் தாராள தன வரவு, நல்ல அறிவாற்றல், வசதி வாய்ப்பு, உடன் பிறந்தவர்கள் மூலம் அனுகூலம் சமுதாயத்தில் பெயர் புகழ் கௌரவம் உண்டாகும். புத்திர வழியில் அனுகூலம், சிறப்பான குடும்ப வாழ்வு, திடீர் அதிர்ஷ்டம், ஸ்பெகுலேஷன் மூலம் ஏற்றம் ஏற்படும்.

**குரு 12இல் இருந்தால்**
குரு 12இல் இருந்தால் பண வரவில் இடையூறு, வீண் செலவுகள், சுப காரியங்களுக்கு செலவு செய்யும் நிலை உண்டாகும். குரு 6, 8க்கு அதிபதியாக இருந்து 12இல் இருந்தால் நற்பலனை உண்டாக்குவார். 12இல் குரு சுபர் பார்வை உடன் இருந்தால் நல்ல உறக்கம் நிம்மதியான இல்லற வாழ்வு, சுப செலவு, சிறப்பான கண் பார்வை உண்டாகும்.

## ஏல விற்பனை
### யா/யாழ் மத்திய கல்லூரியின்
# பழைய கட்டடப்பொருள்

யா/ யாழ் மத்தியகல்லூரியின் கட்டடத் திருத்தத்தின் போது பழைய கட்டடத்திலிருந்து அகற்றப்பட்ட **கதவுகள், யன்னல்கள், அயன்கிறில், மின்விசிறி** போன்ற பொருள்கள் **18.04.2019 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் யா/ யாழ் மத்திய கல்லூரி வளாகத்தில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது**. மேலதிக விவரங்களை பாடசாலை நேரத்தில் பாடசாலையில் பெற்றுக் கொள்ளலாம்

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(cs. 145384) (13.17)

## கிறேசர் விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் சந்திரா கிறேசர் விற்பனைக்கு.
**077 955 1729**

## வீடு விற்பனைக்கு

சுன்னாகம். உடுவில் கிழக்கு பிரதேச செயலகம் அருகில் 4 1/4 பரப்பு வீடு வளவு விற்பனைக்குண்டு. (CS 22138) (04.17)
**078 825 2741, 076 305 2741**

## பெண் வேலையாள்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பெண் வேலையாள்கள் உடன் தேவை.
**வயது** :- 18 தொடக்கம் 30 வரை
**வேலை நேரம்** :- காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை
**தொடர்பு-076 118 4010**

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.
**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306/077 138 7596**

## உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு,
advt@uthayan.com,
021 493 1111

## ES Printers

450/=
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## மண்கும்பான்
## அருள்மிகு வீரகத்தி விநாயகர் மஹோற்சவம் -2019



**இன்று (05.04.2019) வெள்ளிக்கிழமை ஐந்தாம் திருவிழா**

பக்தி முத்தி நிறுத்த கணபதி காட்சி காராம்பசு வாகன உலா

f: mankumpan vellaipttady sri veerakathy vinayagar

அனுசரணை

## சிறி கஜமுகன் ஜுவல்லர்ஸ்



இல.B 111, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
021 222 4134

## வேலைவாய்ப்பு

இந்தியாவை தலைமை இடமாகக்கொண்டு கொழும்பு இரத்மலானையில் செயற்பட்டுவரும் பிரபல கேரள ஆயுள்வேத வைத்தியசாலைக்கு ஆயுள்வேத தாதியர் பயிற்சி முடித்த மற்றும் பயிற்சிபெற விரும்பும் ஆண்/பெண் இருபாலாரும் உடனடியாக தேவை.

* சமையல் * வரவேற்பாளர் * சுத்திகரிப்பாளர்.

B O 9/1. 1st Lane Rathmalana, Colombo
077 5814240, 011 263 3338
075 330 0301

## VACANCY IN JAFFNA

வடமாகாணத்தைப் பிரதிநிதிதத்துவம் செய்யும் கணனி, மற்றும் சேவைகளை வழங்கும் எமது நிறுவனத்தில் கணனி வன்பொருள் தொழினுட்ப உதவியாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. NVQ Level 4 அல்லது கூடுதலான தகைமையாளர்கள் விண்ணப்பிக்கலாம். ஒரு வருடத்திற்கு கூடுதலான அனுபவம், மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் மேலதிக தகைமைகளாகக் கொள்ளப்படும். கவர்ச்சிகரமான கொடுப்பனவுடன் மேலதிக படிகளும் வழங்கப்படும்.
விருப்பமுடையவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை info@stpjaffna.com எனும் மின்னஞ்சல் மூலம் 7 நாட்களிற்குள் விண்ணப்பிக்கவும்

STP® *Your Partner in IT Solution*
49,1 st Cross Street, Jaffna. T.P: 021 222 2674


# கேள்வி அறிவித்தல்.
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான இப்போது தகவுடையோரும் தகைமைபெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
3. கேள்வியாளர்கள் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர், இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 05.04.2019 ஆம் திகதி முதல் 17.04.2019 ஆம் திகதி வரை மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 16.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 250/= கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் 18.04.2019 ஆம் திகதியன்று பிற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million | Contract Period | Fund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/K/RDHS/B/ PSSP/2019/01 | Renavation for MOIC Quarters at DH Akkarayankulam | 0.297 | 1month | PSSP | 3000.00 | 04/08/2019 |
| 02 | NP/K/RDHS/B/ PSSP/2019/02 | Improvement of work at DH Akkarayankulam | 0.507 | 1month | PSSP | 5000.00 | 04/08/2019 |
| 03 | NP/K/RDHS/B/ PSSP/2019/03 | Construction of waste segregation store at DH Akkarayankulam | 0.4 | 1month | PSSP | 4000.00 | 04/08/2019 |
| 04 | NP/K/RDHS/B/ PSSP/2019/04 | Improvement of Patient screen and Racks at DH Tharmapuram | 0.327 | 1month | PSSP | 3500.00 | 04/08/2019 |
| 05 | NP/K/RDHS/B/ PSSP/2019/05 | Improvement work for EYE ward DGH Kilinochchi | 0.213 | 1month | NGO | 2100.00 | 04/08/2019 |
| 06 | NP/K/RDHS/B/ PSSP/2019/06 | Conctraction of Ambulance Park at DH Akkarayankulam | 0.386 | 1month | PSSP | 3800.00 | 04/08/2019 |
| 07 | NP/K/RDHS/B/ PSSP/2019/07 | Improvement for Covered way at DH Akkarayankulam | 0.194 | 1month | PSSP | 2000.00 | 04/08/2019 |
| 08 | NP/K/RDHS/B/ PSSP/2019/08 | Construction of Driver Quarters at DGH Akkarayankulam | 2.4 | 3months | PSSP | 24000.00 | 04/08/2019 |
| 09 | NP/K/RDHS/B/ PSDG/2019/01 | Improvement of Clinics (VP) at DGH Kilinochchi | 0.78 | 2months | PSDG | 7800.00 | 04/08/2019 |
| 10 | NP/K/RDHS/B/ PSDG/2019/02 | Improvement of Rest Room for Medical Officers at DGH Kilinochchi | 0.754 | 2months | PSDG | 7500.00 | 04/08/2019 |
| 11 | NP/K/RDHS/B/ PSDG/2019/03 | Improvement of Administrative office at DGH Kilinochchi | 0.0015 | 1month | PSDG | - | 04/08/2019 |

Dr.சி. குமரவேள்
தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

(IN 9825)(10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 25 . 07 . 1925



மறைவு 06 . 03 . 2019

## அமரர் கதிர்காமு சிதம்பரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

**திதி: அமாவாசை 05.04.2019**


ஏதும் புரியவில்லை எதுவும்
தெரியவில்லை உங்கள் நினைவால்
யாதும் இழந்தது போல்
தனித்து நிற்பதுவாய் நெஞ்சம்
கலங்கிக் கண்ணீர் சிந்தி
உங்கள் சிம்மக் குரலோசை வானில்
கலந்துவரும் காற்றின் தழுவலினால்
கண்கலங்கி நிற்கின்றோம் நாம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
வேண்டிநிற்கின்றோம்

"ஜீவேதயம்"
வதிரி, கரவெட்டி.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

# நன்றி நவிலல்

தோற்றம்
12 . 04 . 1938



மறைவு
06 . 03 . 2019

வைத்திய கலாநிதி

## நடராஜா சிவராஜா

முன்னாள் தலைவர் - சமுதாய மருத்துவத்துறை. மருத்துவபீடம். யாழ். பல்கலைக்கழகம்
முன்னாள் ஆலோசகர் - உலக சுகாதார நிறுவனம்
தலைவர் - வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் தலைவர் - புற்றுநோயாளர் காப்பகம்
(வடக்கு - கிழக்கு). ஸ்தாபகர் - முன்நோக்கு அறக்கொடை நிதியம்.

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து. கடந்த 06.03.2019 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் வைத்திய கலாநிதி ந.சிவராஜா அவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டும் மலரஞ்சலிகளைச் செலுத்தியும். இரங்கல் செய்திகளை அனுப்பியும். பல்வேறு வகைகளில் வலிமிகுந்து துயருறும் அந்த வேளையில் எமக்கு ஆறுதல் அளித்த உங்கள் அனைவருக்கும் அவர்தம் குடும்பத்தினராகிய நாங்கள் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

47/3, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS 21313)(03 17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
05 . 12 . 1929



உதிர்வு
06 . 03 . 2019

## அமரர் செல்லத்துரை ஜெயலட்சுமி

பெற்றெடுத்த அன்னை நீர்
தெய்வம்! தெய்வம்! - உம்
பெரும் பணியில் நாம் உயர்ந்தோம்
வையம்! வையம்!
நல்லறத்தின் நாயகியே
அம்மா! அம்மா! உமை
நாமிழந்து துடித்தோமே
நாளும் சோகம்!

அன்னாரின் பிரிவுச்செய்தி கேட்டு உடன் வந்து துக்கம் பகிர்ந்து ஆகவேண்டிய காரியங்களை முன்னெடுத்து ஆற்றிய உறவுகள். அயலவர்கள். நண்பர்களுக்கும். மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள். பெனர்கள். மலர் வளையங்கள். கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் தங்கள் ஆறுதல்களை வெளியிட்டோர் தூரதேசத்திலிருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் வார்த்தை அளித்தோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (05.04.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CS 21313)(03 17)

# மரண அறிவித்தல்கள்

## ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை (வேணாட்)



நீர்வேலியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை (வேணாட்) கடந்த (03.04.2019) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் - புஸ்பராணி தம்பதியின் மூத்த மகனும் டொறிற்றா காமினியின் அன்புக்கணவரும் ஆன்ரியூலினா, அருள்ரியூஸ்றரன் (பிரான்ஸ்), வினோத்ரீயூன்சன் (கத்தார்), வெனிக் கயூஸ்றரன், தனுஸ்த்தனா, பவுஸ்த்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜீவன் (பிரான்ஸ்), நிறோசா, கொலஸ்ரிக்காஆகியோரின் அன்பு மாமனாரும் டிவ்றிக்கா, வர்ஸ்நிக்கா, ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.04.2019) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் புனித பரலோகமாதா ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரலோகமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.


நீர்வேலி

நேரலையில்: www.santhanvideo.tk

077 190 3950

## கதிரவேலு இரத்தினம் (பாலையா)

(முன்னாள் தலைவர் - யாழ். மாவட்ட வாடகைக் கார் சங்கம்)



தோற்றம் 10.05.1949
மறைவு 03.04.2019


கொக்குவில் மேற்கு. வராகி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், பிரம்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு இரத்தினம் 03.04.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு -ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருனி - தங்கம் தம்பதியரின் மருமகனும், தங்கமணியின் (குஞ்சு) பாசமிகு கணவரும், சுதர்சினி, சுபாங்கினி, சுயாகரன் (லக்சியா), சுரேஜினி, சுயாத்தா ஆகியோரின் தந்தையும், நவரூபன், ரமேஸ், ரஜீவன், யேந்தினி, சன்ஜீவ்காந் (குட்டி) ஆகியோரின் மாமனும், நிவேதிகா, சந்திப், சௌமியா, கஷானா,கவிஷனா, ருஷானி, ஜனனிக்கா, ஆதி, கம்ஷவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
15/ 8, பிரப்பங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

பிறப்பு
09 . 06 . 1930



இறப்பு
02 . 04 . 2019

## சண்முகம் பொன்னுத்துரை

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பொன்னுத்துரை கடந்த (02.04.2019) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் (சீனத்தி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லையா, சின்னத்தம்பி, கந்தையா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரஞ்சிதமலர் (மாலா - பிரான்ஸ்), இராசேந்திரம் (மணிவண்ணன் - நோர்வே), நித்தியானந்தன் (மனோ - கொலண்ட்), சூரியகுமார் (அப்புச்சி - லண்டன்), சூரியகுமாரி (பபி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தமூர்த்தி (பிரான்ஸ்), பவானி (நோர்வே), வசந்தமலர் (வசந்தி - கொலண்ட்), ஜெனித்தா (லண்டன்), பார்த்தீபன் ஆகியோரின் மாமனாரும் காயத்திரி - பாபு, வினோத்ராஜ், கஜானன், கம்சாயினி, சகானா, மதுசா, மதீஸ்வன், வாசவன், திவ்வியன் ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஜெனிஷா, திஷான் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.04.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

83, மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.
021 221 2076, 077 844 8726

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23013/15/17)

# இந்தியா




1. தெற்கு ஆசியாவிலுள்ள ஒரு நாடு. இந்தியப் பெருங்கடல், அரபிக் கடல், வங்காள விரிகுடா என மூன்று கடல்களால் சூழப்பட்டுள்ளது.
2. மிகப் பழமையான நாகரிகத்தைக் கொண்ட நாடு.
3. பரப்பளவில் உலகின் ஏழாவது பெரிய நாடு. இங்கே சுமார் 120 கோடி மக்கள் வசிக்கின்றனர்.
4. 29 மாநிலங்களும் 6 ஒன்றியங்களும் தலைநகரமும் இருக்கின்றன.
5. 1947ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. இந்த நாட்டிலிருந்து இரண்டு நாடுகள் பிரிந்து சென்றன.
6. சந்திரயான் விண்கலத்தைச் சந்திரனுக்கும் மங்கல்யான் விண்கலத்தைச் செவ்வாய்க் கோளுக்கும் அனுப்பிய நாடு.
7. தேசிய விளையாட்டு ஹொக்கி. பிரபலமான விளையாட்டு கிரிக்கெட்.
8. இந்த நாட்டின் உயர்ந்த மலைச் சிகரம் கஞ்சன்ஜங்கா.
9. மாமரம் இந்த நாட்டில் தோன்றியது என்பதால் 'மாஞ்சிஃபெரோ இண்டிகா' என்று அறிவியல் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. தேசியப் பழம் மாம்பழம்.
10. இந்த நாட்டின் கொடியில் அசோகச் சக்கரம் இருக்கிறது.



இந்தியாவின் உயர்ந்த மலைச் சிகரம் 'கஞ்சன்ஜங்கா'

## வர்ணம் தீட்டுவோம்






## தெரிந்து கொள்வோம்



1. நடக்கமுடியாத பிராணி- முயல்
2. நதிகளற்ற தேசம்-அரேபியா
3. நாக்கில்லாத விலங்கு- முதலை
4. நீர் அருந்தாத மிருகம்- கங்காரு
5. நீல நிற இரத்தமுடையது- நண்டு இறால்
6. நீரை விரைவாக உறிஞ்சுவது- மணல்மண்
7. நீரில் மிதக்கும் தாவரங்கள்- ஆகாயத்தாமரை, இலைப்பாசி, சல்பீனியா
8. நீந்தத் தெரியாதது- ஒட்டகம்
9. நெல், சோளம், வெங்காயம் என்பவற்றின் இலை- தாள்
10. நெல்லிக்காயில் காணப்படும் விற்றமின்- C சீ
11. நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி- மேரிகியூரி
12. மகரந்தச் சேர்க்கை நிகழ உதவுவன- குளவி, தேனீ, வண்ணத்துப்பூச்சி
13. மகிந்த தேரரால் இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட பௌத்த நூல்- திரிபிடகம்
14. மனித உடலில் வியர்க்காத பகுதி- நாக்கு
15. மனித உடலில் இரத்தம் பாயாத பகுதி- கண்ணின் கருவிழி.

## இலங்கை தொடர்பான விடயங்கள்

1. இலங்கை வரலாற்றைக் கூறும் நூல்கள் எவை?
   மகா வம்சம், தீபவம்சம், சூளவம்சம்
2. இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு
   1948.02.04
3. இலங்கை குடியரசான ஆண்டு?
   1972
4. இலங்கையின் முதலாவது அரசதலைவர் யார்?
   சேர்.வில்லியம் கோபல்லாவ
5. இலவசக் கல்வியின் தந்தை யார்?
   சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா
6. இலங்கையின் முதல் தலைமை அமைச்சர் யார்?
   டி.எஸ்.சேனநாயக்கா
7. யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன்
   சங்கிலியன்
8. பன்னாட்டு விமான நிலையம் எங்கு அமைந்துள்ளது?
   கட்டுநாயக்கா
9. இலங்கையில் உள்ள இயற்கைத் துறைமுகம்?
   திருகோணமலை
10. இலங்கையில் முதலில் கட்டப்பட்ட குளம்?
    அபயவாவி

*த.தர்மிலன்*
*தரம்- 5*

## தவளையின் கடன்



கடன்கொடு கடன்
கொடு என்றே
குண்டுத் தவளை
கேட்கும்
தர்றேன் தர்றேன்
என்று
தாவும் தவளை சொல்லும்

தகரப் பெட்டியின் மீது
தூறல் விழுந்ததைப் போல
தவளைகள் இரண்டும் அங்கே
கடனுக்காகக் கத்தும்

குறுக்கே புகுந்த பாம்பு
கணக்கைச் சரியாய்த் தீர்க்கும்
பாம்பின் வயிற்றில் சென்று
பாடம் கிடைத்தது நன்று


வீடு வாடகைக்கு
நாவலர் வீதியில் மனோகரா சந்திக்கும் மானிப்பாய் வீதிக்கும் இடையில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு-077 935 2775, 077 500 5972

20/- Banner Printing
"அச்சுத்துறையில் கல்வியர் சமுகத்தோடு ஒன்றிய நிறுவனம்"



Best Quality
My Desinner - My Printer
Colombo Printers
666, K.K.S Road, Jaffna.
021 221 7030, 077 1974875

MAJESTIC CINEPLEX





மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999
CEYLON THEATRES
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1558
சீட்டிழுப்பு திகதி 04.04.2019
வெற்றி இலக்கங்கள்
05 19 56 68 H
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ 29, 131, 380/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 04.04.2019
வெற்றி வாரம் 2492
வர்ணம் கபிலம்
மேடம்
வெற்றி இலக்கங்கள்
05 09 33 43
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2, 278, 604/=
05.04.2019ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 575
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.04.04
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 51,667,070/-
வெற்றி இலக்கங்கள்
04 13 20 59 C
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778




## இது புதுசு

வீட்டைத் தண்ணீர் ஊற்றி துப்புரவு செய்யும் கருவிகள் விற்பனைக்கு வந்துள்ளன. இவை ஆயிரத்தி 990 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.


# சம்பளத்தை உயர்த்திய சமந்தா



தமிழ், தெலுங்கு சினிமாவில் முன்னணி நாயகியாக வலம் வரும் சமந்தா திருமணத்துக்கு பிறகும் படங்களை தேர்ந்தெடுத்து நடித்து வரும் நிலையில், தனது சம்பளத்தை உயர்த்தியிருக்கிறாராம்.
இரண்டு கோடி ரூபா சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த சமந்தா, 'யூ டர்ன்' படத்துக்குப் பிறகு தனது சம்பளத்தை இரண்டரைக் கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறார். மலையாளத்தில் 'அம்மா' அமைப்பைப் போல், தமிழ் சினிமா நடிகைகளுக்கு ஏற்படும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஓர் அமைப்பை நிறுவ இருக்கின்றனர் தமிழ் நடிகைகள். அதில், சமந்தாவுக்கு முக்கியப் பொறுப்புத் தரப்பட இருக்கிறது.



என் பொண்டாட்டிய என்ன தான் செய்றது?
ஏன் என்ன பண்றாங்க?
நான் எது செஞ்சாலும் என் பொண்டாட்டி குறுக்கே நிக்கிறா. கார் ஓட்டி பாரேன்.




"மாப்பிள்ளைக்குக் கொஞ்சம் வயசாகி இருக்கலாம்... அதுக்குன்னு பொண்ணுவீட்டுக்காரங்க இப்படிப் பேசக்கூடாது..." "ஏன்...?"
"'மாப்பிள்ளைக்கு என்ன போடுவீங்கன்னு கேட்டா, 'பல்செட் போட்றோம்'னு சொல்றாங்க!"




## ருவீற்ஸ்

கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar

நீங்கள் சொல்வதை எந்த எதிர்ப்பும் இன்றி மனைவி ஒப்புக் கொள்கிறார் எனில் மகிழ்ச்சியில் துள்ளி குதிக்காதீர்கள்!!
அதை விட பெரிதான் ஒன்றை உங்களிடம் வெகு விரைவில் அவர் கேட்க போகிறார் என்று பொருள்!!!

சிதறல்கள் @mujib

கொஞ்சமா சம்பாதிச்சாலும்
தாய் தந்தையோடு இருக்கனும்
அதுவே பாக்கியம்
வாழும் போதே நன்மை செய்வதென்றால்
அவர்களை நன்றாக கவனித்து கொள்வது தான்...

Faz @fazzz

மனைவியை தாயாக நினைத்து பார்த்துக்கொள்ளும் ஆண்களும் கணவனை பிள்ளையாக நினைத்து பார்த்துக்கொள்ளும் பெண்களும் இருக்கும் வரை உண்மையான காதலுக்கு சாவில்லை.

அனகை எஸ்.கோபி @Anagai

தன்னை உயர்ந்த ஜாதியாகவும், இன்னொரு மனிதனை தாழ்ந்த ஜாதியாகவும் கருதுபவன் மனநோயாளி...






# மக்கள் இதழியல் இயக்கம்

## கோலியாத்தை வீழ்த்தும் தாவீதின் முயற்சி

தேவநாயகம் தேவானந்த்

மக்கள் ஊடகங்களில் நம்பிக்கையை இழக்க ஆரம்பித்திருக்கிறார்கள். மக்களுக்கும் ஊடகங்களுக்கும் இடையில் பெரியதொரு இடைவெளி உருவாகி வருகின்றது. பெரு வணிக நிறுவனங்களின் ஆதீக்கத்தில் ஊடகங்கள் சிக்கிக் கொள்ள மக்கள் தனித்து விடப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சூழலில் உலகெங்கும் செய்தித்தாள்கள் வீழ்ச்சியடைந்து, வியாபாரத்திலிருந்து வெளியேறுகின்றன. வணிகப் பத்திரிகைகளின் நம்பகத்தன்மை எப்போதும் குறைவாகவே உள்ளது. இன்று உலகெங்கும் செய்தி ஊடகங்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. அண்மையில் அமெரிக்கா போன்ற பல நாடுகளின் தேர்தல் முடிவுகள் ஊடகங்களிலிருந்து மக்கள் அதிக தூரம் சென்றுவிட்டதைக் காட்டுகின்றன என்கிறார்கள் அவதானிகள்.

ஊடகங்களில் ஜனநாயகம் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. செய்தி ஊடகம் நம்பகத்தன்மையையும், பார்வையாளர்களையும், துல்லியமாக இழந்துவருகின்றது. இதற்குக் காரணம் மக்களிடம் ஊடகத்துறை இல்லை என்பதாகும். இப்போது மக்கள் இதழியலை நோக்கிப் பயணிக்க வேண்டிய காலகட்டத்தில் உள்ளனர். இந்தப் பயணம் இதழியல் துறையை ஊடகத்துறையை மீளவும் உயிர்ப்பிக்க உதவுவதோடு மக்கள் பலமடையவும் உதவும்.

'24 மணிநேர ஊடகங்களுக்கு தீனி போடமுடியாமல் ஒரு வகைப் பீதியில் இன்று ஊடகங்கள் காணப்படுகின்றன. 'தொழில்முறை பீதி முரண்பாட்டாளர்களாக' பெரு வணிக ஊடகங்கள் விளங்குகின்றன. கேபிள் டிவி 'செய்திகள்', பத்திரிகைகள் (உயர் மற்றும் தாழ்ந்தவை), இதழ்கள், வானொலி மற்றும் இணையங்கள் போன்றன எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் மக்கள் பிரச்சினைக்கு ஈடுகொடுக்க முடியாமல் திண்டாடுகின்றன. ஊடக நிறுவனங்கள் தாம் முன் திட்டமிட்ட 'ஒரே வகைமாதிரியான புலம்பல்களை' மீண்டும் மீண்டும் தருவதனூடாக மக்களை ஏமாற்ற நினைக்கின்றன. இந்த அழுகை மக்களிடமிருந்து தூரச் சென்று கொண்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

**நீதிக்கான சவால்களில் ஊடகப்பிரச்சினை மையம்**

ஜனநாயகம், சுதந்திரம், நீதி ஆகியவற்றுக்கான சவால்களில் 'ஊடகப் பிரச்சினை' இப்போது மையமாக இருப்பதாக ஏற்கனவே பல நாடுகள் கூறிக்கொண்டிருக்கின்றன. அண்மையில் இலங்கையில் நடந்த அரசியல் குழப்பங்களில் ஊடகங்கள் பலவற்றின் குறிப்பாகச் சிங்கள ஊடகங்களின் புலம்பல் ஜனநாயகத்துக்கான பெரும் சவாலாக உருவெடுத்திருக்கிறது. இன்று இது பல நாடுகளில் பெரிய சவாலாக உள்ளது. நாம் இதற்கு என்ன செய்ய முடியும் என்பதே இன்று ஊடகத்துறையினர் முன்னால் உள்ள கேள்வியாகும்.



இதனால் மக்களை ஊடகத்துறையை நோக்கி, இதழியலை நோக்கி அழைத்து வர வேண்டிய பெரும் பணியைச் செய்தாக வேண்டியிருக்கின்றது.

இந்தப் பிரச்சினைக்கான தீர்வாக வெப்02 தொழில்நுட்பத்தின் வரவு இன்டர்நெட், இவை அமையுமென்று எமக்குச் சொல்லப்பட்டது. அனைத்தையும் தீர்த்து வைக்கும், ஜனநாயக மயமாக்கப்பட்ட ஊடகங்களின் பிரகாசமான புதிய உலகம் இதன் மூலம் கிடைக்கும் என்று கூறப்பட்டது. ஆனால் 'புதிய செய்தி' மக்களுக்கானதாகத் தோன்றினாலும் அதுவும் நம்பகத்தன்மையை இழந்து வருகின்றது. சமூக ஊடகங்களும் பெரு வணிக நிறுவனங்களின் நலன் சார்ந்தவையாக மாறியிருக்கின்றன. மக்கள் சார்ந்தவையாக இல்லாமல் மக்களைப் பாதிப்புக்குள்ளாக்குபவையாகவே உருவாகின்றன. இவை பழைய விதிமுறைளை இடமாற்றுவது போல் தோன்றினாலும் பழைய விதிகளை இன்னும் பொருத்துகின்றன. இதன் சக்தி ஏற்கனவே வலுவாக உள்ளவர்கள் மீது கவனம் செலுத்தி அவர்களை வலுப்படுத்துகிறது. ஒவ்வொரு புதிய இயக்கமும், கூட்டிணைந்த புதிய தொழில்நுட்பங்களும் பெருவணிக நிறுவனங்களால் உறிஞ்சப்படுகிறது. இதனால் மாற்று ஊடகங்கள் உருவாகும் வாய்ப்புக்கள் இல்லாது போகின்றன.

இன்னும், மாற்று ஊடகங்கள் பெருமுதலாளிகளால் சுரண்டப்பட்டு, கீழே இருந்து விரிவுபடுத்தப்பட்டு, விமர்சனக் கதைகள் கொண்டவர்களிடம் பேசுவதற்கும், தங்கள் சொந்த ஊடகங்களை உருவாக்குவதற்கும் போதுமான ஆதாரமாக இருப்பதற்கும் வாய்ப்புகளை வழங்குகின்றன.

**மக்கள் இதழியலின் இன்றியமையா நிலை**

இப்போது மக்கள் இதழியல் என்ற எண்ணத்தை உருவாக்கி விதைத்து அதை ஒரு விருட்சமாக வளர்த்தெடுக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சிந்தனை தென்னாசியாவிலிருந்து முளைவிடுவது குறிப்பாக இந்திய, இலங்கையிலிருந்து முளைவிட்டுக் கிளம்புவது கவனத்துக்குரியதாகும். சென்னைப் பல்கலைக்கழக தொடர்பியல் மற்றும் இதழியல் துறை ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து இந்தச் சிந்தனை முகிழ்த்திருப்பது முக்கியமானது. அதன் ஒரு பணியாக மக்கள் இதழியலை நோக்கி என்ற இலங்கை யாழ்ப்பாண மாநாடு அமைகிறது.

இது மக்களை ஏமாற்றும் பெருவணிய நிறுவனங்களின் ஆக்ரோசத்துக்கு முன்னால் ஒரு சிறு அதிர்வு எனலாம். இது கோலியாத் என்ற பிரமாண்டமான சக்தியை வீழ்த்த கவன் கொண்டு தயாராகும் தாவீதின் முயற்சிக்கு ஒப்பானது என்பேன். கோலியாத்தை நிச்சயம் வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை உண்டு.

'மாற்று பத்திரிகை' மற்றும் அதன் இளைய உறவினர், 'டிஜிட்டல் செயல்திறன்', பொதுமக்களின் கவனத்தையும் ஆதரவையும் கைப்பற்றுவதில் தோல்வியடைந்துள்ளன. மனிதன் தொழில்நுட்பத்தில் அதிகம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பது இன்று சவாலாகியுள்ளது.

பொதுமக்கள் இன்னும் உண்மையான எழுத்து மற்றும் ஒழுக்கமான உற்பத்தி மதிப்புடன் ஒத்துழைத்த உண்மை மற்றும் உண்மையான அறிக்கைகளை, கதைகளை மதிக்கின்றனர், விரும்புகிறார்கள்.

இன்று பல வலைப்பதிவாளர்களிடமிருந்து மிகுந்த சிதைவுற்ற இழிவான பதிவுகளே அதிகளவில் கிடைக்கின்றன. இது மக்களிடம் நம்பிக்கையை இழக்கின்ற செயல். மக்கள் எதிர்பார்ப்பை சிதைப்பதாகும்.

**எதிர்காலத்தின் இருப்பை பேசவேண்டும் ஊடகங்கள்**

ஏதிர்காலத்தில் மக்களின் பசியையும் தாகத்தையும் பற்றிப் ஊடகங்கள் பேச வேண்டும். இதைச் சிறந்த முறையில் செய்ய முடியும். மக்களின் கதைகள், நேர்காணல் உண்மையான நபர்களைப் புகாரளித்தல், அவர்களின் குரல்கள் துல்லியமாகவும் விலகல் இல்லாமலும் பதியப்பட வேண்டும். மனித நிகழ்வுகளில் ஒவ்வொரு நாளும் என்ன நடக்கிறது என்பதை, 'யார், எப்போது, ஏன், எப்படி' இந்த அடிப்படைகளை புரிந்து கொண்டு நடைமுறைப்படுத்துவது இலகுவானது.



இன்று ஊடகக் கற்கைகளும் சிதைவுற்ற தோற்றுப்போன ஊடக செயல்முறையையே கற்பிக்கின்றன. மக்களைப்புரிந்து கொள்ள இரண்டு அல்லது நான்கு வருட பத்திரிகை பள்ளியில் இருந்து ஒரு பட்டம் தேவையென்றில்லை. அதற்கான மனம் இருந்தால் போதும் எனலாம். பெரும்பாலான மக்களுக்கு கதைகள் சொல்வதில் சில திறமை இருக்கின்றது. இதனை வளர்த்தெடுக்க தவறுகிறோம். ஒரு வகைமாதிரி அச்சுக்களில் எல்லாவற்றையும் உருவாக்க முயல்கிறார்கள். இதனைத் தவிர்த்து பல்வகைமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் உலகமயமாக்குவதைத் தவிர்த்தாக வேண்டும்.

ஊடகங்கள் மக்களுக்குத் திரும்ப வேண்டும். மக்கள், இன்று செய்தி ஊடகங்களை நம்புவதில்லை என்பதற்கு நல்ல உதாரணம் ஒரு செய்தியை கேட்டதும்'அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்' என்றே குறிப்பிட கிறார்கள். அதனை அவர்கள் நம்பவில்லை என்பது இதனூடு புலனாகிறது. அதாவது, பொய்யுணர்வுடன் அல்லது முரண்பாடாக அதனை நோக்குகிறார்கள். இதனால் மக்கள் நம்பும் ஊடகங்களை நோக்கி நாம் பயணிக்க வேண்டும்.

**வணிக் ஊடகங்களின் இருட்டடிப்புத் தகாதது**

சமூக இயக்கங்கள், உள்நாட்டு எதிர்ப்பு மற்றும் பிற பிரபல போராட்டங்களுடன் வணிக ஊடகங்களின் உறவு என்பது புறக்கணிப்பு அல்லது வெளிப்படையான விரோதப் போக்கானதாகும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு சிறந்த உதாரணமாக தமிழ்நாட்டில் அண்மையில் நடந்த ஜல்லிக்கட்டுப் போராட்டம், பசுமைவழிச்சாலைப் போராட்டம், ஸ்ரெரிலைட் ஆலைக்கெதிரான போராட்டம், அணுஉலைக்கெதிரான போராட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்தப் போராட்டங்கள் பெரு வணிக நிறுவன ஊடகங்களால் இருட்டடைப்புச் செய்யப்பட்டதைக் குறிப்பிட முடியும்.

மனித உரிமைகள், நீதி, சுதந்திரம், இன்னும் ஜனநாயகம் ஆகியவற்றுக்காக ஏற்பாடு செய்யப்படும் மக்கள் பொதுவாக நிறுவன ஊடக அமைப்புகளால் பெரும் அவமதிப்புடன் நடத்தப்பட்டார்கள் அல்லது நடத்தப்படுகிறார்கள். இதையே அரச ஊடகங்களும் செய்கின்றன. இன்று ஒரு செய்தியைக் கேட்டவுடன் பொதுமக்களிடம் எழும் முக்கியமான கேள்வியாக அமைவது 'எப்படித் தெரியும்?' என்பதாகும். இதற்கான பதிலை வழங்குவது தான் மக்கள் இதழியலின் நோக்கமாகும். உண்மையான ஊடகவியலாளர்கள் சமூக இயக்கங்களுடன் கைகோர்த்து நடக்க வேண்டும், அவர்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டும். அவர்களின் கதைகளின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கண்டத்திலும் சமூகங்களை சிதைக்கின்ற அநீதி, மற்றும் அடக்குமுறைக்கு தீங்கு விளைவிப்பதற்கும், மோசமடையச் செய்வதற்கும் உதவுகின்ற ஊடகங்களை ஒதுக்கித் தள்ளுவதற்கு போராடுவதும் முக்கியமானதாகும்.

இந்தப் போராட்டங்களை வெல்வதற்கு தகுந்த உத்திகளையும் தந்திரோபாயங்களையும் உருவாக்குவதற்கு இந்தச்சிந்தனையின்பால் ஒன்றிணைதல் வேண்டும். உண்மையான பத்திரிகைக்கு செல்லும் பாதையில் நாம் நடைபயிற்சி செய்ய வேண்டும்.

தமிழ் இதழியல் இயக்கத்தினுடைய இலங்கைக்கான தலைவரும் தமிழ் இதழியல் மாநாட்டின் ஒழுங்கமைப்பாளருமான தேவநாயகம் தேவர்னந்த்துடனான சந்திப்பு

நான்காவது தமிழ் இதழியல் மகாநாட்டினைப் பற்றிக் குறிப்பிடுங்கள்?

தமிழ் இதழியல் மாநாடு சென்னையில் 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதனை சென்னைப் பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் தொடர்பியல் துறையின் லைவர் பேராசிரியர் கோ. இரவீந்திரனும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தோம். அப்போது நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளராகப் பணியாற்றியிருந்தேன்.

*கட்டுரையாளர்*
*தலைவர்*
*மக்கள் இதழியல் இயக்கம்*
*இலங்கை*

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாதீட்டுக்குள் சிக்கியுள்ள தமிழ் அரசியல்

ஐக்கியதேசியமுன்னணிதனித்து அரசமைத்தபின்னர் முன்வைக்கப்பட்ட வருடாந்த நிதி அறிக்கையின் மீதான 3ஆவது வாசிப்பின் இறுதி வாக்கெடுப்பு இன்று. மகிந்த ராஜபக்ச தலைமையிலான எதிர்த் தரப்பினர் என்னதான் கூச்சல் போட்டாலும் முழக்கமிட்டாலும் நிதி அறிக்கைநாடாளுமன்றத்தில்நிறைவேற்றப்பட்டுவிடும் என்பதைத் திடமாக எதிர்பார்க்கலாம்.

இன்றைய ஆட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தயவில்தான்தங்கி நிற்கின்றது என்கிறபோதும் ஆட்சியைக் கவிழ்க்கும் மனோநிலையில் தமிழ்க் கூட்டமைப்பு இல்லை என்பது தெளிவு. புதிய அரசமைப்பை உருவாக்கவில்லை, அரசியல் கைதிகளை விடுவிக்கவில்லை, காணிகளின் விடுவிப்பும் முழுமையாக நடந்து முடியவில்லை, காணிகளின் சுவீகரிப்புக்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது, வடக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கும் சிங்களவர்களே நியமிக்கப்படுகிறார்கள், பௌத்த மத ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படவில்லை, திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள்தடுக்கப்படவில்லை என்று பல பிரச்சினைகள் காரணமாக ஆட்சியாளர்கள் மீது கூட்டமைப்பு அதிருப்தியும் விசனமும் கொண்டிருக்கின்றது என்கிற போதும் இந்த நிதி அறிக்கையை ஆதரிக்காது விடுவதன் மூலம் ஆட்சியைக் கவிழ்க்கக் கூட்டமைப்பு ஒருபோதும் முன்வராது.

அதற்கு இருகாரணங்கள் உள்ளன. முதலாவது இந்த ஆட்சியைக்கவிழ்த்தால் அது மகிந்தராஜபக்சவுக்குச்சாதகமாகப் போய்விடும், அவர் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடுவார்என்றும் அத்தகைய நிலையைத்தமிழ் மக்கள்விரும்பவில்லை என்றும் கூட்டமைப்புக் கருதுவது ஒரு காரணம். அதேசமயம், வடக்குகிழக்கு அபிவிருத்திக்கு ரூபா 5 ஆயிரம் மில்லியன் இந்தநிதி அறிக்கைமூலம் ஒதுக்கப்பட்ட நிலையில் ஆட்சியைக் கவிழ்த்தால் அந்த நிதியும் கிடைக்காமல் போய்விடும் என்கிற சிக்கல் நிலை.


2015ஆம் ஆண்டில் தமிழ்க் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளித்த எந்தவொரு விடயத்தையும் முழுமையாக நிறைவேற்ற முடியாமல் போய்விட்ட நிலையில் அபிவிருத்தியையும் கைவிடுவது அதனது தற்கொலைக்கு ஒப்பானதாகிவிடும். இனிவரும் சில ஆண்டுகளின் அரசியலை இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களைக் காட்டியேதான் அந்தக் கட்சி முன்னெடுக்க வேண்டியிருக்கும் நிலையில் அந்தத் துரும்பையும் இழக்க அது விரும்பாது.

கடைசியில் தீர்வும் இல்லை, அபிவிருத்தித் திட்டமும் இல்லை என்கிற கையறு நிலையை எதிர்கொள்வதற்குக் கூட்டமைப்பு ஒருபோதும் விரும்பாது என்கிறதுணிவில்தான் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் துணிந்து கூட்டமைப்பைத் தூக்கி எறிந்து பேசுகின்றார்.

உரிமையா சலுகையா என்று கேட்டு நாங்கள் சலுகையைப் பார்க்கிறோம் என்றவர்களைத் துரோகிகளாக அடையாளம்காட்டியதமிழ்அரசுக்கட்சியை முதன்மைப் பங்காளியாகக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு இன்று சலுகையையாவது தக்கவைத்துக் கொள்வதற்காக ஒரு ஆட்சியைக்காப்பாற்ற வேண்டியநிலைக்குத்தள்ளப்பட்டிருப்பது கால முரண்.

எது எப்படியாக இருப்பினும் கூட்டமைப்பின் ஆதரவுடன் இந்தப் பாதீடு வெற்றிகரமாக நிறைவேறும். அதன் பின்னர் அந்தக் காரணம், இந்தக் காரணம் என்று கூறி அபிவிருத்திக்கான நிதியையும் தராமல் இழுத்தடித்து கொழும்பு ஏமாற்றிவிடாமல் இருக்குமா என்பதே இப்போதுள்ள கேள்வி.


ஏனெனில் ஒவ்வொரு தடவையும் தனது ஆட்சிக்கு ஆபத்துவந்தபோதெல்லாம்புதிய அரசமைப்பை உடனே கொண்டுவருவேன் என்று கூட்டமைப்புக்கு வாக்குறுதி வழங்கித்தான் அதனது ஆதரவைப் பெற்றார் ரணில். ஆனால் இறுதியில் ஏமாற்றிவிட்டார். அபிவிருத்தி விடயத்திலும் அப்படி ஏதும் நடக்காது என்பதற்கு உத்தரவாதம் ஏதுமில்லைஎன்றபோதும் அவரது பாதீடு என்னவோ கூட்டமைப்பு ஆதரவோடு நிறைவேறிவிடுவது திண்ணம்.



# தேன்போன்ற வாழ்வு திசைமாறிப் போச்சே நிம்மதி இழந்தாச்சே!

கே.எஸ்.சிவஞானராஜா

'அக்கரைப் பச்சைகள்'' ஒருபோதும் இக்கரைக்குப் பசியாற்றப் போவதில்லை. அதேபோல இக்கரைகளை நம்பியும் அக்கரைகள் நிம்மதியாக இருக்கவும் முடியவில்லை. ஐ.நாவின் பிடியிலிருந்து இலங்கை அது எண்ணியபடி தப்பித்துக் கொண்டது. ஐ.நாவின் அறிக்கையை இலங்கையின் புத்திசாலிப் பிரதி நிதிகள் மறுத்து இடித்துரைத்தனர். கால அவகாசம் கிடைத்தது.



வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை!, போர்க் குற்றங்களில் அரசு ஈடுபடவே இல்லை!, மனிதப் புதைக்குழி அறிக்கை சரியானது!, இராணுவத்தினரின் உரிமை பாதுகாக்கப்படும். ஐ.நாவில் வெளிநாட்டு நீதிபதிகளை நிராகரித்து நாட்டின் சுயாதீனத்தைப் பாதுகாத்ததாக ரணில் வெற்றிப் பெருமிதம் கொள்ளும் அளவுக்கு இலங்கையின் ஜனநாயகம் செயலிழந்து செத்துப் போயுள்ளது.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று போற்றப்படும் இலங்கை கதியிழந்து, கரையிழந்து, நிதியிழந்து நீதியிழந்து நின்றபோதும் காப்பாற்றச் சில நாடுகள் இருந்ததனால் குற்றங்களிலிருந்தும் தப்பித்துக் கொண்டது.

தாமதமாகும் காணிகள் விடுவிப்பு, காணிகள் சுவீகரிப்பு, பன்னாட்டு விசாரணை, கலப்பு விசாரணை, மறுவாழ்வுக்கு போதிய கடன் வழங்காமை, சுயதொழில் வாய்ப்பு, விவசாய அபிவிருத்தி, மீன்பிடித்தொழில் அபிவிருத்தி, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை மற்றும் பரந்தன் முல்லைத்தீவு, புல்மோட்டை, வாழைச்சேனை தொழிற்சாலைகள், மட்பாண்ட ஓட்டுத் தொழிற்சாலைகள் யாவுமே உரியவாறு மக்களைச் சென்றடையாதவாறு தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

இதற்கப்பால் வடக்கு,கிழக்கு எல்லைப்புறங்கள் நாளாந்தம் அபகரித்து பெரும்பான்மையினருக்கான குடியேற்றத் திட்டங்களுக்கு இடமளிக்கப்படுகின்றன.

திடீர் திடீரென பௌத்த விகாரைகள் காடுகளுக்குள்ளும், நாடுகளுக்குள்ளும் அவசர அவசரமாக முளைக்கின்றன. சமய ரீதியாக ஆலயச்சிலைகளும், முகப்புத் தோரணங்களும் நிந்தனை செய்யப்படுகின்றன. அடித்து நொருக்கப்படுகின்றன. குறிப்பாக வடக்கு மாகாணம் மூன்றாவது கடைசி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. காணிகள் மேலும் சுவீகரிக்கப்படுகின்றன. போதையாலும் களவுகளாலும் அடாவடிகளினாலும் வெறும் கட்டடங்களினாலும் பாலியல் தூண்டல்களினாலும் நாகரீக மோகங்களினாலும் அரசியல் ஆன்மிகப் போலிகளினாலும் வடக்கு மாகாணம் துவண்டு போயுள்ளது. அரசியல் சுதந்திரம் பறிபோய்விட்டது. வழக்கோடு ஆன்மிகம் கட்டடங்களாகவும் மேடைகளாகவும் ஆரவாரங்களாகவும் வடிவம் பெற்றுள்ளது. இரண்டிலும் ஒரே குரலுக்கு வாய்ப்பில்லை. தேனான இந்த மண் திசைமாறி, நிலைமாறி, நிம்மதியும் இழந்தாச்சு. எந்தத் தலைமைகளும் மண்ணுக்கேற்றதாயில்லை!க திரைக்குப் பாரமானவர்களே!



> தாமதமாகும் காணிகள் விடுவிப்பு, காணிகள் சுவீகரிப்பு, பன்னாட்டு விசாரணை, கலப்பு விசாரணை, மறுவாழ்வுக்கு போதிய கடன் வழங்காமை, சுயதொழில் வாய்ப்பு, விவசாய அபிவிருத்தி, மீன்பிடித்தொழில் அபிவிருத்தி, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை மற்றும் பரந்தன் முல்லைத்தீவு, புல்மோட்டை, வாழைச்சேனை தொழிற்சாலைகள், மட்பாண்ட ஓட்டுத்தொழிற்சாலைகள் யாவுமே உரியவாறு மக்களைச் சென்றடையாதவாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

# தமிழ் கலாசாரம் தொலைகின்றது

## சென்னைப் பல்கலையின் இதழியல் மற்றும் தொடர்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் இரவீந்திரன் இடித்துரைப்பு

யாழ்ப்பாணம்,ஏப் 5

எமது கலாசாரம் எது என்பதை மறந்து அலைபேசிக் கலாசாரத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் காலமாக இது அமைகிறது இவ்வாறு சென்னைப் பல்கலைக் கழக இதழியல் மற்றும் தொடர்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கோபாலன் இரவீந்திரன் தெரிவித்தார்.





யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டில் தமிழக நாட்டார் கலைகளின் பண்பாட்டுத் தொடர்பியல் ஆற்றுகை நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர்பாடல் சாதனத்தின் வளர்ச்சி என்பது அபரீதமானது. ஆனால் அதனை மிகையாகப் பயன்படுத்துவதால் அது மனிதத் தொடர்பியலை இல்லாமல் செய்கிறது. இதனால் எமக்கு உரியவை எவை என்பது மறந்துபோய் விட்டது. நாட்டில் அபிவிருத்தி ஏற்படும் போது பண்பாட்டின் அபிவிருத்தி தொடர்பில் மறந்து போகிறார்கள். அதனையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். எமக்குரியவை என்ன என்பது எமக்கு தெரியாமல் இருப்பதால் அதனை வைத்து எங்களை ஏமாற்றுகிறார்கள். எமது மொழியும், எமது உள்ளூர் உற்பத்திகளும்தான் ஆரம்ப பாரம்பரிய அடையாளங்களாக உள்ளன. அதிலிருந்து நாம் எமது பாரம்பரியத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். தொலைபேசி என்ற ஒன்று இப்போது எல்லாவற்றையும் செய்யும் பொருளாகிவிட்டது. அதனில் மூழ்கிய சமுதாயமொன்று உருவாகிவிட்டது. அதனையும் கடந்து மொழி, பழக்கவழக்கங்கள், பண்புகளை நாம் நினைவுபடுத்தி எமக்கு உரியவை எவை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்வில் சென்னை பல்கலைக்கழக மாணவர்களால் பறை இசை நடன ஆற்றுகையும் இடம்பெற்றது. நிகழ்வில் பல்கலைக் கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-7)

## புரவு பெருமக்கள் விருது வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 5

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில், உயர்ந்த வரி செலுத்தும் புரவு பெருமக்களுக்கு மதிப்பளித்து சிறப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வு, செல்வா பலஸில், நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இறைவரித் திணைக்கள பிராந்திய ஆணையாளர் பந்துல கப்புத்தந்திரி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், இறைவரித் திணைக்கள ஆணையாளர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ.5)

## மகிந்த – ஹனா நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, ஏப். 5

எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. குறித்த சந்திப்பு நேற்று வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும், மாகாணசபைத் தேர்தல் ஒரு வருட காலமாக ஒத்திவைக்கப் பட்டிருக்கிறமை குறித்தும் இந்தச் சந்திப்பின்போது ஹனா சிங்கருக்குத் தெரிவித்தோம் என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். (ம)



## மட்டக்களப்பில் சூட்டுக் காயத்துடன் நபரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஏப். 5

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்று பிரதேசத்துக்குட்பட்ட ஈரளக்குளம் வனப் பகுதியிலிருந்து துப்பாக்கி சூட்டு காயத்துடன் நபரொருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது. முறக்கொட்டான்சேனையைச் சேர்ந்த கணேசமூர்த்தி கருணாகரன் (வயது 25) என்பவரே உயிரிழந்தவரென அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலத்தில் கட்டுத்துப்பாக்கியின் ரவை காயம் காணப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கரடியனாறு பொலிஸார் விசாணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## எஸ்.ரி.எவ். அதிகாரி சுட்டுத் தற்கொலை!

கொழும்பு, ஏப். 5

அலரி மாளிகையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையின் அலுவலர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்தார்.

தன்னுடைய உத்தியோகபூர்வ துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். காலை 8.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வரகாபொல, கந்தகம பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய தில்ருக்ஷ சமரசிங்க என்பவரே உயிரிழந்த நபராவார். (ம-22)

## பெற்றோல் குண்டுகளுடன் இரு இளைஞர்கள் கைது

கொடிகாமம், ஏப். 5

வரணி இயற்றாலைப் பகுதியில் பெற்றோல் குண்டுகளுடன் இரு இளைஞர்களை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமக்கு நேற்றுக் கிடைத்த தகவலையடுத்து இயற்றாலைப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் குறித்த இரு இளைஞர்களிடமிருந்து பெற்றோல் குண்டுகளைக் கைப்பற்றியதுடன் இருவரையும் கைது செய்துள்ளனர். அவர்கள் இருவரும் சாவகச்சரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரையும் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல மன்று அனுமதித்தது. (ம-9)

## மறைகாணி, பாகங்கள் திருடியவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள கடை ஒன்றை உடைத்து மறைகாணிகள் (சிசிரி கமராக்கள்) மற்றும் அதன் சாதனங்களைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள பித்தளை, இரும்புப் பொருள்கள் விற்பனை செய்யும் கடையில் பொருத்தப்பட்டிருந்த நிலையில் அவை திருட்டுப் போயிருந்தன. எனினும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்படவில்லை. யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தினேஷ் கருணாரத்னவின் கீழ் செயற்படும் சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவினர், கொட்டடியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரைச் சந்தேகத்தின் அடிப்படையில் நேற்றுக் கைது செய்தனர். அவருடமிருந்து சிசிரிவி கமராக்கள் மற்றும் அதனைப் பொருத்தும் சாதனங்கள் கைப்பற்றப்பட்டன.

அவை தொடர்பில் சந்தேகநபர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் அவை திருடப்பட்ட கடையின் உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்டது. சான்றுப்பொருள்களுடன் சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு-37)

## பண்பாடற்ற தொடர்பியல்த் தளமாக மாறியுள்ளன இன்றைய ஊடகங்கள்

### பேராசிரியர் கோபாலன் இரவீந்திரன் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 5

ஊடகங்கள் இன்று பண்பாடு அற்ற தொடர்பியல் தளங்களாக மாறும் தன்மையை அவதானிக்க முடிகிறது இவ்வாறு சென்னைப் பல்கலைக்கழக இதழியல் மற்றும் தொடர்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கோபாலன் இரவீந்திரன் தெரிவித்தார்.



பேராசிரியர் நந்தியின் நினைவுப் பேருரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

இதுவரை காலமும் ஒரு நல்ல தமிழ்ப்படம் வெளிவரவில்லை என்றே நான் கூறுவேன். தமிழர் வாழ்வியல் அம்சங்களை வெளிப்படுத்தக் கூடிய தமிழ் படம் என்று ஒன்றும் வரவில்லை. இன்றைய அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் என்ன செய்கின்றன என்று புரியவில்லை. தமிழ்... தமிழ்... என்று சொல்லிக் கொள்கிறார்கள் ஆனால் அங்கு ஒன்றும் இல்லை. ஊடகங்கள் ஊடக தன்மையை ஊடக தர்மத்தை இழந்து நிர்வாணமாக நிற்கின்றன. தம் மண்ணின் வாசனையோ அல்லது தம் மொழி மரபையோ பறை சாற்றுபவையாக ஊடகங்கள் அமையவில்லை. பண்பாடு அற்ற பண்பாட்டுத் தளங்களாக அவை உள்ளன. தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலி போன்ற எல்லாவகையான ஊடகங்களும் அதைத்தான் செய்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தினத்தந்தி அதிகளவு விற்பனை யாகும் பத்திரிகையாக உள்ளது. அதற்குக் காரணம் அந்தப் பத்திரிகையைப் படிக்கும் போது இன்னொருவர் எமக்கு சொல்லுவது போன்று அமைகிறது. பேச்சு தமிழ் மரபு மாற்றப்படவில்லை. ஆகவே ஊடங்கங்கள் ஊடக தர்மத்தில் அந்த மண்ணின் பிரிதிபலிப்பாக அமைய வேண்டும் - என்றார். (ம-7)



## மூக்குக் கண்ணாடி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

இலவசக் கண் பரிசோதனை செய்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 117 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் அண்மையில் வழங்கப்பட்டன. கோப்பாய் பிரதேச தேசோதய சபையின் ஏற்பாட்டில் கோப்பாய் பிரதேச செயலக சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கியில் வைத்து அவை வழங்கப்பட்டன. சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி.எஸ்.குலகௌரி மலர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் கோப்பாய் பிரதேச தேசோதய சபைத் தலைவர் தேசமானி இ.மயில்வாகனம் உட்பட சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர். (க-50)

## ஆலய மடத்தை சீரமைக்க நிதி வழங்கக் கோரிக்கை

வலி.மேற்கு, ஏப்.5

ஆலயத்தின் அன்னதான மடத்தின் சீரமைப்புப் பணிகளுக்காக 10 லட்சம் ரூபா நிதி வழங்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் தொல்புரம் மேற்கு - வீராவத்தை வைரவர் ஆலய நிர்வாகிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதையடுத்து யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சீரமைப்பு இன்றி உள்ள ஆலய அன்னதான மடத்தைப் பார்வையிட்டு அறிக்கையிட்டுள்ளார். வலி.மேற்குப் பிரதேசசபைத் தவிசாளர் த.நடனேந்திரன், உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் ஆகியோரும் அவருடன் சென்றிருந்தனர். (ஜ-50)

# பருவகால விற்பனையை தடை செய்ய வேண்டாம்

## பொதுமக்களில் ஒரு சாரார் கருத்து

யாழ்ப்பாணம், ஏப்.5

**பண்டிகைக் காலத்தில் பருவகால வியாபாரத்தை அனுமதிக்கக் கூடாது என்று வர்த்தர்கள் கோரிவரும் நிலையில், பொதுமக்களில் ஒரு பகுதியினர் பருவகால வியாபாரத்தை அனுமதிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.**

போரால் பாதிக்கப்பட்டுள்ள நாம், எமக்குக் கிடைக்கும் வருமானத்துக்குள்ளேயே புதுவருடத்தைக் கொண்டாட வேண்டும். எமக்குப் பருவகால வியாபாரிகளிடம் கொள்வனவு செய்வதே ஏதுவாக உள்ளது. அதனால் பருவகால வியாபாரத்தைத் தடை செய்யக் கூடாது என்று அவர்கள் கூறுகின்றனர்.

வடபகுதி வர்த்தகர்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதால் பண்டிகைக் காலங்களில் வெளிமாவட்ட வர்த்தகர்களுக்கு வடபகுதியில் அனுமதி வழங்கவேண்டாம்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட வணிகர் கழக உப தலைவருமான ஆர். ஜெயசேகரன் உள்ளூராட்சி திணைக்களங்களிடம் சில தினங்களுக்கு முன்னர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

பண்டிகைக் காலங்களில் தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டு வியாபாரிகள் வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். அதனைத் தடை செய்ய மாகாண சபையில் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியிருந்தோம். அதற்கும் மேலாக சில சட்டவாக்க நடவடிக்கைகளும் வகுக்கப்பட்டு அனைத்து உள்ளூராட்சி திணைக்களங்களுக்கும் உள்ளூராட்சி ஆணையாளரினால் அனுப்பிவைக்கப்பட்டது.

அந்த அறிவுறுத்தலின் படி உள்ளூராட்சித் திணைக்களங்கள் செயற்பட வேண்டும். ஏனெனில், உள்ளூர் வர்த்தகர்கள் வரி செலுத்தி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். வெளிமாவட்டத்தில் இருந்து வர்த்தகர்கள் வருகை தந்து, வீதிகளிலும், வேறு பிரதேசங்களிலும் நிரந்தர வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இவ்வாறான நிலையில் வடபகுதி வர்த்தகர்களின் பொருளாதார நிலை மிக மோசமாக பாதிக்கப்படுகின்றது என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில் பொதுமக்களில் ஒரு சாரார் பருவகால வியாபாரம் தமக்குப் பயனுள்ளதாக உள்ளது என்று கூறுகின்றனர்.

பருவகால வியாபாரத்தை தடை செய்யக் கோரும் வர்த்தகர்கள், விலைகளைக் குறைத்து விற்பதற்குத் தயாராக இல்லை. அவர்கள் செலுத்தும் வட்டிப் பணத்துக்கும், அவர்களின் போட்டிவியாபாரத்துக்கான பண விரயத்துக்கும், அவர்களது கடைகளுக்கான குளிரூட்டிச் செலவையும் நாம் கொள்வனவு செய்து அணியும் ஆடையின் விலையில் திணிக்க முடியாது.

"நான் பெறும் வேதனத்துக்கு பருவகால வியாபாரிகளிடமே கொள்வனவு செய்ய முடியும். பருவகால விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்" என்கிறார் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் து.ஜீவிதன்.

"நான் கடை ஒன்றில் 2 ஆயிரம் ரூபா கொடுத்து வாங்கிய சேட் 3 மாசத்தில் நாசமாகிவிட்டது. ஆனால் பருவகால வியாபாரியிடம் 700 ரூபா கொடுத்து வாங்கிய சேட்டை இரண்டு ஆண்டுகளாகப் பாவிக்கின்றேன். என்னைப் பொறுத்தவரையில் என்னைப் போன்றோருக்குப் பருவகால விற்பனையே பொருத்தமானது" என்று கூறுகின்றார் யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் 7 ஆண்டுகளாக ஓட்டுநராகப் பணியாற்றும் சி.சிவகுமார்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, "யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் 6 லட்சம் மக்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமுமே முதன்மையானது. ஆயிரக் கணக்கில் உள்ள வர்த்தகர்களுக்காக லட்சக் கணக்கில் உள்ள மக்கள் நட்டங்களை எதிர்கொள்ள முடியாது. எதற்கும் போட்டி வியாபாரம் முக்கியம் என்றவகையில் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் பருவகால விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்." என்றார். (எ-105)



## உதவிகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. நோர்வேயில் வசிக்கும் தம்பதிகள் தமது பிள்ளைகளின் பிறந்தநாளை முன்னிட்டு காலையடி இணைய உதவும் கரங்கள் அமைப்பு ஊடாக இந்த உதவிகளை வழங்கப்பட்டன.

பருத்தித்துறையில் குடும்பத் தலைவர் காணாமல் ஆக்கப்பட்டுள்ள நிலையில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

உதவிப் பொருள்களை ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் கையளித்தார். (க-26)

## உள்ளூர் விதை உ.கிழங்கை வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்தமுறை 50 மெற்றிக்தொன் உள்ளூர் விதை உருளைக்கிழங்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெளிநாட்டு விதை உருளைக்கிழங்கு 50 வீத மானிய அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

அவற்றை விவசாயிகள் ஆர்வமாகக் கொள்வனவு செய்து செய்கை மேற்கொள்கின்றனர்.

கடந்த வருடம் சுமார் 220 மெற்றிக்தொன் வெளிநாட்டு உருளைக் கிழங்குகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

எனினும் அவற்றுக்கான கேள்வி அதிகமாக உள்ளது. தற்போது பன்னாட்டுச் சந்தையில் விதை உருளைக்கிழங்கின் விலையும் அதிகரித்துள்ளது.

இம்முறை அரை மானியத்தில் அவற்றை வழங்குவது தொடர்பாக அரசு இன்னமும் அறிவிப்பு எதையும் விடுக்கவில்லை.

அதனால் 50 மெற்றிக்தொன் உள்ளூர் ரெட்லசோடா விதை உருளைக் கிழங்கைக் கொள்வனவு செய்து வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

50 ஆயிரம் கிலோ விதை உருளைக் கிழங்கைச் சுமார் 60 ஆயிரம் ரூபாவுக்கு வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்தன. (எ-7)



## கற்றல் உபகரணம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 5

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவன் வி.சுலக்சனின் பிறந்த நாளை முன்னிட்டு பொருளாதாரத்தில் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் 51 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சுலக்சனின் குடும்பத்தினரால் யாழ்ப்பாணம் உடுவில் மான்ஸ் த.க.பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கே வித்தியாலயத்தில் வைத்து கடந்த வியாழக்கிழமை கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டார். (ஐ)

## சாவகச்சேரி நகரசபைக்கு புதிய நிர்வாக அலுவலர்

சாவகச்சேரி நகர சபையின் நிர்வாக அலுவலராகப் பளைப் பிரதேச சபையின் செயலராகக் கடமையாற்றிய திருமதி செ.அனுசியா நியமிக்கப்பட்டுள்ளார். அவரது இடத்துக்கு திருமதி தர்சினி நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த மாத இறுதிப் பகுதியில் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றி இலங்கை முகாமைத்துவ சேவையின் அதிசிறப்புத் தரப் போட்டிப் பரீட்சை மூலமும் சிறப்புத் தேர்ச்சி அடிப்டையிலும் தேர்வு செய்யப்பட்ட 35 பேருக்கு கடந்த 25 ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைகளில் செயலர்களாகவும் நிர்வாக அலுவலர்களாகக் கடமையாற்றியவர்களும் இடமாற்றல் கோரி விண்ணப்பித்திருந்தனர். அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அதி சிறப்பு தர அலுவலர்களுக்கு நியமனங்களும் இடமாற்றல்களும் வழங்கப்பட்டன. சாவகச்சேரி நகரசபையில் செயலராக கடமையாற்றிய கா.சண்முகதாசன் வேலணைப் பிரதேச சபைக்கும் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையில் செயலராக கடமையாற்றிய ஜீ.சபேசன் சாவகச்சேரி நகரசபைக்கும் செயலர்களாக நியமிக்கப் பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (க-9)

## விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, ஏப்.5

மிருசுவில் ஏ9 முதன்மை வீதியில் தனியார் பேருந்தும், உந்துருளியும் விபத்துக்குள்ளானதில் உந்துருளியில் பயணித்தவர் காயமடைந்தார். இந்த விபத்து நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த சி.தவலிங்கம் (வயது-38) என்பவரே காயமடைந்துள்ளார்.

இடுப்பு மற்றும் கையில் காயமடைந்த நிலையில் அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தவசிகுளத்துக்குச் சென்றுவிட்டு, மிருசுவில் மருத்துவமனைக்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் வந்து ஏ-9 முதன்மைச் சாலைக்குள் நுழைந்த போது, எதிரே வந்த தனியார் பேருந்துடன் உந்துருளி மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. (க-9)

# நிகழ்வுகள்

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 5
ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் அரசடி ஞான வைரவர் ஆலய குடமுழுக்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## சமய சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 5
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பெருந்திருவிழாவில் தினமும் சிறப்பு சமய சொற்பொழிவு இடம்பெற்று வருகின்றது.

15 ஆம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை இரவு 8.15 மணி தொடக்கம் 9 மணிவரை "இறைநாமம்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் முதன்மை தொடருந்து நிலைய அதிபர் ரி.பிரதீபன் சிறப்பு சொற்பொழிவை ஆற்றவுள்ளார். ஆலய பெருந்திருவிழா கடந்த மாதம் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (ஐ)

## கலந்துரையாடல்

கொடிகாமம், ஏப். 5
கைதடி பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கைதடி குமரநகர் சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் ஏனைய அரசியல் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கொடிகாமம், ஏப்.5
அகில இலங்கை திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் குருநாகலிலுள்ள கிறிஸ்தவ தேவாலய கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றன.

தலைவராக குருநாகலைச் சேர்ந்த எஸ்.அனுரஹேரத், செயலாளராக குருநாகல் மொகமட் பர்சான்,

பொருளாளராக பதுல்ல எஸ்.ஜெயசேகர, உபதலைவர்களாக யாழ்ப்பாணம் பருத்தித்துறை சதானந்தம் சிவராஜா, கொழும்பு விபுல நரசிங்க, புத்தளம் ஏ.டபிள்யூ. தருசிங்க ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்களுடன் அமைப்பாளராக பன்னால குளியாப்பிட்டிய அமில இந்திக்க, செய்தி தொடர்பாளராக ஹற்றன் மொஹமட் பசீர், யாழ்ப்பாண மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்பாளர்களாக தென்மராட்சி கொடிகாமம் பிரிவு திருமதி சிரேஸ்கரன் தவமலர், மல்லாகம் ஜேக்கப் கிறிஸ்தோபர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-159)

## திறன் வகுப்பறை திறக்கும் நிகழ்வு

சாவகச்சேரி, ஏப்.5
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறைத் திறப்பும், கல்லூரிக்கு காணி கையளிக்கும் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன. அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் ஐக்கிய ராஜ்ஜிய கிளையின் தலைவர் கு.சபாரத்தினம், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன், மதிப்புறு விருந்தினர்களாக சங்க ஐக்கிய ராஜ்ஜியக் கிளையின் நிர்வாக சபை உறுப்பினர் திருமதி கு. இரவீந்திரன் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் செல்வி ஜெனி கணேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் ஐக்கிய ராஜ்ஜியக் கிளையினரால் கல்லூரிக்கு அருகில் 70 லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட காணி வைபவ ரீதியாக அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது. (ஐ-9)

## பெருந் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.5
கொக்குவில் மேற்கு வாராஹிபுரம் திருவருள்மிகு சிறி வாராஹி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து நாள்கள் பகல், இரவுத் திருவிழாக்கள் நடைபெறும். எதிர்வரும்14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என்று பரம்பரை தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (ஐ)

## அடிக்கல் நடும் நிகழ்வு

கொடிகாமம், ஏப்.5
யாழ்ப்பாணம் கைதடி கிழக்கு செல்வா சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நிலைய வளாகத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

கிராமிய அபிவிருத்தி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நடப்படவுள்ளது. (ஐ-159)

# மானிப்பாயை நகர சபையாக மாற்றும் திட்டத்தை கைவிடுங்கள்

## முன்னாள் தவிசாளர் கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஏப். 5*

*தற்போதைய சூழலில் வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தரம் உயர்வு குறித்துப் பரிசீலிப்பதை நான் மனதார ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு மானிப்பாய் பிரதேச சபையை நகர சபையாகவும் பண்டத்தரிப்பைப் பிரதேச சபையாகவும் மாற்றும் திட்டம் ஏதும் இருந்தால் அதனைக் கைவிடுங்கள்.*

இவ்வாறு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சி.மகேந்திரன் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குப் பிரதேச அபிவிருத்திக் கூட்டம் தவிசாளர் அ.ஜெபனேசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ஈ.சரவணபவன் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும் முன்னாள் தவிசாளருமான சி.மகேந்திரன் தெரிவித்ததாவது:

வடக்கு- கிழக்கில் 15ஆயிரம் பட்டதாரிகள் வேலையற்று நடுத்தெருவில் உள்ளனர். வலி.தென்மேற்குப் பிரதேச சபை 28 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது. இதில் 18 கிராம அலுவலர் பிரிவுகள் மானிப்பாய் நகர சபையாகவும் மிகுதி 10 கிராம அலுவலர் பிரிவுகள் பண்டத்தரிப்பு பிரதேச சபையாகவும் கொண்டு தரம் உயர்த்தும் நடவடிக்கை இடம்பெறுகிறது. இதனை நான் வரவேற்கவில்லை. இந்தத் திட்டம் இருந்தால் உடன் கைவிடுங்கள்.

பண்டத்தரிப்பு, பிரான்பற்றில் எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆதனங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்படவில்லை. இவ்வாறான சூழலில் தரம் உயர்த்துவதை நாம் விரும்பவில்லை - என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் அ.ஜிப்பிரிக்கோ கருத்துத் தெரிவிக்கையில், அடிப்படையில் பிரதேச சபை ஒன்றை நகர சபையாகத் தரம் உயர்த்துவது என்றால் அடிப்படையில் பல்வேறு வேலைத் திட்டங்களை சபையுடன் இணைந்ததாக முன்னெடுக்கவேண்டும். முன்னாள் தவிசாளர் மகேந்திரன் கூறுவது போன்று தற்போதைய சூழலில் இந்தத் திட்டம் முன்னெடுக்க வேண்டிய அவசியமில்லை- என்றார். இந்த நிகழ்வில் ஆ.சி. கணேசவேல், இ.வன்னியசேகரம் உள்ளிட்ட பலர் கருத்துத் தெரிவித்தனர். (த-50)

## சாரதிக்கு தண்டம்

சாவகச்சேரி, ஏப் 5
புகைப் பரிசோதனை பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் 74 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் மானிப்பாய் 'பிள்ளையார் இன்' மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பழைய பணிப்பாளர்கள் சபை நீக்கப்பட்டுப் புதிய பணிப்பாளர்கள் சபைக்கு ஏழு நபர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற பங்குதாரர்களின் தீர்மானத்தின் பிரகாரம் தெரிவு நடைபெற்றது.

புதிய பணிப்பாளர்களாக மருத்துவர் சங்கரதாஸ் நிமலன், பொ.மகேஸ்வரன், ந.கணேசலிங்கம், ம.யுடேசன் சக்திஜீவன், சி.வயித்தீஸ்வரன், க.சிவராஜா, கு.நித்தியானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## தளபாடங்கள் கையளிப்பு

சாவகச்சேரி, ஏப்.5
பொருளாதார ரீதியில் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த 3 மாணவிகளுக்கு கற்றலுக்குத் தேவையான தளபாடங்கள் அண்மையில் கையளிக்கப்பட்டன. தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் கடமையாற்றும் 60 பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் இணைந்து கொள்வனவு செய்த தளபாடங்கள் பிரதேச செயலகத்தில் வைத்து மாணவிகளிடம் கையளிக்கப்பட்டன.

கையளிப்பு நிகழ்வில் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் கலந்து கொண்டு தளபாடங்களை வழங்கினர். (க-9)

## நடமாடும் சுகாதாரத் திட்டம் மந்திகையில் நேற்று ஆரம்பம்

பருத்தித்துறை, ஏப்.5
கர்ப்பிணிகளின் நலன் கருதி பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவனை நோயாளர் நலன் புரிச் சங்கத்தால் நடமாடும் சுகாதாரம் (மொபைல் ஹெல்த்) என்னும் செயற்றிட்டம் நேற்று மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டது.

கர்ப்பிணிப் பெண்களின் இறப்பு வீதம் யாழ்ப்பாணத்தில் 42 வீதமாகக் காணப்படுகின்றது. கர்ப்பிணிப் பெண்களின் உயிரிழப்பு அந்தக் குடும்பத்தை மட்டுமன்றி, சமூக மட்டத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இவற்றைக் கருத்தில்கொண்டு மந்திகை ஆதார மருத்துவமனையில் நடமாடும் சுகாதாரம் எனும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மகப்பேற்று நிபுணரால் பரிந்துரைக்கப்படும் அதிகூடிய கவனம் செலுத்தப்படவேண்டிய கர்ப்பிணித் தாய்மார் கள் மருத்துவமனையின் 24 ஆம் விடுதியின் 0212261134 உன்ற தொலைபேசி இலக்கத்துடன் எந்த நேரத்திலும் தொடர்பை ஏற்படுத்தினால் அவர்களை மகப்பேற்றுப் பிரிவில் சேர்ப்பதற்கு உடனடியாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் மகப்பேற்று நிபுணர் சிவச்சந்திரன் அபிவிருத்திச் சபை செயலர் ஆகியோர் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். (எ-9,173)



# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

2018ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதன்படி மாணவர்களின் பெறுபேறுகள் பாடசாலைகளால் வெளி யிடப்பட்டுள்ளன.

**வேலணை மத்திய கல்லூரி**
சிவபாதம் விட்சறன் - 8ஏ,சி , பிரியந்தி சிதம்பரநாதன் - 7ஏ,பி,சி, சுப்பிரமணியம் பிரவீனன் - 6ஏ,2பி,சி , றவீந்திரன் வானுஜன் - 6ஏ,2பி,சி, அருளையா கயந்தன் - 6ஏ,சி,எஸ், கீர்த்தனா சிவகுமாரன் - 5ஏ,3பி,எஸ், லாவண்யா விக்னேஸ்வரன் -5ஏ, 2சி,எஸ், நந்தகுமார் நிசாந்தன் -4ஏ,4பி,எஸ் , சுதாகரன் கயாணன்- 4ஏ,3பி,சி,எஸ் , சிறிகரன் டிலக்ஸ்சன் - 4ஏ, பி, 3சி, எஸ், திருவருள்செல்வன் கஜீபன் - 3ஏ, 5பி, எஸ், மதுரி மோகனகுமார் - 3ஏ, 2பி,2சி, 2எஸ், சரண்யா அரசரத்தினம் - 3ஏ,2பி,3சி, எஸ், சிவசீலன் ராஜிதன் - 3ஏ, 4பி,2எஸ், கார்த்திகா தவச்செல்வன்- 3ஏ, பி.2சி, 2எஸ்

**கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்**
கௌரிபாலன் சஜீவன் - 5ஏ, பி, 3பி, பிரபாகரன் சரசிகன் - 5ஏ, பி, 2சி , சிவகுமார் அனோஜிகா - 4ஏ, 2பி, 3சி, பரமலிங்கம் கவிசனா - 3ஏ, 2பி, 3சி, எஸ், கோபாலகிருஸ்ணபிள்ளை லக்சனா - 3ஏ, 2பி, 2சி, எஸ், கேதீஸ் தர்மிகா - 3ஏ,பி, 4சி, எஸ் , சந்திரமோகன் விஜிதரன் - 2ஏ, 2பி, 4சி, எஸ், ஈஸ்வரலிங்கம் சிவானுஜா - 2ஏ, பி, 2சி, 4எஸ், செல்வராசா அனுசன்- ஏ,4பி,சி,2எஸ் , மகேந்திரராசா பானுசா ஏ 3பி 3சி 2எஸ், இராசநாயகம் கஜேந்தினி -ஏ 3பி 3சி 2எஸ், அருணகிரிநாதர் தாரணி -ஏ 3பி 3சி எஸ்,ஸ்ரீஸ்கந்தராசா ரனுசிகா - ஏ 2பி 4சி 2எஸ், கீதச்சந்திரக்குருக்கள் சுகீர்த்தனன் - ஏ பி 4சி 3எஸ் வசந்தகுமார் பிரணவன்- ஏ 7சி,ஜெகதீஸ்வரன் சுகந்தனா - ஏ பி 3சி 3எஸ், லலிதரூபன் கலைவாணி-ஏ 3சி 3எஸ், இராசரத்தினம் அபினா - 3பி 3சி 2எஸ், கமலேந்திரன் லக்சன் - பி 4சி 3எஸ்,மனோரஞ்சன் யானுசன் - 2பி 3சி 3எஸ், தர்மேந்திரலிங்கம் கஜவதனன்- பி 5சி 3 எஸ், சிவகுமார் வேணுஜன்- பி 5சி 2எஸ், நகுலேஸ்வரன் துர்க்கா - பி 4சி 2எஸ், சதானந்தராசா விதுர்சிகா- 3சி,4சி.

**நவாலி மகா வித்தியாலயம்**
து.பிரிந்தா- 4ஏ2பி3சி, செ. லோஜிகா- 3ஏ2பி4சி, ட.மேரிடில்சியா- 3ஏ3பிசி 2எஸ், செ.தர்சன்- 2ஏபி4சி2எஸ், க.சிலக்சனா- ஏ2பி2சி4எஸ்.

**பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை**
தமிழ்மொழி மூலம்
அனுஜா வாசுதேவன்-9ஏ , மேரி லக்ஸ்சிகா யஸ்ரின்குறூஸ்-9ஏ , நவதர்சினி பாலச்சந்திரன்-9ஏ , தரணிகா ஜெயநிமாலன்-9ஏ , பைரவி சேந்தன்-9ஏ , தக்சனா பாஸ்கரன்ஏ, கிவிர்த்திகா விஜிந்திரன்-9ஏ . துவாரகா சிவகுமார்-9ஏ , விதுசனா நித்தியராஜா-9ஏ. கார்த்திகா சந்திரலிங்கம் 8ஏ பி, துஜாத்தா பொன்னுத்துரை-8ஏ பி, சுகன்ஜா சிறிதரன்-8ஏ பி , தனுரா தயாபரன்-8ஏ பி, தர்சிகா கோணேஸ்வரன்8ஏ பி , துசாந்தினி ஆறுமுகம்-8ஏ பி,மயூரி ஏகநாதன்-8ஏ சி, பிரியங்கா வெற்றிவேலாயுதம்-8ஏ சி, பிரியங்கா தர்சானி மதிவதனன்-8ஏ சி
பிரியங்கா சதீஸ்குமார்-7ஏ 2பி, தனுஷ்ரிகா பிறேமபவன்-7ஏ 2பி, லக்ஸ்சனா ஜெயராம்-7ஏ 2பி, வைஸ்ணவி ராசநாயகம்-7ஏ 2பி, கார்த்திகா ஸ்ரீவரதன்-7ஏ பிசி , சங்கவி பாலச்சந்திரன்-7ஏ பிசி , பமிலா நடேசமூர்த்தி-7ஏ பிசி , விதுர்சனா பாஸ்கரன்-7ஏ பிசி,சிவனிகா சிவகடாட்சம்- 6ஏ 3பி,தர்சிகா ஜெகதீசன்- 6ஏ பி2சி, மிதிலா பாக்கியதாசன்- 5ஏ 3பி சி,

ஆங்கில மொழிமூலம்
அபினயா குகநீசன்-9ஏ , அபினயா சுப்பிரமணியம்-9ஏ , அபினஜா மனோறஞ்சன்-9ஏ . திவ்யா அன்ரனி தேவராஜா-9ஏ. ஹம்சவி உமாசங்கர்-9ஏ , மாதுமை ராஜகுரு-9ஏ . நிஜானி தவசோதி-9ஏ , பார்கவி ஜெதீஸ்வரன்-9ஏ , சாமினி ஜெயராஜ் -9ஏ , சௌமியா அதியமன்9ஏ , சுயானி ராஜேஸ்வரன்-9ஏ , துளசிகா இளங்கோ 9ஏ , வாகினி இளங்கீரன்- 9ஏ , வேனுஜா சிறிநந்தராஜன்-9ஏ , வைஸ்னுகி கதிரமலை-9ஏ . அபிராமி தட்சணாமூர்த்தி8ஏ பி , டிவின்சியா யோகராஜா-8ஏ பி சுவாங்கி தோமஸ்யூட் -8ஏ சி,சங்கீர்த்தனா ரவீந்திரன் -6ஏ 2பிசி, கருணியா சுகுமாறன்-6ஏ 2பி எஸ்,கீர்த்ததனா சந்திரமோகன்-5ஏ 2பி 2சி,ராகவி ஜோகலிங்கம் -5ஏ பி 3சி.

**முல்லைத்தீவு கல்விளான்குளம் மகா வித்தியாலயம்**
சி.சாருஜா- 3ஏ3பி2எஸ், வி.துவாரகன்- 2ஏ4பி2சி, து.லிவ்வியா- 2ஏ3சி3எஸ், ச.சானுகா- ஏ2பி2சி2எஸ், மு.சானுஜா- 3பி3சி2எஸ், ச.காசினி- 2பிசி3எஸ், ந. தனோஜன்- 5சி2எஸ், இ.தனுஷா- 4சி2எஸ்.

## 100 வீத சித்தியை பெற்ற சத்தியசாயி பாடசாலை

யாழ்ப்பாணம்.ஏப். 5
யாழ்ப்பாணம் மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை மாணவர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் நுறு வீத சித்தியைப் பெற்றுள்ளனர் என்று வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார். 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் இந்தப் பாடசாலையில் இருந்து 10 மாணவர்கள் தோற்றிய நிலையில் அனைவரும் சித்தி பெற்று உயர்தரத்துக்கு தெரிவாகினர். இதில் சித்திபெற்ற மாணவர்களின் விவரம் பின்வருமாறு எஸ்.சைதன்யா- 9ஏ, வி.நிரோஜன்- 8ஏபி, பி.பிரபாளினி- 7ஏ2பி, எஸ். கீதாஸ்ரீ-4ஏ3பி2சி, எம்.குகதர்மிகா-4ஏ3பி2சி, வை.கஜேந்தினி- 2ஏ4பி3சி, ரி.பானுப்பிரியா- 2ஏ2பி 2சி3எஸ், எஸ்.ஹம்சாயினி- ஏபி6சிஎஸ், வி.சுபான்கர்- 2பி5சி2எஸ், எஸ்.துஷிந்தன்- 3பி2சி4எஸ். (ஜ)

## சுதேசியத் திருநாளின் ஆரம்ப நிகழ்வு



யாழ்ப்பாணம் அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தின் நூற்றாண்டு விழாவின் ஆரம்ப நிகழ்வுகள் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை கோலாகலமாக இடம்பெற்றன.
ஏ-9 வீதியில் மாம்பழம் சந்திக்கு அண்மையில் அமைக்கப்பட்ட நூற்றாண்டு விழா நினைவுத் தூபியும் திறந்து வைக்கப்பட்டது. தமிழரின் பூர்வீகச் சின்னமாகிய நந்திச் சிலை தாங்கிய வண்ணம் தூபி அமைக்கப்பட்டுள் ளது.
நூற்றாண்டு விழா குழுத் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் செயலர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட் தூபியைத் திறந்து வைத்தார்.
நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் ம.ஜெயசீலன், பொதுமக்கள், புலம்பெயர் அரியாலையூர் மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.
13 சனசமூக நிலையங்களை உள்ளடக்கிய அரியாலைப் பிரதேசத்தில் தினமும் ஒவ்வொரு சனசமூக நிலையத்தில் கலை நிகழ்வுகள் இடம்பெற்று சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று நூற்றாண்டு இறுதிக் கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.
தமிழருக்கென்று நாகரிகம், பண்பாடு, பாரம்பரியம், கலை, மொழி, உரிமை உண்டு. அவற்றை அந்நியர் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் 1919ஆம் ஆண்டில் வி.காசிப்பிள்ளை, ஆ.கதிரவேற்பிள்ளை, ஆ.கனகரத்தினம் போன்ற புத்திஜீவிகளால் ஆரம்பிக்கப்பட்டதே அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-135)



## வரணி குடமியன் அ.த.கவில் புலமைப் பரிசில் நிதியம்

சாவகச்சேரி, ஏப். 5
வரணி குடமியன் அ.த.க.பாடசாலையில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு நிதி வழங்கும் வகையில் புலமைப் பரிசில் நிதியம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி மகேஸ்வரி வீரகத்தி நினைவாக அவரது மகளால் வங்கியில் வைப்பிலிடப்பட்ட 50 ஆயிரம் ரூபாவுக்கான புலமைப் பரிசில் நிதிய சான்றிதழை அதிபர் ம.லினாஸ்குமாரிடம் கையளித்தார்.
நிகழ்வில் மக்கள் வங்கியின் கொடிகாமம் கிளையின் முகாமையாளர் கலந்து கொண்டார்.
பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டு வரும் மீள்எழுச்சி வேலைத்திட்டம் பலமடைவதற்கு இவ்வாறான ஊக்குவிப்பு நிகழ்வுகள் அவசியம் என அதிபர் தெரிவித்தார். (ஜ-9)

## வடமராட்சியில் புகையிலை அறுவடை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.5
வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை அறுவடை வேகமாக நடைபெற்றுவருகின்றது. தரமான புகையிலை செடி ஒன்று 170 ரூபாவாகவும், சாதாரண புகையிலை செடி 100 ரூபா தொடக்கம் 160 ரூபாவரைக்கும், தரம் குறைந்த புகையிலைச் செடி 80 தொடக்கம் 100 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.
புகையிலையை உலர்த்தி சந்தைப்படுத்தும் புகையிலை வியாபாரிகள் புகையிலைச் செடிகளை விவசாயிகளுடமிருந்து கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். புகையிலை செய்கைக்கு தடைவிதிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பினால் தான் இம்முறை குறைந்தளவு பரப்பில் பயிரிடப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ஜ-173)





## மாணவர்களின் மாதிரிச் சந்தை

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாணம் மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் மாதிரிச் சந்தை அண்மையில் வித்தியாலயத்தில் அதிபர் சிறிராமச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.
அதில் மாணவர்கள் காய்கறிகள், தேங்காய், பழங்கள், கருவாடு போன்றவற்றை விற்பனைக்காக காட்சிப்படுத்தினர். நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-70)



## சேவைநலன் பாராட்டு

பளை, ஏப்.5

பளை, தர்மக்கேணி அ.த.க. பாடசாலையில் சேவையாற்றி இடமாற்றல் பெற்ற ஆசிரியர்களுக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் வே.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-9)

# மருத்துவர்களது போராட்டத்தால் முல்லை.நோயாளர்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஏப்.5

முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத்துவமனை மருத்துவர்கள் மேற்கொண்டுவரும் தொடர் பணிப் புறக்கணிப்பால் நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். சிகிச்சைகளுக்காகச் சென்ற நோயளர்கள் பலர் உரிய சிகிச்சைகளைப் பெறமுடியாது திரும்பியதைக் காண முடிந்தது.


முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத்துவமனை மருத்துவர்கள் நேற்றுமுன்தினம் நண்பகல் முதல் பணிப் புறக்கணிப்பை ஆரம்பித்திருந்தனர்.

மருத்துவமனையின் மருத்துவர்களுக்கும், பணியாளர்களுக்கும் இடையே உள்ள முரண்பாடே பணிப் புறக்கணிப்புக்குக் காரணம் என்று மாகாணச் சுகாதாரத் திணைக்களவட்டாரங்கள் தெரிவித்தன.

மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பாக மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று முன்தினம் நேரில் சென்று ஆராய்ந்திருந்தார்.

பணிப் புறக்கணிப்புத் தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பு சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் நேற்று முல்லைத்தீவுக்குச் சென்றிருந்தனர். எனினும் மருத்துவர்களின் பணிப் புறக்கணிப்பு நேற்று நண்பகலும் தொடர்ந்தது.

பல்வேறு வழிகளில் பாதிப்படைந்துள்ள எமக்கு மருத்துவ சேவைகளையும் சரியான முறையில் பெற முடியாதுள்ளது. அங்கு சேவையில் ஈடுபடும் மருத்துவர்களைச் சிலர் திட்டமிட்டு அவமதிக்கும் வகையில் செயற்படுகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளால் பாதிக்கப்படுவது பொது மக்கள் தான் என்று ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்ற நோயாளர்கள் விசனித்தனர். (எ-21,222)



## தனிநாயகம் அடிகளின் சிலை திறப்பு நிகழ்வு

வவுனியா, ஏப்.5

தமிழுக்குத் தொண்டாற்றிய தனிநாயகம் அடிகளின் சிலை வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று பாடசாலையின் அதிபர் இ.நவரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அமிர்தலிங்கம், கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.மரியநாயகம் ஆகியோர் கலந்துகொண்டு தனிநாயகம் அடிகளின் சிலையை திறந்து வைத்தனர்.

பாடசாலையின் பழையமாணவர் சங்கத்தின் செயலர் ப.கார்த்தீபன், பாடசாலையின் பெற்றார் சங்கத்தின் செயலர் ஆர்.தினேஸ்

# ஓலைக் குடிசையில் இருப்போருக்கு வீட்டுத் திட்டம் வழங்கத் தீர்மானம்

## மன். பட்டின பிரதேச சபை செயலர் தெரிவிப்பு

மன்னார், ஏப்.5

மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வீட்டுத் திட்ட பயனாளிகளில் ஆறுமாதங்களுக்கு மேலாக ஓலைக் குடிசையில் வசிப்பவர்களுக்கே வீடுகள் வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று மன்னார் பட்டின பிரதேச செயலர் திருமதி சிவசம்பு தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு நிகழ்ச்சி நிரலில் மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்கு 357 வீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன ஆனால் ஆயிரத்து365 வீடுகள் தேவையாக உள்ளன.

உண்மையாக பாதிக்கப்பட்டு வீடுகளின் தேவை உடையவர்களுக்கு அவை செல்ல வேண்டும் என்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

60 தொடக்கம் 80 புள்ளி அடிப்படை 45 ஆக அவை குறைக்கப்பட்டது. வீட்டுத் தேவை உடைய அத்தனை பேரும் 45 எனும் சம அளவில் உள்ளார்கள்.

ஆகவே வாடகை வீடு,ஒற்றை அறை கொண்ட சீமெந்து வீட்டில் வசிப்பவர்கள், உறவினர்கள் வீடுகளில் இருப்பவர்களுக்கு கூட வீடுகள் வழங்குவதை தவிர்த்து, ஓலைக் குடிசையில் ஆறுமாதங்களுக்கு மேலாக வசிப்பவர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு, வீடுகள் வழங்கப்பட உள்ளன. - என்றார். (க-213)

## நாடகவிழா

வவுனியா.ஏப். 5

சுதந்திர அரங்கு மற்றும் அரங்காலயா இணைந்து நடத்தும் உலக நாடகவிழா வவுனியா நகரசபை மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரு காட்சியாக இடம்பெறவுள்ளது.


முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கும், மாலை 4 மணிக்கு பெரியோர்களுக்கான காட்சியாக பல நாடகங்கள் இடம்பெறவுள்ளன.

இவ்வருடம் நடைபெற்ற கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் குறுநாடகம் மற்றும் நெடு நாடகபோட்டியில் தேசிய ரீதியில் முதல் இடம்பிடித்த நாடகம் அரங்கேற்றப்படவுள்ளதாக விழாக்குழுவினர் தெரிவித்தனர். (ஐ-402)

## கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது

வவுனியாவில் கஞ்சாவை உடமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் கொக்குவெளியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

வவுனியா, மதுவரித் திணைக்களத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி எஸ்.அசோக திலகரட்ண தலைமையி



லான குழுவினரே சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர். உந்துருளி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## தவக்கால தியானங்கள்

### அறச்செயல் அவசியம்

ஆண்டவர் இயேசு காட்டிய வழியில் நோன்பும் அறச்செயல்களும் செய்தால், விண்ணுலகில் செல்வம் சேர்க்க உதவும் காலமாக இந்தத் தவக்காலம் அமையும்.

கடவுளோடும் சக மனிதர்களோடும் நல்லுறவை ஏற்படுத்த கிறிஸ்தவர்கள் பயிற்சி செய்யும் காலமாக தவக்காலம் அமைந்துள்ளது. மனம் மற்றும் உடலின் ஆசைகளைக் கட்டுப்படுத்தி, பிறருக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சி காணுகின்றபிறர் அன்பின் காலமாக இது கடைப் பிடிக்கப்படுகிறது.

ஒருமுறை திருமுழுக்கு யோவானின் சீடர்கள் இயேசுவிடம் சென்று, 'நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?' என்றனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, 'மணமகன் தங்களோடு இருக்கும் வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரிய வேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்' என்றார்.

ஆகவே, இயேசு கிறிஸ்துவின் விருப்பத்தின் அடிப்படையிலேயே, நோன்புக் காலமாகிய தவக்காலத்தைத் தொடக்கக்கால கிறிஸ்தவர்கள் உருவாக்கினர். கி.பி. 2ஆம் நூற்றாண்டில், இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவுக்குத் தயாரிப்பாக 2 நாள்கள் நோன்பிருக்கும் வழக்கம் கிறிஸ்தவர்கள் மத்தியில் தோன்றியது. புனித வெள்ளி, புனித சனி ஆகிய நாள்களில் உணவும், தண்ணீரும் இன்றி 40 மணிநேரம் அவர்கள் தொடர்ந்து நோன்பு கடைப்பிடித்தனர். தவக்காலத்தில் பொதுவாக அசைவ உணவுகளைத் தவிர்க்கும் வழக்கம் அனைத்து கிறிஸ்தவர்களிடமும் உள்ளது. ஏழைகளுக்கு உதவுதல், தர்மம் செய்தல் போன்ற செயல்கள் வழியாக தேவையில் இருக்கும் சக மனிதர்களுடனான உறவும், வழிபாடுகளில் அதிகமாக பங்கேற்றல், இயேசுவின் சிலுவைப்பாடுகளை தியானித்து செபித்தல் ஆகியவற்றின் மூலம் கடவுளுடனான ஆன்மிக உறவும் ஆழப்படுத்தப்பட தவக்காலம் உதவுகிறது.

## இளைஞர் சங்க பொதுக்கூட்டம்

வவுனியா, ஏப். 5

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இளைஞர் சங்க நடராஜா மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

சங்கத் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெறவுள்ளது. யாப்பு திருத்தம் தொடர்பிலும் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதால் அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ-110)

# சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரம்

## மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை

வவுனியா, ஏப்.5

சூரிய சக்தியில் நீர் இறைக்கும் இயந்திரத் தொகுதி 50 வீத மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது என்று கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சூரிய கலத்தில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரங்களை விவசாயிகளின் நலன் கருதி வழங்கவுள்ளோம்.

3 இலட்சத்து 97ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த சூரிய கலத்துடன் கூடிய நீர் இறைக்கும் இயந்திரம் ஐம்பது வீத மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

அதைப் பெறுவதற்கு விவசாயிகள் விவசாயம் செய்வதற்கான காணி மற்றும் வீடு இருப்பதோடு மின்சாரப்பட்டியல் என்பன இருந்தால் போதுமானதாகும்.

அவற்றைப் பெற விரும்புபவர்கள் அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள கமநல சேவை திணைக்களங்களில் தங்கள் பெயர்களை பதிவு செய்துகொள்வதோடு இது தொடர்பான மேலதிக விவரங்களை கமநல சேவை திணைக்களம் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும். - என்றார். (க-110)

# ஒட்டுசுட்டான் மணலை அகழ்ந்து செல்லத் தடை

முல்லைத்தீவு, ஏப்.5

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் இருந்து வெளி இடங்களுக்கு மணல் அகழ்ந்து கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் த.அகிலன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டானில் இருந்து பெருமளவு மணல் வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. அங்கிருந்து எடுத்துச் செல்லப்படும் மணல் ஒரு டிப்பர் 18 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டு வெளிமாவட்டங்களில் 60 ஆயிரம் ரூபா வரையில் விற்கப்படுகின்றது.

அதனால் பிரதேச மக்களின் வீட்டுத் திட்டத் தேவைகளை நிறைவு செய்ய முடியாத நிலமை உள்ளது. ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாதாந்தம் 130 உழவு இயந்திரங்களில் மணல் ஏற்ற அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் 600 வரையான வீடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் மக்கள் மணலைப் பெற முடியாது திண்டாடுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது. சமூக மட்ட அமைப்புகளுக்கு மாத்திரம் மணல் அகழ அனுமதிக்க வேண்டும் என்றும், வெளி இடங்களைச் சேர்ந்தவர்களுக்கோ, வேறு எவருக்கோ மணல் அகழ இடமளிக்கக் கூடாது என்றும் கோரப்பட்டது.

அதையடுத்து மணல் அகழ்ந்து பிரதேசத்தை விட்டு வெளியே கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டது. பிரதேசத்தில் உள்ள சமூக அமைப்புக்கள் மணல் அகழ்வுக்கான அனுமதியைப் பெற்று மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணத்திலும் தற்போது வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டுத் திட்டப் பயனாளிகள் மணலைப் பெற்றுக் கொள்ள முடியாது திண்டாடுகின்றனர். (எ-ரி3)

## கருத்தரங்கும் கூட்டமும்

கொடிகாமம், ஏப். 5

உண்மையான ஜனநாயகத்தையும் பொருளாதார நீதியையும் மக்கள் அதிகாரத்தால் கட்டியெழுப்புவோம் என்ற தலைப்பிலான கருத்தரங்கும் மக்கள் திட்ட அறிமுகக் கூட்டமும் இடம்பெறவுள்ளன. மக்கள் போராட்ட மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் முதன்மை உரைகளை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல், முன்னிலை சோசலிசக் கட்சியின் அமைப்பாளர் தோழர் குமார் குணரட்ணம், மக்கள் போராட்ட மத்திய நிலையத்தில் அங்கம் வகிக்கும் மக்கள் குரல், இலங்கை சோசலிசக் கட்சி ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஆற்றவுள்ளனர். உரைகளைத் தொடர்ந்து மக்கள் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (ஐ-159)

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

யாழ்ப்பாணம்,ஏப். 5

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு முதலாம் தவணை விடுமுறை இன்று வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளது என்று பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாம் தவணை கற்றல் நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## தொழில் நாடும் இளையோரை பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில்தேடும் இளையோருக்கான பதிவுகள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக தொழில் நிலையம், பிரதேச செயலகங்களுடன் இணைந்து தொழில் நாடும் இளையோருக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இந்தச் செயற்றிட்டத்தை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் கரவெட்டி, பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தொழில் நாடுவோருக்கான பதிவுகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை மேற்குறிப்பிட்ட பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சகல கிராம அலுவலர் அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ)

## பொலிஸில் முறையிடப்பட்டிருந்த நிலையில்
# தடை செய்யப்பட்ட நிறுவனம் கிளையைத் திடீரென மூடியது

யாழ்ப்பாணம், ஏப்.5

இலங்கை மத்திய வங்கியால் தடை செய்யப்பட்டிருந்த நிதி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் தனது கிளையை நடத்திவந்த நிலையில், அது தொடர்பாக யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் அந்தக் கிளை மூடப்பட்டது.

பிரமிட் வியாபாரத்தை ஒத்த வர்த்தக நடவடிக்கையை மேற்கொண்டிருந்த நிறுவனம் ஒன்று மத்திய வங்கியால் 2013ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் யாழ்ப்பாணம் தென்மராட்சியில் தனது கிளையை நடத்தி வந்தது. அது தொடர்பாகச் சாவகச்சேரி நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் 2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அந்த நிறுவனம் இயங்கத் தடை விதித்தார்.

அதையடுத்து சாவகச்சேரியில் இயங்கிய கிளை மூடப்பட்டது. எனினும் அதன்பின்னர் யாழ்ப்பாணம் நகரில் தனது கிளையை அந்த நிறுவனம் ஆரம்பித்திருந்தது. அது தொடர்பாக மின்னஞ்சல் மூலம் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அந்த விடயம் யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

முறைப்பாட்டாளரை அழைத்த பொலிஸ் அத்தியட்சகர் பொதுமக்கள் நன்மை கருதிய இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்ததுடன், ஏமாற்று மோசடி வழக்காகப் பதிவு செய்யவும் ஏற்பாடுகளை மேற்கொண்டார். மத்திய வங்கியால் தடை செய்யப்பட்ட விவரம் மற்றும் சாவகச்சேரி நீதிமன்றால் தடை செய்யப்பட்டமை தொடர்பான ஆவணங்களையும் பெற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடாகப் பதிவு செய்து வழக்கு நடவடிக்கைக்குரிய முன்னெடுப்புக்கள் இடம்பெற்றிருந்த நிலையில் அந்த நிறுவனத்தின் கிளை மூடப்பட்டுள்ளது. அதேவேளை, அந்தக் கிளை இயங்கிய காலப்பகுதியில் அதிக வாடிக்கையாளர்கள் நிறைந்தி ருந்தனர் என்றும், அதனால் இணைந்து கொண்டோம் என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர். (எ-105)

## துரையப்பா விளையாட்டரங்கில் புதுவருட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் தேசிய நல்லிணக்க இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் 9 ஆம் திகதி முழு நாள் நிகழ்வாக புதுவருட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக அமைச்சர் மனோ கணேசன் மற்றும் முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரண துங்க உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வுக்கு நாடு பூராகவும் இருந்து 500 மாணவர்கள் அழைத்து வரப்பட்டு சமாதானத்தை கட்டியெழுப்பும் வகையில் ஈருருளி ஓட்டம், மரதன் ஓட்டம் என்பன இடம்பெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து பாரம்பரிய நிகழ்வுகள் மாணவர்களுக்கிடையில் பாரம்பரிய விளையாட்டுகள் இடம்பெறவுள்ளன.

குறித்த நிகழ்வுகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு மாலை 4 மணிக்கு பரிசளிப்பு விழா இடம்பெற்று அமைச்சின் ஏற்பாட்டில் பொதுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுக் காக 4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-105)

## துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம்,ஏப். 5

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 37 ஆவது ஆண்டுநிறைவுநிகழ்வு துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் முதன்மைவிருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னாள் பீடாதிபதியும் பேராசிரியருமான சிவக்கொழுந்து சிறி சற்குணராஜா மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழ்க முதுநிலை விரிவுரையாளர் திருமதி சிவராணி சிறீ சற்குணராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## பெருந்திருவிழா

வடமராட்சி, ஏப். 5

பருத்தித்துறை கோட்டு வாசல் கொன்றை மர நிழல் நாயகி அருள் மிகு சிறி சண்டிகா பரமேஸ்வரி ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசை ஆரம்பமாகி காலை 8 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணிப்பார்.

மறுநாள் 19 திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறும் தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவுபெறும்.

கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ பா. மனோரஞ்ச சர்மாவின் உதவியுடன் சிவாகமகிரியாதிலகம் சிவஸ்ரீ இராமலிங்க குருக்கள் முதன்மைக் குருவாக இருந்து பெருந்திருவிழாவை நடத்திவைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

# ஜனநாயகப் போராளிகள் கட்சியும் அமெரிக்க அதிகாரிகளும் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

அமெரிக்க அரசு துறைக்கான மனித உரிமை அலுவலர் கிறிஷ்ரினா ஜேம்ஸ் மற்றும் அமெரிக்கத் தூதரக அரசியல் முதன்மைச் செயலர் சீன்ரூத்தே ஆகியோருடன் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் சந்தித்துப் பேசியுள்ளனர்.



யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றது என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

போரின் பின்னர் ஜனநாயக அரசியல் பரப்பில் போராளிகள் எதிர்கொள்ளும் வகிபாகம் சந்திக்கின்ற இடர்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

சமகாலத்தில் போராளிகள் மீதான பாதுகாப்புத் தரப்பினரது கெடுபிடிகள் மற்றும் அண்மைக்காலமாகத் தமிழர் தாயகத்தில் நடைபெற்று வருகின்ற நிலமீட்புப் போராட்டங்கள், காணாமல் செய்யப்பட்டோருக்கான பொறுப்புகூறலில் அரசின் காத்திரமற்ற செயற்பாடு தொடர்பிலும் வடக்கு-கிழக்கில் காணப்படுகின்ற அதீத இராணுவப் பிரசன்னம் மக்களின் அன்றாட வாழ்வில் செலுத்துகின்ற தாக்கம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையில் அதிகாரப்பகிர்வு என்பது தனியே வடக்கு - கிழக்குக்கு மாத்திரமின்றி ஏனைய மாகாணங்களுக்கும் பகிரப்படுவதே இலங்கையில் மிகநீண்ட காலம் புரையோடிப்போன இன்னல்களுக்குத் தீர்வாக அமையும். எதிர்காலத்தில் ஜனநாயக அரசியல் பரப்பில் போராளிகள் பெறுகின்ற தேர்தல் வெற்றிகளே போராளிகளினதும் நிரந்தர பாதுகாப்பு மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்று அமெரிக்கா நம்புவதாகவும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (த)

## நூல் வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப். 5

இணுவில் மூதறிஞர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம் எழுதிய "சித்தர்களும் சிவபூமி மண்ணின் எழுகோலமும்" என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஐ)

# மாவட்டத்தின் சிறு அபிவிருத்திக்கும் கொழும்பிடம் கையேந்தும் நிலமை

## *சரவணபவன் எம்.பி. சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாண மாவட்டத்தின் சிறு உட்கட்டுமான அபிவிருத்திகளைச் செய்வதற்குக்கூட கொழும்பு அரசிடம் கையேந்த வேண்டிய நிலை காணப்படுகிறது. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.



வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசத்துக்கு உட்பட்ட அபிவிருத்திக் கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
இதில் கருத்துத் தெரிவித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிராமஎழுச்சித் திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்புக்குக் கூடுதல் நிதி ஒதுக்கியுள்ளேன்.
மானிப்பாய் - யாழ்ப்பாணம் பொன்னாலை காப்பெற் வீதி சீரமைப்பு குறித்து 2011 இல் இருந்து கொழும்பு அரசிடம் பேசி வருகின்றோம் முடிவுகள் எட்டப்படவில்லை. ஆசிய அபிவிருத்தி வங்கி யின் திட்ட வீதிச் சீரமைப் புக்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் ஆரம்பிக்கும் சாத்தியம் உள்ளது. இதன் மூலம் 226 வீதிகளை யாழ்ப்பாண மாவட்டத்தில் சீரமைக்கலாம்- என்றார்.
நிகழ்வில் உறுப்பினர்கள், சபைச் செயலர்கள் தத்தமது கருத்துக்களை முன்வைத்தனர். (த-50)

---

# போதை ஒழிப்பு அதிகாரிகளுக்கு பாதுகாப்பு அவசியம்

*அரசதலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 5
போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் உயிர் பாதுகாப்புக் குறித்த புதிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின் தேவை எழுந்துள்ளதாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
கொழும்பு இலங்கை மன்றத்தில் நேற்றுமுன்தினம் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் போதைப்பொருள் சுற்றி வளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளைப் பாராட்டி விருது வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அரசதலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
நாட்டுக்குள் கொண்டுவரப்படும் நச்சுத்தன்மை வாய்ந்த போதைப்பொருள்களை கண்டறிதல் மற்றும் அதன் சுற்றி வளைப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான புதிய தொழிநுட்ப உபகரணங்களை விரைவில் சம்பந்தப்பட்ட துறைகளுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.
போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு உலகில் .வேறு நாடுகளில் பயன்படுத்தப்படும் எவ்வித தொழிநுட்ப உபகரணங்களுமின்றி அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் பாராட்டப்படவேண்டியவர்கள் - என்றுகூறினார் என்று அரசதலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (த)

---

# இளைஞனின் சடலத்தின் பாகங்கள் பகுப்பாய்வு

பாணந்துறையில் விடுதியில் சந்தேகத்துக்கிடமாக உயிரிழிந்த இளைஞனின் இறப்புக்கான காரணத்தைக் கண்டய உடற் பாகங்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று பாணந்துறை தெற்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.
கடந்த 27ஆம்அங்கு சடலம் ஒன்று மீட்கப்பட்டது. மாவரல வீதி ரன்வல வரா பிடிய பகுதியை சேர்ந்த மனோஜித் (வயது- 35) என்பவரின் சடலம் மீட்கப்பட்டது.
விடுதியில் 20அறைகள் உள்ளன. பலர் தங்கியிருந்துள்ளனர். உயிரிழந்தவரின் அறையில் மேலும் இருவர் தங்கியிருந்துள்ளனர். அவர்கள் வேலைக்கு சென்று திரும்பியபோது இளைஞன் உயிரிழந்துள்ளமையைக் கண்டு பொலி ஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.
அவரின் உடல்பாகங்களே இரசாயனப் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விசாரணைதொடர்கிறது - என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-71)

---

# மதுப்போத்தல் வைத்திருந்தாரென ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.5
சட்டவிரோதமாக மதுபானப் போத்தல்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பேலியகொட பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடத்திய திடீர் சுற்றிவளைப்பில் அவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 68 போத்தல்கள் மீட்கப்பட்டன.
அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-71)

---

# இலங்கை மின்சார சபைக்கு நீதிமன்று அழைப்பாணை

## *கோட்டை நீதிவான் உத்தரவு*

கொழும்பு, ஏப். 5
மின்சாரத் தடை தொடர்பிலான அறிக்கையைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கு வழங்காமை தொடர்பிலான விடயத்தை ஆராய இலங்கை மின்சார சபையை நீதிமன்றில் முற்படுமாறு கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.
இலங்கை மின்சார சபையின் தலைவர் உள்ளிட்ட அதன் 9 உயர் அதிகாரிகளுக்கே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டு ள்ளது. ஒன்பது பேரும் எதிர்வரும் 9 ஆம் திகதி மன்றில் முற்படுமாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.
பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு நேற்றுமுன்தினம் மன்றில் தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்தே கோட்டை நீதிவான் ரங்க திஸாநயக்க இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.
2018 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி முதல் இதுவரை மின்சாரத்தடை மற்றும் மேலும் பல காரணிகள் தொடர்பிலான ஆவணங்களை வழங்குமாறு பல தடவைகள் கோரியிருந்தும் இலங்கை மின்சார சபை அந்த ஆய்வறிக்கை மற்றும் ஆவணங்களை வழங்கவில்லை என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழு சார்பில் முற்பட்ட சட்டத்தரனிகள் நீதிவானிடம் சுட்டிக் காட்டினர்.
அதன் காரணமாக இலங்கை மின்சார சபைத் தலைவர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் 9 பேர் இந்த வழக்கின் பிரதி வாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அறிவித்தல் அனுப்புமாறு அந்தச் சட்டத்தரணிகள் மன்றைக் கோரினர்.
மன்றில் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிவான், மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார். (த-61)

---

# விஞ்ஞானிப் போட்டிக்காக நால்வர் மலேசியா பயணம்

## *ஜப்பானுக்கு 10 மாணவர் பயணம்*



கொழும்பு, ஏப். 5
மலேசியாவில் நடைபெறவுள்ள பன்னாட்டு இளைஞர் விஞ்ஞானிப் போட்டிக்காக இலங்கையிலிருந்து நான்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்பு கல்வி அமைச்சு தெரிவித்தது.
ரஷ்யா ,ஜேர்மன்,சீனா,நெதர்லாந்து உள்ளிட்ட 35 நாடுகளின் பாடசாலை மாணவர்கள் பங்கு கொள்ளும் 26 ஆவது பன்னாட்டு இளைஞர் விஞ்ஞானிப் போட்டி இந்தமுறை மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 19, 25 ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.
இந்த போட்டிக்காக பாடசாலை, வலய, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளின் போது சிறப்புத் திறமைகளை முன்வைத்த மாணவர்களே தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**10 பேர் ஜப்பானுக்கு**

இதேவேளை, ஜப்பான் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஊடாக நடத்தப்படும் சகுரா விஞ்ஞான வேலைத்திட்டத்துக்கு விஞ்ஞானத் துறையில் சிறப்புத் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்குக் குறித்த வாய்ப்பை வழங்குவதற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்துள்ளது.
2018 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் சிறப்புத் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களில் நேர்முக பரீட்சையின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட 10 பேர் ஜப்பானுக்கு பயணிக்கவுள்ளனர். இந்த வேலைத்திட்டம் ஏப்ரல் 14 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை ஜப்பான் டோக்கியோ நகரில் நடைபெறவுள்ளது.
அதில் பங்குகொள்ளும் மாணவர்களுக்கான வானூர்திப் பயணசீட்டுகள் வழங்கும் நிகழ்வு கல்வி அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாணவர்களுக்குக்கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பயணச் சீட்டுகளை வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் கல்வி அமைச்சின் அதிகாரிகள்பலரும்கலந்துகொண்டனர்என்று கல்வி அமைச்சு தெரிவித்தது. (த)

---

# மின்சார சபை மீது வழக்கு அரசதலைவர் கடும் விசனம்

## *இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்வரை அமைச்சரவைக்கு வரமாட்டார்*

கொழும்பு, ஏப். 5
இலங்கை மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு ஆகியவற்றுக்கிடையிலான பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையில் , அமைச்சரவைக் கூட்டங்களில் தான் பங்கேற்க மாட்டேன் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
மின்சார சபைக்கு எதிராக, பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு. வழக்குத் தாக்கல் செய்துள்ளமை தொடர்பில், கருத்துரைத்த அரசதலைவர், அரச நிறுவனமொன்று மற்றுமொரு அரச நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.
இவ்வாறான செயற்பாடுகள் அந்த நிறுவனம் சரிவடையும் அதே நேரம், நுகர்வோர் பெரும் துன்பங்களுக்கு உள்ளாவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.
இதனிடையே, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சரவைக் கூட்டத்தின் போது, கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

---

# தீர்மானத்துக்குப் பதிலடியாக பாதீட்டை தோற்கடிப்பீர்களா?

## *கூட்டமைப்பிடம் கேட்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன்*

கொழும்பு, ஏப். 5
ஜெனிவாவில் தமிழர் விடயத்தில் அரசு கபடத்தனத்தைக் காட்டி விட்டதாகப் புலம்பும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், மக்கள் நலன்சாராத வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதன் மூலம் அரசுக்குப் பதிலடி கொடுக்க தயாரா?
இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன்.
கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசதலைவர் யார் என்பதைத் தீர்மானிப்பதில் தமிழ்பேசும் மக்களே இராஜதந்திர முடிவுகளை உள்ளார்ந்தமாக எடுக்க வேண்டும்.
வடக்கு - கிழக்கில் கட்சி மறுசீரமைப்புச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் அதேவேளை, சிறிலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியத்தின் மூலமாக மாவட்ட ரீதியாக மக்களின் தேவைகள், அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் ஆராயப்பட்டு வருகின்றது. ஜூலை, அல்லது ஓகஸ்ட் மாதத்தில் தேசிய மாநாடு நடத்தும் திட்டம் உள்ளது - என்றார். (த)

see more news in NEWUTHAYAN.COM

# குண்டு துளைக்காத ஆடை வழங்கி பிரபாவிடம் ராஜீவ்காந்தி ஒப்பந்தம்

## பண்ருட்டி இராமசந்திரன் கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 5

இலங்கை - இந்திய உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதை விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும் என்று, இந்திய முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் கேட்டிருந்தார். புலிகள் இயக்கத்துக்கான 5 கோடி ரூபாவில் 50 ல்ட்சம் ரூபாவுடன் தனது குண்டு துளைக்காத அங்கியையும் ராஜீவ்காந்தி வழங்கியிருந்தார்.

இவ்வாறு தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரனுக்கு நெருக்கமாக இருந்த முன்னாள் அமைச்சரும், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவருமான பண்ருட்டி எஸ்.இராமசந்திரன் 'நியூஸ் டுடே' தொலைக்காட்சிக்கு வழங்கியிருக்கும் பிரத்தியேக நேர்காணலில் தெரிவித்திருக்கின்றார்.

'சமாதான உடன்படிக்கை கொழும்பில் கைச்சாத்திடப்பட்ட போது, நானும் அங்கு நின்றிருந்தேன். எம். ஜி. இராமச்சந்திரன்(எம்.ஜி.ஆர்) தனது பிரதிநிதியாக அந்தநேரம் என்னைக் கொழும்புக்கு அனுப்பியிருந்தார்' என்றும் பண்ருட்டி இராமச்சந்திரன் கூறினார்.

ராஜீவ்காந்தி தன்னுடனும், எம்.ஜி.ஆருடனும், பிரபாகரன் மற்றும் இலங்கைத் தமிழ்த் தலைவர்களுடனும் நடத்திய பேச்சுக் குறித்து நினைவு கூர்ந்த பண்ருட்டி, எம்.ஜி.ஆரைச் சந்தித்து இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கைக்கு அவரின் சம்மதத்தைப் பெறுவதற்காக இலங்கைக்கான முன்னாள் இந்தியத்தூதுவர் ஜே.என். தீக்ஷித்தை அனுப்பியிருந்தார். நானும் அந்தச் சந்திப்பின் போது உடனிருந்தேன். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு தனியலகுக்குத் தேர்தல்களை நடத்துவது உட்பட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக உடன்படிக்கை அமைந்திருந்தது. அந்த உடன்படிக்கை இலங்கைத் தமிழர்களின் தமிழ்த் தாயகக் கோட்பாட்டை மறைமுகமாக முதற்தடவையாக ஏற்றுக்கொண்டது. தமிழ்ப் பகுதிகளில் ஒரு மாகாணசபையின் ஊடாக விடுதலைப் புலிகளும், ஏனைய தமிழ்த் தரப்பினரும் ஆட்சி செய்வதற்கான ஏற்பாட்டை உடன்படிக்கை கொண்டிருந்தது. அதன் உத்தரவாதத் தரப்பாக இந்திய அரசு விளங்கியது. உடன்படிக்கையொன்றை உத்தரவாதப்படுத்துமாறு இன்னொரு அரசிடம் கேட்கப்பட்டது உலகில் அன்று வழமைக்கு மாறானதாக இருந்தது என்று கூறினார்.

ராஜீவ் காந்தி வேண்டுகோள் விடுத்த தன் பிரகாரம் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதை எம்.ஜி.ஆர் விரும்பியிருந்த போதிலும், அதனைப் பிரபாகரன் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அவரின் நம்பிக்கையை வென்றெடுக்க எம்.ஜி.ஆரால் முடியாமல் போய்விட்டது. பிரபாகரனுடன் அவர் தொடர்ச்சியாகப் பேசினார். பிரபாகரனின் மனதை மாற்றுவதற்குத் தவறியதையடுத்து எம்.ஜி.ஆர் பெரும் குழப்பத்துக்கு உள்ளானார். தனித்தமிழ் ஈழம் என்பதற்குக் குறைவான எதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிடிவாதமாக இருந்தார் பிரபாகரன்.

'ராஜீவ் காந்தியை பிரபாகரன் சந்தித்த போது உடன்படிக்கையில் விடுதலைப் புலிகள் கைச்சாத்திட வேண்டுமென்று இந்தியா கேட்காது என்று அவர் கூறினார். அமைதியான முறையில் உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதை விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும் என்பதை மாத்திரமே இந்தியா விரும்புகின்றது என்று அவர் கூறினார்.

'கொழும்பில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கை இலங்கைத் தமிழருக்கு மிகக் கூடுதலான உரிமைகளை வழங்குவதாக உணர்ந்து பௌத்த பிக்குமாரும், சிங்களத் தலைவர்களும் அதற்கு எதிராக இருந்தார்கள் என்பது வெளிப்படையானது.

மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்காவுக்கு எம்.ஜி.ஆரை அனுப்புவதற்கான ஏற்பாடுகளையும் இந்திரா காந்தி செய்தார். அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நாள்களிலேயே இந்திராகாந்தி கொல்லப்பட்டார்.' என்று இராமசந்திரன் நேர்காணலில் கூறினார்.

# ரணில் சூழ்ச்சிக்காரன் என்பதால்தான் 2004 தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்

## அமைச்சர் ஜெயவிக்கிரம பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 5

பிரபாகரனின் உடன்படிக்கைக்கு வளைந்துகொடுக்க முடியாது. புலிகளை ஆதரிக்க முடியாது. நாட்டைக் காவுகொடுக்க முடியாது என்று ரணில் விக்கிரமசிங்க கூறிய விடயங்களால்தான், அவரைச் சூழ்ச்சிக்காரன் எனக்கூறி 2004 தேர்தலுக்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் பிரபாகரன் வடக்கில் தமிழ் மக்களை வாக்களிக்க விடாது தடுத்தார். இதுவே அந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தோல்வியடையக் காரணம்.

இவ்வாறு அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மக்களுக்குச் சிங்களம் தெரியாது போனதும் தெற்கு மக்களுக்கு தமிழ் தெரியாது போனதுமே இந்த நாட்டில் குழப்பம் உருவாகக் காரணமாக அமைந்தது. 1956 ஆம் ஆண்டு தொடக்கம் முரண்பாடுகள் ஏற்பட இதுவே காரணமாக அமைந்தது. முதல் குழப்பம் இங்கிருந்தே ஆரம்பித்து போரில் முடிந்தது.

ஆகவே மொழிப் பிரச்சினை ஒன்றே நாட்டில் குழப்பத்துக்குக் காரணம். எமது ஆட்சியில் அமைச்சர் மனோ கணேசன் மற்றும் நாம் அனைவரும் இணைந்து மொழி பிரச்சினைக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலமொழி என மூன்று மொழிப்பிரச்சினைகளையும் நாம் தீர்க்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். மும்மொழிகளையும் கற்பிக்கும் ஆசிரியர்களை நியமித்தும் வடக்கிலும் தெற்கிலும் கலப்பு மத நிகழ்வுகளை நடத்தவேண்டும். வடக்கில் பௌத்த மாநாடுகள் மற்றும் தெற்கில் இந்து கலாசார நிகழ்வுகளை நடத்துவோம். அதுவே நல்லிணக்கம்.

ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் இனவாதத்தைத் தூண்டவில்லை. ஒரு உண்மையை இப்போது கூறுகின்றேன். 2004 ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தலில் களமிறங்கியபோது பிரிட்டனிலிருந்து ஒருவர் என்னைத் தொடர்பு கொண்டார். என்னுடன் மலிக் சமரவிக்கிரமவும் வாகனத்தில் இருந்தார். இந்தத் தேர்தலில் வேட்பாளர்கள் யார் என்று தொடர்பு கொண்டவர் வினவினார். மகிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் என்றேன்.

சிறிது நேரம் பேசிய அவர், வடக்கில் ஒரு பாதிரியார் ஒருவரைக் கூறி அவரை சந்தித்துப் பேச்சு நடத்தக்கூறினார். எனினும் அப்போது ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளை எதிர்த்ததுடன் அவர்களின் எந்தவொரு உடன்படிக்கைக்கும் வளைந்துகொடுக்க முடியாது. புலிகளை ஆதரிக்க முடியாது. நாட்டைக் காவுகொடுக்க முடியாது என்று கூறினார்.

அதனால்தான் அந்தத் தேர்தலில் வாக்களிக்கவேண்டாம் என்று பிரபாகரன் கூறினார்.

நாம் இனவாதத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் சிறப்பு நீதிமன்றம் உள்ளது. இனவாதம், மதவாதம் பேசினால் அந்த நீதிமன்றில் தண்டனை விதிக்கப்படும். அவ்வாறான ஒரு நீதிமன்றை இங்கும் உருவாக்க வேண்டும். இனவாதத்தை, மதவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகள் அனைத்தையும் தடுக்க வேண்டும். இந்த நாட்டில் இரத்தக்கறை படிவதை இடமளிக்கக் கூடாது. எந்த மதமும் நாட்டில் போரை உருவாக்க வலியுறுத்தவில்லை - என்றார். (த)

# தொழிலாளர் சம்பளம்: சபையில் வாக்குவாதம்

கொழும்பு, ஏப்.5

பெருந்தோட்ட மக்களின் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்புத் தொடர்பில் அமைச்சர் திகாம்பரம் ராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் மகிந்த அமரவீர ஆகியோருக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு -செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் மகிந்த அமரவீர, பெருந்தோட்ட மக்கள் ஆயிரம் ரூபாகோரி சம்பளப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அமைச்சர்கள் ஆதரவளித்திருந்தனர். கோரிக்கை வெற்றிபெற்றதா என்று சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்கின்றேன் என்று ஆளும் கட்சியிடம் கேள்வி எழுப்பினார்.

அமைச்சர் திகாம்பரம், பெருந்தோட்ட மக்களுக்கு ஆயிரம் ரூபா வழங்காவிட்டால் அமைச்சுப்பதவிகளில் இருந்து விலகுவதாக நான் ஒருபோதும் தெரிவிக்கவில்லை. அரசிடமிருந்து 50 ரூபா பெற்றுக்கொடுப்பதாகவே தெரிவித்தேன். அதனைப்பெற்றுக்கொடுக்க அமைச்சர் நவீன் திசாநாயக்க தற்போது அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ளார். அடுத்துவரும் மாதத்தில் இருந்து அது வழங்கப்படும் என்றார்.

மீண்டும் மகிந்த அமரவீர, எமது பக்கத்தில் இருந்த வடிவேல் சுரேஷ் ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுப்பதாகத் தெரிவித்தே மறுபக்கத்துக்குச் சென்று தற்போது ராஜாங்க அமைச்சராக இருக்கின்றார். அனைவரும் அரசியலுக்காக ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பைப் பயன்படுத்தினார்களே தவிர அதனை அந்த மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கவில்லை என்றார். மீண்டும் குறுக்கிட்ட திகாம்பரம், நீங்கள் அரசில் இருக்கும்போது எதுவும் தெரிவிக்கவில்லை. ஆனால் எதிர்க்கட்சியில் இருக்கும் போதே கேள்வி கேட்கின்றீர்கள் - என்றார்.

வடிவேல் சுரேஷ், மகிந்த அமரவீர பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் கதைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். 20 வருடங்கள் அதிகாரத்தில் இருந்த நீங்கள் தோட்ட மக்களுக்குச் சேவைசெய்ய நினைத்திருந்தால், மலையகம் சிங்கப்பூர் போன்றாகியிருக்கும். ஆயிரம் ரூபா அல்ல இரண்டாயிரம் ரூபா கொடுக்கக்கூடிய நிலமை இருந்தது. என்றாலும் எதுவும் செய்யவில்லை - என்றார். (த-31)

# மஹறவை - ஓமந்தையிடையே தொடருந்துப் பாதை சீரமைப்பு

## அமைச்சரவை அனுமதி வழங்கியது

கொழும்பு, ஏப். 5

மலையகம் மஹறவையில் இருந்து ஓமந்தை வரையிலான 128 கிலோமீற்றர் நீளமான தொடருந்துப் பாதையை இந்திய நிதியுதவி, ஒத்துழைப்புடன் சீரமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு மாகாணத்துக்குச் செயற்றிறன் பாதுகாப்பு மற்றும் சிறந்த பயணிகள் மற்றும் பொருள்கள் போக்குவரத்துகளை மேற்கொள்ளும் எதிர்பார்ப்புடன் இந்தத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மணித்தியாலயத்துக்கு 100 கிலோமீற்றர் வேகத்துடன் தொடருந்துதைச் செலு த்தவும் அனுமதிக்கப்பட்டது. (த)

# 17 மில்லியன் டொலரையே அரசு கொண்டுவந்துள்ளது

## நாமல் எம்.பி. சாடுகிறார்

கொழும்பு, ஏப். 5

ஆயிரக்கணக்கான மில்லியன் டொலரை முதலீடாக நாட்டுக்குக் கொண்டுவருவதாக வாக்குறுதியளித்த அரசு இதுவரை 17 மில்லியன் டொலரையே கொண்டுவந்திருக்கின்றது. அதனால் அம்பாந்தோட்டை எண்ணை சுத்திகரிப்பு நிலையமும் மக்களை ஏமாற்றும் வேலைத்திட்டமே என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வரவு- செலவு திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச அரசின் முதலீடுகளைக் கடுமையாக விமர்சித்துக்கொண்டே இந்த அரசு அதிகாரத்துக்கு வந்தது.

அரச நூறுநாள் வேலைத்திட்டத்தின்போது நாட்டின் பொருளாதார வேகத்தை 8வீதம் வரை அதிகரிப்பதாக தெரிவித்தனர். மத்திய வங்கி ஆளுநரின் கருத்தின் பிரகாரம் பொருளாதார வேகம் 3.12 வரைக்கே இருக்கின்றது.

அம்பந்தோட்டையில் சிமெந்துத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு 200 ஏக்கர் காணியில் அடிக்கல் நடப்பட்டது. அதற்குச் சுற்றுச்சூழல் அதிகாரிகளின் அறிக்கை இதுவரை பெற்றுக்கொள்ளப்படவில்லை. நாட்டுக்கு முதலீட்டாளர்கள் வருவதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. மக்களை ஏமாற்ற வேண்டாம் - என்றார். (த-31)

# அரசியலுக்கு வந்தது கொள்ளையடிக்க அல்ல!

தோட்டபுறத்தில் பிறந்து வாழ்ந்த நான் அரசியலுக்கு வந்த நோக்கம் மக்களின் பணத்தைக் கொள்ளையடிப்பதற்கு அல்ல. எமது மக்களுக்கு சேவைகளை வழங்கவே என்று அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஹற்றன் கினிக்த்தேன மத்திய மகாவித்தியாலய மைதானத்துக்கு 13மில்லியன் ரூபா செலவில் அடிக்கல் நடும் நிகழ்வில் அவர் இவ்வாறு தெரிவித்தார். (த)

# போரால் இடம்பெயர்ந்தோரில் 577 குடும்பங்கள் முகாம்களில்

## தனியார் காணிகளை கொள்வனவுசெய்து அவர்களுக்கு வழங்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப்.5

வடக்குக் கிழக்கில் போர் காரணமாக இடம்பெயர்ந்தவர்களில், 577 குடும்பங்கள் தற்போதும் உள்ளூரிலுள்ள 25 நலன்புரி முகாம்களில் வாழ்க்கையைக் கழிக்கின்றனர். அவர்களுக்கென தனியாரிடம் காணி கொள்வனவு செய்யும் நிதி ஒதுக்கீட்டுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இவர்களுள் 381குடும்பங்கள் காணிகளை இழந்த குடும்பங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச காணி போதுமானளவு இல்லாததால் அவர்களை மீளக்குடியமர்த்த அரசு காணிகளை ஒதுக்கீடு செய்வது பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது.

இதனால் இந்தக் குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்குத் தேவையான காணியை மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டுக்கு அமைய தனியார் உரிமையாளர்களிடம் கொள்வனவு செய்வதற்காகத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்யும் நோக்கில் தேசிய கொள்கை பொருளாதார அலுவல்கள் மீளக்குடியமர்த்தல் மற்றும் மறுவாழ்வு மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார். அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (த)

# ரீ.வி. நாடகம் பார்த்து பொய்யுரைத்த சிறுவன்

## பொலிஸ் விசாரணையில் உண்மையை உளறினான்

யாழ்ப்பாணம், ஏப். 5

நண்பர்களுடன் நீண்ட நேரம் விளையாட்டில் ஈடுபட்டிருந்த சிறுவன், பெற்றோரிடம் சென்று தன்னை யாரோ கைஏஸ் வானில் கடத்திச் சென்றனர் என்று கூறியதால் பரபரப்பு ஏற்பட்டது. எனினும், பெற்றோர் கண்டிப்பர் என்பதால் அவர்களிடமிருந்து தப்புவதற்காக அவ்வாறு கூறினேன் என்றும் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்த்தால் அவ்வாறு பொய் சொல்லலாம் என்பதைத் தெரிந்துகொண்டேன் என்றும் பொலிஸ் விசாரணையில் உண்மையைக் கூறியுள் ளான் சிறுவன்.

இந்தச் சம்பவம் வடமராட்சி மாலு சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

தரம் 8இல் கல்வி கற்கும் சிறுவன் விளையாடச் சென்ற நிலையில் இரவாகியும் வீடு திரும்பவில்லை. பெற்றோர் பதற்றமடைந்தனர். பல இடங்களிலும் தேடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இரவு 8 மணியை அண்டி வீடு திரும்பிய சிறுவன் தான் வீதியில் பயணித்த சமயம் வான் ஒன்றில் வந்த மூவர் தன்னை வானில் தூக்கிச் சென்று சன்நிதி கோவிலுக்கு அருகில் தள்ளிவிட்டுச் சென்றனர் என்று தெரிவித்துள்ளான்.

இதனால் வர்த்தகரான தந்தை பதற்றமடைந்தார். நெல்லியடிப் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று முறைப்பாடு செய்தார். பொலிஸார் சிறுவனிடம் விசாரணை செய்தனர். கைஏஸ் வாகனத்தில் வந்திருந்த மூவரும் தலைக் கவசம் அணிந்திருந்தனர் என்பது உட்பட மாறுபட்ட தகவல்களைச்சிறுவன் பொலிஸாரிடம் கூறியுள்ளான். பொலிஸார் சிறுவனை எச்சரித்து விசாரணை செய்தபோதே இது தெரியவந்தது. (த-105)

# மூதூரைப் பிரிப்பதால் பங்கமேற்பட வாய்ப்பு

## நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

மூதூர், ஏப். 5

மூதூர் பிரதேச செயலகப் பிரிவை மூதூர், தோப்பூர் என இரண்டாக்கும் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யும் முயற்சிகள், தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்துக்குப் பங்கமேற்படுத்தும் என்று திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி. சிவகுமார் தெரிவித்தார்.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின்திருகோணமலை நகரசபை உறுப்பினரான அவர், விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர்களின் பிரதிநிதித்துவம், இருப்பை அலட்சியம் செய்யாதீர்கள். இலங்கையின் வெவ்வேறு இனமத சமூகங்களின் பரம்பலையும் அவற்றின் பிரதிநிதித்துவங்களை, பாதுகாக்கும் வகையில் பிரதேச மற்றும் மாகாண எல்லைகள் அமைய வேண்டியது இலங்கையில் இன்று காலத்தின் கட்டாயமாக நிலவுகிறது.

இன உறவுகள் இலங்கையில் சீராக இல்லை என்பது யதார்த்தம். அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? பரஸ்பரம் சமூகங்களிடையே அவநம்பிக்கையைப் போக்கும் விதமாக செயற்பட வேண்டும்.

தமிழ் -முஸ்லிம் சமூகத் தலைவர்கள் பரஸ்பரம் அனுசரித்து உரிமைகளை மதித்து வாழ்வதற்கான ஏதுநிலைகளை உருவாக்க வேண்டும். பேரினவாத அச்சுறுத்தல் சிறுபான்மை சமூகங்களுக்கெதிராக இன்றளவில் தொடருகிறது.

இதனைப் புரிந்து கொண்டு செயற்படுவது அனைத்து சமூகங்களின் பொறுப்புள்ள தலைமைகளின் கடமை. சிறுபான்மை இனங்களின் ஒற்றுமையால் மட்டும் நாம் வெற்றி பெறமுடியும். எனவே தமிழர்- முஸ்லிம்கள் என்ற பேதத்தைக் களைந்து அனைவரும் தமிழ்பேசும் இனமாகச் செயற்படுவோம் - என்றுள்ளது. (த-40)

# செல்வம் அடைக்கலநாதனின் பேச்சு புண்ணில் தீயால் சுடுவதுபோன்றது

## மறவன்புலவு சச்சிதானந்தம் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

திருக்கேதீச்சர சம்பவம் நாட்டில் வாழும் 18 லட்சம் இந்து மக்களுக்கும் ஈட்டியால் குத்திய புண்ணாக இருக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பேச்சு, அந்தப் புண்ணில் தீப்பிழம்பால் சுடுவது போல் இருக்கிறது. இவ்வாறு மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.

'சைவ மக்கள் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன்' என்னும் தலைப்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு' என்ற வரிகளைத் தெரிந்தவர்கள் செல்வம் அடைக்கலநாதனின் அறிவுக் குறைவை மிக எளிதாகக் கண்டறிவார்கள்.

கத்தோலிக்கர்களால் திட்டமிட்ட நிகழ்வாக திருக்கேதீச்சர அலங்கார வளைவு உடைக்கப்பட்டது.

பாதிரியார் என்ற போர்வையில் வந்த மார்க்கசு அங்கே நின்று உடைப்பவர்களை ஏவிக் கொண்டிருப்பதைக் காணொலிகளில் பார்க்கலாம், கேட்கலாம்.

உடைப்புக்கு முன்பே பாதிரியார் அங்கு வந்து விட்டார். அவர் அங்குள்ள ஊடகவியலாளரை மிரட்டியி ருக்கிறார். மற்றவர்களையும் மிரட்டியிருக்கிறார். தன் அடியாள்களை உடைக்குமாறு ஆணையிட்டிருக்கிறார்.

இதை எல்லாம் மறைத்துச் சைவர்களின் மனதைப் புண்படுத்திய செல்வம் அடைக்கலநாதனுக்குச் சைவ மக்கள் ஒருபொழுதும் வாக்களிக்கக் கூடாது.

இயேசுவைக் 'கடவுள்' என்கிறார். முட்டாள்கள்தான் இப்படிப் பேசுவர்

தன்னை இறைத்தூதர் என்றும் தனக்கு மேலே ஒரு கடவுள் இருப்பதாகவும் இயேசுவே சொல்லிக் கொள்கிறார். தன்னைக் கடவுளாக அவர் ஒருபொழுதும் அறிவித்ததே இல்லை.

விவிலியத்தைப் படிக்காதவர்கள் சிறுவயதிலேயே படிப்பை விட்டு இயேசுவின் கொள்கைக்கு எதிராக இயேசுவின் போதனைகளுக்கு எதிராக மலைப்பிரசங்கத்தில் கூறியவைக்கு எதிராக ஆயுதம் தூக்கிய வர்கள் சைவ சமயம் என்றால் மருந்துக்குக்கூட தெரிந்திருக்காதவர்கள் சைவ கொள்கைகளை அறிந்திருக்காதவர்கள் சிவனைப் பற்றிப் பேச அருகதை இல்லாதவர்கள்.

இவர்கள் எல்லாம் சிவனைப் பற்றியும் இயேசுவைப் பற்றியும் பேசுகிறார் என்றால் மன்னார் மக்கள் செய்த மாபெரும் தவறே. இவர்களைப் போன்றவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய கத்தோலிக்க மக்கள் பரிதாபத்துக்குரியவர்கள். சைவர்களின் அனுதாபத்துக்கு உரியவர்கள் என்றுள்ளது. (த.105)

# புது வருடத்துக்குப் பின்னர் நிதி இல்லை என்பது பொய்

## பந்துல எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 5

அரச ஊழியர்களுக்குப் புது வருடப் பிறப்புக்கு பிறகு கொடுப்பனவுகளை வழங்க முடியாதுள்ளது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் வஜிர அபேவர்த்தன ஆகியோர் கூறுவது பொய். கடந்த ஜனவரியில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட இடைக்கால வரவு - செலவு திட்டம் இந்தமாதம் முழுவதும் நடைமுறையில் இருக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு வஜிராஷ்ரம விகாரையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'நிதி ஒதுக்கீடு தோற்கடிக்கப் பட்டமைக்கும் ஊழியர்களுக்குக் கொடுப்பனவுகளை வழங்க முடியாமைக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது - என்றார். (த-31)

# போதனா பணிப்பாளருக்கு மேலதிக கடமை மாகாண அதிகாரத்தை பறிக்கும் சூழ்ச்சியே

## முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் தவராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

மாகாணத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் கொழும்புக்குப் பறிக்கும் சூழ்ச்சிகரத் திட்டத்தின் புதிய வடிவமாகவே, யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளரை யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பணியாற்ற அனுமதிக்கும் செயல் அமையும் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் தவராசா மேலும் தெரிவித்ததாவது:

மாகாணத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் பறித்தெடுப்பதில் கொழும்பு எப்போதும் சூழ்ச்சிகரத் திட்டத்துடனே செயற்படுகின்றது. ஏற்கனவே காணி, மாவட்டச் செயலகம் உள்ளிட்ட அதிகாரங்களை விழுங்கி விட்டது. பின்னர் பிரபல பாடசாலைகளையும் தேசிய பாடசாலை என்னும் பெயரில் விழுங்கவும் முயற்சிக்கிறது. இந்த நிலையில், புதிய வடிவமாக சுகாதாரத் திணைக்களத்தின் மீதும் கண்பார்வை திரும்பியுள்ளதையே, யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளரே பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பணியாற்ற அனுமதிக்கும் செயல் அமையும்.

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் உள்ளிட்டவர்களின் நியமனச் சிபார்சு ஆளுநருக்கு உட்பட்டதே அன்றி கொழும்பு அரசுக்கு உட்பட்டதல்ல. இரு அரசின் கீழும் ஏக காலத்தில் ஒரு அலுவலர் ஒருபோதும் பணியாற்ற முடியாது. பணியாற்றவும் கூடாது.

மாகாண சபை முறமை வந்தகாலம் தொடக்கம் அகில இலங்கை சேவையாளர்களை கொழும்பு மாகாணத்துக்கு விடுவிக்க வேண்டும். அவர்களை எங்கே நியமிப்பது என்பதனை மாகாணமே தீர்மானிக்க வேண்டும். ஏனைய அனைத்துச் சேவைகளும் அவ்வாறே இடம்பெறுகின்றன. மருத்துவ சேவையில் மட்டும் மருத்துவர்களின் வற்புறுத்தலின் பெயரில் இந்த அதிகாரம் தொடர்ந்தும் மத்தியின் கீழேயே உள்ளது. இது அரசமைப்பை மீறும் செயல் - என்றார். (த-105)

# முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை

## எதிரணி உறுப்பினர் அளுத்கமகே தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.5

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அரசு எந்தச் சலுகையையும் வழங்குவதில்லை. அவர்களை ஊக்குவிக்கும் எந்த வேலைத்திட்டமும் அரசிடம் இல்லை. அதனால்தான் முதலீட்டாளர்கள் வருவதில்லை என்று எதிர்க்கட்சி உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க் கிழமை இந்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகை முக்கியம். இந்த அரசில் வெளிநாட்டுமுதலீட்டாளர்களைக் கவரும் எந்த வேலைத்திட்டமும் இல்லை.

நாட்டுக்கு வந்த சிறந்த முதலீடுதான் 1.4பில்லியன் டொலர் துறைமுக நகரம். அந்தவேலைத்திட்டத்தை இந்த அரசு ஆட்சிக்கு வந்ததுடன் நிறுத்தியது. ஒரு வருடத்துக்கு பின்னர் மீண்டும் அரசு ஒப்பந்தம் செய்து துறைமுக நகர வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது.

அரசதலைவருக்கும் தலைமை அமைச்சருக்குமிடையில் பிரச்சினை. இவ்வாறான நிலையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எவ்வாறு வருவார்கள்?. அம்பந்தோட்டையில் 4டொலர் பில்லியன் கொண்டுவருவதாக வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இது அரசு மக்களை ஏமாற்றுவதற்காக தெரிவிக்கப்பட்டது.

மலிக் சமரவிக்ரமவுக்கு இருக்கும் வெளிவேலைகள் காரணமாக பன்னாட்டு வர்த்தக அமைச்சின் வேலைத் திட்டங்களை மேற்கொள்ளமுடியாது. பொருத்தமானஒருவருக்குஅமைச்சைக் கையளித்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும் - என்றார். (த-31)




## நண்பரை கொன்றாரென முன்னாள் சிப்பாய் கைது

கொழும்பு, ஏப். 5

நண்பரொருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தார் என்று குற்றச்சாட்டில் முன்னால் இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சியாம்பலாண்டுவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மொனராகலைப் பகுதியின் தொம்பகாவெலையைச் சேர்ந்த ஆர்.ஏ. சமந்த பிரியபால என்ற 28 வயதுநிரம்பியஇளைஞனே நேற்றுமுன்தினம் கொல்லப்பட்டார். சுய விருப்பில் பணியிலிருந்து விலகியிருந்தார். இருவருக்குமிடையே ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பாகி கொலையில் முடிந்ததுஎன்று தெரிவிக்கப்பட்டது. (த)

## இலங்கை இறப்பரில் முதலிடுகிறது சீனா!



கொழும்பு, ஏப். 5

சிறிலங்காவில் சிறப்பு இறப்பர் அபிவிருத்தி வலயம் ஒன்றையும், இறப்பர் கைத்தொழில் வலயம் ஒன்றையும், அமைப்பதில் சீன அரசு முதலீடு செய்யவுள்ளது.

சீனாவின் ஹய்னான் இறப்பர் அபிவிருத்தி வலயத்தில் இருந்து வந்திருந்த சிறப்புக் குழுவினர், இது தொடர்பாக இலங்கையின் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திசநாயக்கவுடன் நேற்று பேச்சு நடத்தியுள்ளனர்.

சீனக் குழுவுக்கு, ஹய்னான் மாகாணத்தின் அயலுறவுத் துறை மற்றும் அனைத்துலக பொருளாதார உறவுகளுக்கான தலைவர் ஜிங்லீ ஹறன் தலைமை தாங்கினார்.

இந்தப் பேச்சுக்களை அடுத்து, இறப்பர் வலயத்தை அமைப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு இந்த மாத இறுதியில் சீனாவில் கையெழுத்திடப்படவுள்ளது. இதில் அமைச்சர் நவீன் திசநாயக்க கலந்து கொள்ளவுள்ளார். (ம)

## மின்வேலியில் சிக்கி ஒருவர் சாவு

கொழும்பு, ஏப்.5

பலங்கொடைப் பகுதியில் மிருகங்களை வேட்டையாடுவதற்காக சட்ட விரோதமாக அமைக்கப்பட்டிருந்த மின் வேலியில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்த னர்.

ஹோபநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிங்கியாம்கொட ஹொரன்கந்துர பகுதியின் வயல்வெளிக்கருகில் நேற்று முன்தினம் இது இடம்பெற்றது. உடவெல பகுதியைச் சேர்ந்த சுமித் பிரியதர்ஷன (வயது45) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவர் மிருகங்களை வேட்டையாடுவதற்கென வயல்வெளிக்கருகில் சட்ட விரோதமான வேலியொன்றை அமைத்துள்ளார். அதற்கான மின் இணைப்புச் செய்யும்போதே உயிரிழந்துள்ளார் என்று தெரிய வந்துள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தினர். (த-71)

## அறிக்கையிட மங்களவுக்கு எந்த அதிகாரமுமில்லை!

### குணவர்த்தன எம்.பி. கண்டனம்

கொழும்பு, ஏப். 5

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை குறித்த தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமை தொடர்பில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார். வெளிவிவகார அமைச்சராக இல்லாத நிலையில் இத்தகையதொரு அறிக்கையை வெளியிடுவதற்கு அவருக்கு எவ்வித உரிமையும் இல்லை. அமைச்சரின் இச்செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமை தவறானது என்பதே அரசதலைவர் உள்ளிட்ட பலரின் கருத்து.

இரு அமைச்சுக்களுக்கான வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டைத் தோற்கடித்திருக்கின்றோம். அவ்வாறெனின் அரசின் வரவு - செலவுத்திட்டத்தில் ஒரு பகுதி இல்லை என்பதே உண்மை. தற்போது தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நாங்கள் அளித்த வாக்குறுதியை மீறி செயற்பட்டுள்ளோம் என்று கூறுகிறார்.

வாக்கெடுப்பைக் கோருவதெனின் முன்னரே அறிவிப்பதாக நாங்கள் கூறவில்லை. எந்தவொரு வாக்குறுதியையும் மீறி நாங்கள் செயற்படவில்லை என்பதைக் கூறவிரும்பு கின்றோம்.

நாட்டில் வறட்சி பிரச்சினையாகவுள்ளது. பல மாவட்டங்களிலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குடிதண்ணீர் கிடைக்கப் பெறும் வரை காத்திருக்கின்றார்கள். அதிக உஷ்ணம் காரணமாக மனித உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளன - என்றார். (த-31)

## 200 அடி பள்ளத்தில் வீழ்ந்தது பேருந்து: 17 பேர் காயம்

பூனாகலையிலிருந்து - கொஸ்லந்தை என்ற இடத்துக்குச் சென்று கொண்டிருந்த பேருந்து பெட்டிகலை என்ற இடத்தில் 200 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்து நேற்றுமுன்தினம் முற்பகல் நடந்துள்ளது.

விபத்தில் நடத்துநர் உட்பட 17 பேர் காயமடைந்தனர். 10 பேர் தியத்தலாவை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். 7 பேர் பதுளை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். 10 பேர் கொஸ்லந்தை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர்.

பதுளை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த 7 பேரில் மூவரது நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## சம்பள அதிகரிப்பில்லை என கூறுவது நியாயமற்ற செயல்

### டி சில்வா எம்.பி. சுட்டிக்காட்டு



வரவு - செலவு திட்ட நிதி ஒதுக்கீடு தோற்கடிக்கப்பட்டமையைக் காரணம் காட்டி அரச அதிகாரிகளுக்குச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க முடியாது என்று அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ள கருத்து நியாமற்றது என்று சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தோற்கடிக்கப்பட்டுள்ளமைக்கு அரசும் பொறுப்பான அமைச்சருமே பொறுப்புக் கூற வேண்டியவர்கள். அதனைவிடுத்து அரச அதிகாரிகளுக்குக் கொடுப்பனவு வழங்க முடியாது என்று பொறுப்பற்ற கருத்துக் கூற முடியாது.

அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் பொறுப்பின் கீழுள்ள பெருநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடும் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இந்த இரு நிதி ஒதுக்கீட்டை மீண்டும் சமர்ப்பித்து இறுதி வாக்கெடுப்பில் அதனை நிறைவேற்றிக் கொள்ளப் போவ்தாக அவர்கள் இருவரும் தெரிவித்து வருகின்றனர். அதனை மீண்டும் தோற்கடிப் போம்.

இதுவே இந்த ஐக்கிய தேசிய கட்சி அரசினுடைய பொறுப்பற்ற தன்மையைத் தெளிவாகக் காண்பிக்கின்றது.

அரசின் இயலாமையையும், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்படும் ஒற்றுமையின்மையையும் வெளிப்படுத்துகின்றது - என்றார். (த-61)



## நுவரெலியாவில் சிறப்புற நடந்த வசந்த கால நிகழ்வு

கொழும்பு, ஏப். 5

நுவரெலியாவின் வசந்த கால நிகழ்வுகள் உத்தியோகபூர்வமாக கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகின. நுவ்ரெலியா முதன்மை வீதியில் நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்திய இசை நிகழ்ச்சியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.


நுவரெலியா மாநகர சபை முதல்வர் சந்தணலால் கருணாரத்ன தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிறப்புப் பிர தேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார். வருடந்தோறும் நடைபெறும் மலர் கண்காட்சி, படகோட்டம், கார் பந்தய ஓட்டப் போட்டி, குதிரைப்பந்தயம், கிரிக்கெட் சுற்றுப் போட்டி, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி, கிரகறிவாவியில் நீர் விளையாட்டு, சேற்றில் மோட்டார் ஓட்டம், மோட்டார் சைக்கிள் தடை தாண்டல் போட்டி மற்றும் நாள்தோறும் இசை நிகழ்ச்சிகள் என களியாட்ட விழாக்களும் நடைபெற்றன என்று நகர முதல்வர் மேலும் தெரிவித்தார். (த)

see more news in NEWUTHAYAN.COM



# மதம், மொழி, பிரதேசப் பாகுபாடு காட்டுபவர்களைப் புறக்கணிப்போம்

## விஞ்ஞானிகள் ஒன்றிணைந்து குரல்



புதுடெல்லி,ஏப்.5

எதிர்வரும் இந்தியத் தேர்தலை முன்னிட்டு மதம், மொழி, பிரதேசரீதியாகப் பாகுபாடு ஏற்படுத்துபவர்களைப் புறக்கணிப்போம் என்று இந்திய விஞ்ஞானிகள் நாட்டு மக்களுக்குக் கோரிக்கை விடுத்தனர்.

இந்தியக் கல்வி அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், இந்தியப் புள்ளியியல் நிறுவனம், அசோகா பல்கலைக் கழகம், உயிரியல் அறிவியல் தேசிய மையம், இந்தியத் தொழில்நுட்பக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த 150 விஞ்ஞானிகளே இவ்வாறு அறிக்கை வெளியிட்டனர்.

அதில் அவர்கள், "வன்முறை சாதி, மதம், இனம், மொழி, பிரதேசரீதியாக மக்களிடையே பாகுபாடு ஏற்படுத்துபவர்களைப் புறக்கணிப்போம்.

அதனால் அனைத்து இந்தியக் குடிமக்களுக்கும் ஒரு கோரிக்கை விடுக்கிறோம். புத்திசாலித்தனத்துடன் வாக்களியுங்கள். உள்ளடக்கத்துடன் விவாதம் செய்யுங்கள். ஆதாரங்களுடன் விமர்சியுங்கள். அனைத்து மக்களும் நம்முடைய அரசமைப்பின் முக்கியத்துவத்தையும் அறிவியல் கோட்பாடுகளையும் நினைவில் கொள்ளுமாறு வேண்டுகிறோம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கு முதலில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டிய தருணம் இது என்று இந்திய இயக்குநர்களும், வெறுப்பரசியலுக்கு விடை கொடுப்போம் என்று எழுத்தாளர்களும் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## Google கூகுளில் பா.ஜ.க. முதலிடம் காங்கிரசுக்கு ஆறாவது இடம்

புதுடெல்லி.ஏப்.5


கூகுள் இணையத்தளத்தில் அரசியல் விளம்பரங்கள் செய்வதில் பா.ஜ.க. கட்சி முதலிடம் பிடித்துள்ளது. இதில் காங்கிரஸ் ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளது. கணக்கெடுப்பொன்றின்படி எல்லாமாக ரூ.3.76 கோடி (இந்திய மதிப்பில்) அளவில் விளம்பரத்துக்காகக் கூகுளுக்குச் செலவிடப்பட்டுள்ளது. இதில் பா.ஜ.க. ரூ.1.21 கோடி செலவிட்டு முதலிடத்தைப் பெற்றுள்ளது. காங்கிரஸ் ரூ.54 ஆயிரத்து 100 மட்டுமே செலவிட்டு ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளது.

## கடும் வெயிலில் பரப்புரை கண்டுகொள்ளாத மக்கள்

சென்னை.ஏப்.5

வட சென்னையில் தி.மு.க., தே.மு.தி.க., அ.ம.மு.க., மக்கள் நீதி மய்யம், நாம் தமிழர் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் தேர்தல் களத்தில் உள்ளன. அந்தந்தக் கட்சி உறுப்பினர்கள் தற்போது கொளுத்துகின்ற கடும் வெயிலின் மத்தியில் நின்று ஆங்காங்கே பரப்புரைகளில் ஈடுபடுகின்றனர். வெயில் கொளுத்துவதால் வேட்பாளர்களின் பரப்புரையைப் பொது மக்களில் எவரும் கண்டுகொள்வது இல்லை. பரப்புரையில் ஈடுபட்டு வரும் வேட்பாளர்களைப் பார்த்தும் பார்க்காதது போல மக்கள் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். வட சென்னையின் பல இடங்களில் இந்தக் காட்சியைக் காண முடிவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இவர்களின் பரப்புரையைப் பொதுமக்கள் கவனத்தில் கொள்ளாமையால் குறித்த கட்சிகளைச் சார்ந்த வேட்பாளர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது.



## காஷ்மீர் தேர்தல் தூதராக 'மிஸ் இந்தியா' அழகி

ஜம்மு.ஏப்.5

எதிர்வரும் இந்தியத் தேர்தலில் காஷ்மீர் மாநிலத்தின் தேர்தல் தூதராக 'மிஸ் இந்தியா' போட்டியாளரான சானா துவா நியமிக்கப்பட்டுள்ளார். 2017ஆம் ஆண்டில் 'மிஸ் இந்தியா' போட்டியில் கலந்துகொண்டு வந்த அவரைக் காஷ்மீருக்கான தேர்தல் தூதுவராக இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

இவர் உலக அளவில் நடைபெற்ற 'மிஸ் யுனைடெட் காண்டினெனட்ஸ் 2017' போட்டியில் முதல் 10 பேர்களில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டவர் என்பதும் இவர் வழக்கறிஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## "மக்களிடம் பொய் மூட்டைகள்"

### மோடி - ராகுல் பரஸ்பர குற்றச்சாட்டு



புதுடெல்லி.ஏப்.5

மக்களிடம் பொய்களை அள்ளிவிடுவதாக இந்தியத் தலைமை அமைச்சர் மோடியும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டினர். இந்தியாவின் வடகிழக்கு மாநிலத்தில் 200 கிலோமீற்றர் இடைவெளியில் நடைபெற்ற அவரவர் கட்சிப் பொதுக் கூட்டங்களிலேயே இருவரும் இவ்வாறு பரஸ்பரம் தெரிவித்தனர்.

அருணாச்சலப் பிரதேச மாநிலம் பசிகாட் பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மோடியும், அந்த இடத்தில் இருந்து சுமார் 200 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அசாம் லக்கிம்பூர் நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தியும் கலந்து கொண்டு பேசியபோதே இவ்வாறு பரஸ்பரம் குற்றம் சாட்டினர்.



## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் சொந்த நலனில் அக்கறை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேற தாமதமாகலாம். முக்கிய செலவுக்கு சேமிப்புக் கரையும். பணியாளர்கள் பணிச்சுமையை ஓரளவு சமாளிப்பர்.

**இடபம்:** பெருந்தன்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பெண்கள் உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.

**மிதுனம்:** முன்னர் செய்த உதவிக்கு நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி புரிவீர்கள். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும்.

**கடகம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். குடும்பத்தினர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் நேரம் பணிபுரிவீர்கள். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும்.

**சிம்மம்:** உடல்நலனில் கவனம் தேவை. நண்பரின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட தடைகளைச் சரி செய்வீர்கள்.

**கன்னி:** மனதில் தெய்வீக சிந்தனை மேலோங்கும். இயன்ற அளவில் தான தர்மம் செய்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வாழ்க்கைத் தரம் உயரும். நிலுவைப் பணம் வந்துசேரும்.

**துலாம்:** கடந்தகால அனுபவத்தால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி திருப்திகரமாக நிறைவேறும். நிலு வைப் பணம் வசூலாகும்.

**விருச்சிகம்:** நண்பரின் ஆலோசனையால் நன்மை கிடைக்கும். கூடுதல் உழைப்பால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர்.

**தனுசு:** சுயதம்பட்டத்தால் சிலரது அதிருப்திக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சிறக்கக் கூடுதல் உழைப்பு அவசியம். சுமாரான பணவரவு இருக்கும்.

**மகரம்:** திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள்.

**கும்பம்:** உறவினர் மத்தியில் உங்கள் மீதான மதிப்பு உயரும். தொழில், வியாபாரம் செழிக்க நிர்வாகச் சீர்திருத்தம் அவசியம். மிதமான லாபம் கிடைக்கும்.

**மீனம்:** புத்துணர்வுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான வளர்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.



நியூஸி. துப்பாக்கிச் சூடு விவகாரம்

## சந்தேக நபருக்கு எதிராக ஐம்பது வரை வழக்குகள்

வெலிங்டன்,ஏப்.5

நியூசிலாந்து துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பிரெண்டன் டாரன்ட் என்கிற நபர் 50 வரையான கொலைக் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள இருப்பதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர். நியூசிலாந்தின் கிறிஸ்ட் சர்ச்சில் உள்ள இரண்டு மசூதிகளில் தாக்குதல் நடத்திய குற்றவாளி 50கொலைக் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள இருக்கிறார். மேலும் 36 பேரை கொலைச் செய்ய முயன்றதாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குகளில் அவருக்குப் பிணை வழங்கப்படவில்லை என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

**பின்னணி**

நியூஸிலாந்தில் கிறிஸ்ட் சர்ச் நகரில் உள்ள அல்நூர் மசூதி மற்றும் லின்வுடன் பகுதியில் உள்ள மசூதிகளில் கடந்த மாதம் முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது துப்பாக்கியுடன் மசூதிக்குள் நுழைந்தவர்கள் தாறுமாறாகச் சுட்டனர். இதில் 50 பேர் சாவடைந்தனர். இந்தச் சம்பவம் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட சந்தேகத்தில் பிரெண்டன் டாரன்ட் என்கிற நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணை நடந்து வருகிறது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து தானியங்கி ரகத் துப்பாக்கி மற்றும் பல ரகத் துப்பாக்கிகளைத் தடை செய்வதாக நியூஸிலாந்து அறிவித்தது.

கனடாத் தலைமை அமைச்சர் அதிரடி

## தன்மீது குற்றம் சுமத்தியவர்களை கட்சியிலிருந்து உடன் நீக்கினார்

ஒட்டோவா,ஏப்.5

தன் மீது குற்றம் சாட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களான இரண்டு பெண்களைத் தன்னுடைய கட்சியில் இருந்து கனடாத் தலைமை அமைச்சரான ஜஸ்டின் ட்ரூடோ அதிரடியாக நீக்கினார்.


ஜோடி வில்சன் மற்றும் ஜானே பில்போட் ஆகியோரே இவ்வாறு கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். கனடாவைச் சேர்ந்த பிரபல நிறுவனமான எஸ்.என்.சி. லாவலின், லிபியாவில் சில தொழில் ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக அந்த நாட்டின் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த ஊழல் வழக்கின் விசாரணையில் ஜஸ்டின் ட்ரூடோ தலையிட்டதாக அவரது கட்சியைச் சேர்ந்த குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் முறைப்பாடு அளித்தனர். ஜஸ்டின் ட்ரூடோ மீது குற்றம் சுமத்திய பிறகு, அவர்கள் இருவரும் தாங்களாகவே பதவி விலகினர். தற்போது குறித்த இருவரையும் தனது கட்சியிலிருந்து நீக்கியுள்ளார். ஜஸ்டின் ட்ரூடோ. கனடாவில் தேர்தல் நடக்க இருக்கும் நிலையில் நடந்த இந்தச் சம்பவமானது மக்கள் மத்தியில் ஜஸ்டின் ட்ரூடோவின் செல்வாக்கை குறைத்துள்ளதாகப் பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.


# ‘இடாய்’ ஏற்படுத்திய இடரால் மரத்தில் குழந்தை பெற்ற தாய்

மபுடோ,ஏப்.5

அண்மையில் மொசாம்பிக், சிம்பாவே, மாலாவி ஆகிய ஆபிரிக்க நாடுகளை ‘இடாய்’ என்கிற மிகப் பெரிய புயல் காற்றுத் தாக்கியது. கூடவே பலத்த மழையும் பெய்தது. இதனால் ஆயிரக்கணக்கானோர் சாவடைந்தனர். பலர் பாதிக்கப்பட்டனர்.

தொங்கு பாலங்கள், மரங்கள், வீட்டுக் கூரைகள், உயர் நிலங்கள் என்பனவற்றில் பலர் தஞ்சமடைந்தனர். பின்னர் அவர்கள் மீட்கப்பட்டனர். இந்த நிலையில், மத்திய மொசாம்பிக்கில் வெள்ளத்தாலும் காற்றாலும் இழுத்துச் செல்லப்பட்டு மாமரத்தில் ஒரு கர்ப்பவதி தஞ்சமடைந்திருந்தார். அவருடைய பெயர் அமெலியா. தனியாக வாழ்ந்து வரும் அவர், வெள்ளத்தில் சிக்கிக்கொண்ட போது தனது இரண்டு வயது மகனுடன் மாமரத்தின் கிளை ஒன்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். அந்தக் கிளை மீது அவர் பெண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார். இரண்டு நாள்கள் கழித்துத் தாயும் சேயும் மீட்கப்பட்டனர். சாரா என்று பெயரிடப்பட்ட அந்தப் பெண் குழந்தை தற்போது ஆரோக்கியமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.





## ‘பிரெக்ஸிட்’ விவகாரம் பதவி துறந்தார் பிரிட்டன் அமைச்சர்!

லண்டன்,ஏப்.5

‘பிரெக்ஸிட்’ விவகாரத்தில் பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரேசா மே முன்னெடுத்து வரும் தீர்மானங்கள், திட்டங்களுக்குத் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் பிரிட்டன் அமைச்சர்களில் ஒருவரான நைஜல் ஆடம்ஸ் என்பவர் தன்னுடைய பதவியைத் துறந்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பான விவகாரத்தில், பிரிட்டன் நாடாளுமன்றத்தில் தெரேசா மே முன்வைத்த தீர்மானங்கள் அனைத்தும் அதன் மீதான வாக்கெடுப்புகளில் தோல்வியைத் தழுவின. இந்த நிலையில் நாடாளுமன்றில் 4ஆவது முறையாக வக்கெடுப்பு நடத்துவதற்குத் தெரேசா மே தயாராகி வருகிறார்.

இது தொடர்பாக அவர் எதிர்க்கட்சி தலைவரான ஜெரேமி கார்பைனை சந்தித்துப் பேசுவதற்குத் திட்ட மிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதற்கு நைஜல் ஆடம்ஸ் தனது அதிருப்தியை வெளியிட்டார். ‘ஜெரேமி கார்பைனை பிரதமர் தெரசா மே சந்தித்துப் பேச இருப்பது மிகப்பெரிய தவறு’ என அவர் கூறினார். தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், அவர் தனது பதவியைத் துறந்தார். இவர் பிரிட்டனின் வேல்ஸ் பகுதிக்கான அமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓரினச் சேர்க்கைக்கு தண்டனை புரூனேயில் புதுச்சட்டம் அறிமுகம்

பண்டர் செரி பகவன்,ஏப்.5

தன்பாலின உறவில் ஈடுபட்டாலோ, திருமணத்துக்கு முன்பாக உடலுறவில் ஈடுபட்டாலோ கல்லால் அடித்துக் கொல்லப்படும் தண்டனை வழங்கப்படும் என்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது இஸ்லாமிய நாடான புரூனே. இந்த நடவடிக்கை பன்னாட்டு அளவில் கண்டனங்களைத் தோற்றுவித்துள்ளது புரூனேயிலுள்ள தன் பாலின உறவுக் காரர்கள் இந்தத் தீர்ப்புக் குறித்து அதிர்ச்சியையும் அச்சத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

புரூனேவில் ஓரினச் சேர்க்கை சட்ட விரோதமானது. அதில் ஈடுபட்டால் 10 வருடங்கள் வரை சிறைத் தண்டனைகள் வழங்கப்படலாம் என்பதே இது வரை அங்கு இருந்துவந்த சட்டம். இதன்படி பெண்கள் இருவர் உடலுறவில் ஈடுபட்டால் 40 சவுக்கடிகள் வழங்கப்படும் அல்லது 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படுவதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.









மத்திய அமெரிக்க நாடான வெனிசுலாவில் மக்கள் எதிர்கொண்டுவரும் இன்னல்கள் அதிகரித்து வருகின்றன. அமெரிக்காவின் தலையீடு, அது விதித்துள்ள ஏகப்பட்ட தடைகள், உள்நாட்டு அரசியலின் நிலையற்ற தன்மை, பொருளாதார நலிவு எனப் பல காரணங்களால் வெனிசுலா மக்களின் உயிர் வாழ்வதற்கான போராட்டம் தொடர்கிறது. குடி நீர், உணவு, மருந்துப் பொருள்கள் என எதையும் பெற முடியாத நிலையில் அவர்கள் அல்லல் படுகிறார்கள்.

## தமிழ்...

ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும் ஆரம்ப நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் மதிப்புறு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இன்று காலை 8.30 மணிக்கு பதிவுகளுடன் நிகழ்வு ஆரம்பமாகும். காலை 9.10 மணிக்கு தமிழ்நாடு பாரம்பரிய நடனத்துடன் மங்கள விளக்கேற்றல் இடம்பெறும். உதயன் பத்திரிகையின் முதன்மை ஆசிரியர் தே.பிரேமானந்த் வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார். காலை 9.40 மணிக்கு, மக்கள் இதழியல் இயக்கத்தின் தலைவர் தே.தேவானந்த் தொடக்கவுரை நிகழ்த்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஆசியுரைகளை, சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகன், பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் அருட்தந்தை ஏன்சிலி றொசான், தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் கே.குணராசா, யாழ். எவ்.எம். கட்டுப்பாட்டாளர் முருகேசு ரவீந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். தலைமையுரை காலை 10.15 மணிக்கு இடம்பெறும். அதனைச் சென்னைப் பல்கலைக்கழக ஊடகத்துறை மற்றும் தொடர்பாடல் பிரிவுத் தலைவர் பேராசிரியர் கோபாலன் ரவீந்திரன் நிகழ்த்துவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.விக்னேஸ்வரன் மதிப்புறு விருந்தினர் உரையை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் உரையாற்றுவார். முதன்மைப் பேச்சாளர் உரையை புதுடில்லியைச் சேர்ந்த பேராசிரியர் விஸ்வஜித்தாஸ் நிகழ்த்துவார். மக்கள் இதழியல் இயக்கத்தைச் சேர்ந்த கிருத்திகா தர்மராஜ் நன்றியுரையாற்றுவார். ஆரம்ப அமர்வு காலை 11.15 மணிக்கு நிறைவுக்கு வரும்.

இரண்டாவது அமர்வு காலை 11.30 மணிக்கு ஆரம்பமாகும். தமிழ் ஊடகத்துறையின் வரலாறு தொடர்பில் கலாநிதி கலாவாதி அமர்வு நடத்துவார். மதியம் 12.30 மணிக்கு தமிழ் வானொலி மற்றும் தொலைக்காட்சி தொடர்பில் கலாநிதி சக்திவேல் அமர்வு நடத்துவார். ஊடகக் கல்வி தொடர்பில் தே.தேவானந்த் பி.ப. 2.15 மணிக்கு மூன்றாவது அமர்வை நடத்துவார். மக்கள் இதழியல் தொடர்பான குழுக் கலந்துரையாடலை பேராசிரியர் ஜி.ரவீந்திரன் நடத்துவார்.

பி.ப. 4.30 மணிக்கு முற்றம் கலைக்குழு தமிழ்நாட்டு பாரம்பரிய நடனத்தையும், செயற்திறன் அரங்க இயக்கம் எங்கதம் நாடக ஆற்றுகையை நிகழ்த்துவார்கள். 6 மணிக்கு முதல் நாள் அமர்வு நிறைவுக்கு வரும். (ஒ.5)

## தமிழர்களின்...

தார்.

வன்னி மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தினருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையிலான சந்திப்பு எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்ததார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் தேவைகளை அறிந்து அபிவிருத்திகளை முன்னெடுத்தது. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் உணரப்பட்டன. ஆனால் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்துகொண்டு அரசுக்கு ஆதரவாகவே செயற்பட்டனர் -என்றார். (ம)

## பொலிஸாரை...

ளார். வீட்டின் முன்னால் உள்ள சாலையோரத்தில் மகிழுந்தை நிறுத்திபோது பின்தொடர்ந்து வந்த வாகனத்தில் வந்தோர் மகிழுந்தில் பயணித்தவரைத் தாக்கியுள்ளனர். இதனால் அவர் பொலிஸ் நிலையம் சென்று அங்கிருந்து பொலிஸாரை அழைத்து வந்துள்ளார்.

தாக்கிய நபர் அலைபேசி அழைப்பை ஏற்படுத்தவே ஐந்து பேர் வாள்களுடன் வந்து மதில் ஏறிப்பாய்ந்து வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துள்ளனர். அவ்வேளையில் மகிழுந்து வரவே மதிலால் பாய்ந்தவர்கள் அதில் வந்தவர்களை வெட்டுவதற்கு ஓடிவந்துள்ளனர். மகிழுந்தில் இருந்து பொலிஸார் இறங்கவே அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். அவர்களைத் துரத்திச் சென்ற பொலிஸார் இருவரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர். அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-9)

## இந்து...

மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது. "நந்திக் கொடி நிமிர்த்தி நயமுடன் நாம் உரைப்போம் தமிழர்கள், நாம் இந்துக்கள்" எனும் தொனியில் இந்த அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது. (ம-159)

## ரணில்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 உறுப்பினர்களின் ஆதரவுடன் வரவு - செலவுத் திட்டத்தை நிறை வேற்றிவிடலாம் என ஆளுந்தரப்பு நம்பிக்கை வெளியிட்டிருந்தாலும், அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்குரிய நடவடிக்கையில் மகிந்த அணி இறங்கியுள்ளது.

எனவே, இன்று கட்டாயம் சபைக்கு வருமாறு ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவினால் உத்தரவு விடுக்கப்பட்டுள்ளதுடன், வெளி இடங்களுக்குச் செல்லவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அதிருப்தி நிலையிலுள்ள ஐ.தே.கவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அவர்களுடன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தியுள்ளார். கம்பெரலிய (ஊரெழுச்சி) வேலைத்திட்டத்தின் கீழ் இவர்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொது எதிரணியின் 70 உறுப்பினர்களும், ஜே.வி.பியின் 6 உறுப்பினர்களும் வரவு -செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கவுள்ளனர்.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது நடுநிலை வகித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் 23 உறுப்பினர்களும், இன்றைய இறுதி வாக்கெடுப்பின்போது எத்தகைய முடிவை எடுப்பார்கள் என்பது குறித்து நேற்று இரவுவரை அறிவிக்கவில்லை.

எதிர்த்து வாக்களிக்கப்படும் என சு.க. உறுப்பினர்கள் சிலர் அரசியல் மேடைகளில் முழக்கமிட்டிருந்தாலும் இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்று மாலை நாடாளுமன்ற வளாகத்தில் கூடி ஆராய்ந்தது. எனினும், வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதா? இல்லையா? என்பது குறித்து இன்று காலை அரச தலைவர் தலைமையில் கூடி இறுதி முடிவொன்றை எடுப்பதென சு.கவின் நாடாளுமன்றக் குழு முடிவு செய்துள்ளது.

பெரும்பாலும் சு.கவின் 23 உறுப்பினர்களும் இன்றைய வாக்கெடுப்பின்போது நடுநிலை வகிக்கும் வகையில் சபையிலிருந்து வெளியேறி விடுவார்கள் என அத்தரப்பிலிருந்து அறியமுடிந்தது.

இதேவேளை, வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு எதிராக வாக்களித்திருந்த மகிந்த அணி இறுதி வாக்கெடுப்பின் (மூன்றாம் வாசிப்பு) போதும் எதிராக வாக்களிக்க ஏற்கனவே முடிவெடுத்திருந்தாலும் இன்று காலை மீண்டும் கூடி அது தொடர்பில் ஆராயவுள்ளது.

இறுதி வாக்களிப்பு தொடர்பில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொது எதிரணியினர் நேற்று மாலை நாடாளுமன்ற வளாகத்தில் பேச்சு நடத்திய போதும் அது இணக்கப்பாடு இல்லாமல் முடிவடைந்தது. எவ்வாறாயினும் இறுதி வாக்கெடுப்பு குறித்து மைத்திரியும் மகிந்தவும் பிடிகொடுக்காமல் இறுதி நேரம் வரை காத்திருப்பது அதிரடி முடிவொன்றுக்காக இருக்கலாம் என உள்ளகச் செய்திகள் கூறுகின்றன.

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த மார்ச் 5ஆம் திகதி நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 6ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்று, 12ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதங்கள் கடந்த 13ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது. இன்று மாலை வரவு - செலவுத் திட்டம் மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் சாதாரண பெரும்பான்மைகூட இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடனேயே ஆட்சியை முன்னெடுத்து வருகின்றது. கூட்டமைப்பின் 14 உறுப்பினர்களின் ஆதரவே வரவு -செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்புக்குக் கிடைக்கும். இந்நிலையில், ஜே.வி.பியின் 6 உறுப்பினர்களும் இறுதி வாக்கெடுப்புக்கு எதிராக வாக்களிக்க முடிவெடுத்துள்ள நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 23 உறுப்பினர்களுடன் அதிருப்தி நிலையிலுள்ள ஐ.தே.கவின் பின்வரிசை உறுப்பினர்களில் 15 பேரை மகிந்த அணியினர் (70 உறுப்பினர்கள்) வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் இருக்கவைத்தால்கூட வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ரணில் அரசுக்கு சிக்கல் ஏற்படும். எனவேதான், ரணில் அரசுக்கு இன்று பலப் பரீட்சையாகவே கருதப்படுகின்றது. (ம-22)

## நிலத்தடி...

மாசடைதல் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றில் பொதுமக்கள் தாக்கல் செய்திருந்த வழக்கைச் சட்டத்தரணிகள் தொடர்ந்து நடத்திவந்தனர். நீண்ட விசாரணைகளின் பின்னர் நொதேர்ன் பவர் நிறுவனத்துக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. இந்த உத்தரவுக்கு முன்னர் சுன்னாகத்தில் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டன. வடக்கில் மட்டுமன்றி கொழும்புவரை நொதேர்ன் பவர் நிறுவனத்துக்கு எதிராக நிலத்தடி நீரைப் பாதுகாக்குமாறு கோரிய போராட்டம் வலுப்பெற்றிருந்தது.

மல்லாகம் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக நொதேர்ன் பவர் நிறுவனத்தினர் யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்தனர். அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்று நிறுவனம் இயங்க அனுமதி மறுத்ததோடு, நிறுவனத்தைப் பராமரிக்க மாத்திரம் அனுமதி வழங்கியிருந்தது.

அடுத்த கட்டமாக நொதேர்ன் பவர் நிறுவனத்தினர் மேல்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்தனர். அவர்களது மனு பரிசீலிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றின் கட்டளை சரியென்று மேல்முறையீட்டு நீதிமன்றமும் மீள உறுதி செய்திருந்தது.

இது ஒருபுறமிருக்க கொழும்பிலுள்ள சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மையம் இந்த விடயத்தில் கவனம் செலுத்தியிருந்தது. சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள நிலத்தடி நீர் மாசடைவதற்கு நொதேர்ன் பவர் நிறுவனம் காரணமாக உள்ளது என்பதை இயன்றளவு கண்டறிந்து, அந்த நிறுவனத்தின் தலைவர் ரவீந்திர குணவர்த்தன காரியவசம் உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அதில் நொதேர்ன்பவர் மின் உற்பத்தி நிலையம், இலங்கை மின்சார சபை, சுற்றாடல் அதிகார சபை, முதலீட்டுச் சபை, வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண அமைச்சராக இருந்த பொ.ஐங்கரநேசன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை உட்பட 11 பேர் எதிராளிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டனர்.

அது பற்றிய விசாரணை இடம்பெற்றுவந்தது. மல்லாகம் நீதிவான் மன்றில் இது பற்றிய வழக்கில் முற்பட்டிருந்த சட்டத்தரணிகள், பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக இடைபுகுநர்களாகத் தம்மை இணைத்துக் கொள்ளவேண்டும் என்று உயர்நீதிமன்றிலும் கேட்டிருந்தனர். அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

விசாரணைகளின் பின்னர் வழக்கு தீர்ப்புக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரியந்த ஜயவர்த்தென, பிரசன்ன ஜயவர்த்தென, எல்.ரி.பி. தெகிதெனிய ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. அதன்போதே நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிலையத்தால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை உயர்நீதிமன்று அறிவித்தது. இழப்பீடு வழங்கவும் உத்தரவிட்டது.

குறித்த மின் உற்பத்தி நிலையத்துக்கு முதலீட்டுச் சபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியனவற்றால் வழங்கப்பட்ட அனுமதிகள் சட்டரீதியற்றவை என்று அறிவித்த உயர்நீதிமன்று, குறித்த அனுமதி வழங்கப்பட்டமை அடிப்படை உரிமை மீறல் என்றும் தீர்ப்பில் தெரிவித்தது. குறித்த தீர்ப்பு 65 பக்கங்களைக் கொண்டுள்ளது.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி நுவான் போபகே, பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணி சாரா ஜோர்ஜின் அனுசரணையுடன் சட்டத்தரணிகளான தீபிகா யோகராஜாவுடன் கே.வி.எஸ்.கணேசராஜன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் முன்னாள் முதலமைச்சர் சார்பாக சட்டத்தரணி சி.சுந்தரலிங்கம் மற்றும் சட்டத்தரணி பாலேந்திராவின் அனுசரணையுடன் லக்ஸ்மன் ஜெய்குமாருடன் அரசதலைவர் சட்டத்தரணி கனகேஸ்வரன், நொதேர்ன்பவர் மின் உற்பத்தி நிலையம் சார்பில் அரசதலைவர் சட்டத்தரணி தினால் பிலிப்ஸ், மின்சார சபை சார்பில் அரச சட்டத்தரணியும் முற்பட்டிருந்தனர். (ம-த-105)

## வடக்கு...

தலைவர் இரா.சம்பந்தன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்தின் மூலம் கோரிக்கை வைத்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தி தொடர்பில் தலைமை அமைச்சரால் நியமிக்கப்பட்ட செயலணியின் கலந்துரையாடல் நேற்றையதினம் தலைமை அமைச்சர் செயலகத்தில் இடம்பெற்றபோதே கூட்டமைப்பின் தலைவர் குறித்த கோரிக்கையினை சமர்ப்பித்தார். குறித்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டது. தற்போது 5 ஆயிரம் மில்லியன் அனுமதிக்கப்பட்டு 2 ஆயிரத்து 500 மில்லியன் நடப்பாண்டின் வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தை பயன்படுத்தி திட்டமிடப்பட்டுள்ள பெரிய திட்டங்களின் ஆரம்பப் பணிகளை மேற்கொண்டு அடுத்தகட்ட நிதி தொடர்பில் விடப்படும் கோரிக்கையின் பெயரில் அந்த நிதிகளையும் ஒதுக்கீடு செய்ய ஆவண செய்வதாக உறுதியளிக்கப்பட்டது.

இதேநேரம் பலாலி வானூர்திச் சேவையை ஆரம்பிப்பதற்கு கட்டட வசதியோடு தீ அணைப்பு சேவையையும் ஏற்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டது. இது தொடர்பில் ஆராய்ந்து தற்போது மத்தள வனூர்தி நிலையத்தில் மேலதிகமாகவுள்ள தீ அணைப்பு சேவையினை பலாலிக்கு மாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டது. (ம-105)

## சட்ட விரோத...

பைக்கோ என்பன கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அங்கு பணிபுரிந்த இரு சந்தேக நபர்களையும் மடுக்கந்த சிறப்பு அதிரடிப்படையினர் கைது செய்தனர் என்று அதிரடிப்படையினருக்கு தலைமை தாங்கிச் சென்ற பொறுப்பதிகாரி மனேகரா தெரிவித்தார்.

குறித்த நிறுவனத்தில் பணியாற்றியவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

## கணவனிடம்...

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த பெண் தனது கணவன் தினமும் மது அருந்திவிட்டு வந்து தன்னையும் பிள்ளைகளையும் தாக்குவதால் தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸாரைக் கோரியுள்ளார். இதுதொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஆறுபிள்ளைகளையும் தாயையும் சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். (ம-9)





# கரப்பந்தாட்டத்தில் கலக்கிய கோப்பாய் பிரதேச செயலகம்

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலருக்குமான கரப்பந்தாட்டத் தொடரில், கோப்பாய் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில், கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பர்ய் பிரதேச செயலக அணி மோதியது. 5 சுற்றுக்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. முதல் இரு செற்களையும் 25:23, 25:13 என்று வெற்றிக் கொண்டது கோப்பாய் பிரதேச செயலக அணி. பதிலுக்கு மூன்றாவது செற் ஆட்டத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 25:21 என்ற கணக்கில் வெற்றி கொண்டது.

நான்காவது செற் ஆட்டத்தை கோப்பாய் பிரதேச செயலக அணி 25:21 என்று வெற்றி பெற்று, 3:1 என்ற செற் கணக்கில் சம்பியனைத் தட்டிச் சென்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது. 5 சுற்றுக்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. முதல் மூன்று செற்களையும் 25:12, 25:10, 25:12 என்ற கணக்கில் கோப்பாய் பிரதேச செயலக அணி வெற்றி கொண்டு சம்பியனைத் தட்டிச் சென்றது.

(ஒ.23)

## அரியாலை ஐக்கியம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 5

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் மொத்த புள்ளிகள் அடிப்படையில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 92 புள்ளிகளைப் பெற்று சம்பியானது.

அரியாலை திருமகள் விளையாட்டுக்கழக அணி 51 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி 49.5 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம்மும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விளையாட்டுத் துறை பணிப்பாளர் இ.குருபரனும், யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுத் துறை அலுவலர் கே.விஜிதரனும், யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அதிபர் சதாசிவம் நிமலனும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி யாழினியும், சிவாகாமி மஹால் உரிமையாளர் த.பகீர்ரும் கலந்து கொண்டனர். (ஒ.23)




## இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு புதிய பரிசோதனை

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மேற்கொள்ளும் சுற்றுப்பயணங்களின் போது மதுபானம் அருந்தியுள்ளனரா என்பது குறித்து பரிசோதனை செய்ய இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் ஷம்மி சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த பரிசோதனையில் மதுபானம் அருந்தியுள்ளமை நிரூபிக்கப் பட்டால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் திமுத் கருணாரட்ன மது போதையில் வாகனம் செலுத்தி விபத்து ஏற்படுத்தியிருந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## அரையிறுதி ஆட்டங்கள்

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

+++

நாவாந்துறை கலைவாணி விளையாட்டு கழகம் நடாத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 5

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

திங்கட்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. 7:2 என்ற கோல் கணக்கில் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. 7:2 என்ற கோல் கணக்கில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதியது. 7:2 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

(ஒ.23)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து மயிலிட்டி பாரதி விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

◆◆◆

வற்றாப்பள்ள செந்தமிழ் விளையாட்டுக்கழகம் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனந்தபுரம் ஆனந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

◆◆◆

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்ட தொடரின் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மல்லாகம் நியூவாரியஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ஒ.23)








## மஹ்ரூப்புக்கு புதிய பொறுப்பு

இலங்கை கிரிக்கெட்டின் 19 வயதுக்குட்பட்டோர் அணியின் முகாமையாளராக முன்னாள் இலங்கை கிரிக்கெட் வீரர் பர்வீஸ் மஹ்ரூப் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

## ஐ.பி.எல். சூதாட்டம்: பயிற்சியாளர் கைது

ஐ.பி.எல். தொடர் ஆரம்பித்ததும் அதனுடன் சூதாட்டமும் இடம்பெறுவது வழக்கமே. அதனடிப்படையில் டெல்லி கேப்பிடல்ஸ் - கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதிய ஆட்டத்துக்கான சூதாட்டம் குஜராத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சர்ச்சையில் இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் கைது செய்யப்பட்டார்.

இந்தப்போட்டி தொடர்பாக குஜராத் மாநிலம் அல்காபுரி என்ற இடத்தில் உள்ள காபி ஷாப்பில் சூதாட்டம் இடம்பெறுவதாக தகவல் அறிந்த பொலிஸ் அங்கு சென்று அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது அங்கு மிகப் பெரிய அளவில் ஐ.பி.எல். சூதாட்டம் நடந்தது தெரிய வந்தது.

அந்த காபி ஷாப் இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளரும், முன்னாள் ராஞ்சி கிரிக்கெட் வீரருமான துஷ்கர் ஆரோத்துக்கு சொந்தமானது என்பது தெரிந்தது. இதை தொடர்ந்து பொலிஸார் அவரைக் கைது செய்தனர். அவருடன் அவரது வியாபார பங்கு தாரர்கள் ஹேமங் படேல், நீச்சல் மிதா ஆகியோரும் கைதானார்கள்.



# சென்னையின் தொடர் வெற்றிக்கு மும்பை முற்றுப்புள்ளி

12ஆவது ஐ.பி.எல். போட்டியின் 15ஆவது போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின இதில் மும்பை அணி 37 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி முதலில் மும்பை அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. மும்பை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டி குக், ரோகித் களமிறங்கினர். அணி 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 3 இலக்குகளை இழந்தது. அதிகபட்சமாக யாதவ் 59 ஓட்டங்களையும், குர்னல் பாண்டியா 42 ஓட்டங்களையும்



பெற்றனர். இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் பாண்டியா அதிரடியாக ஆடி 25 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ராயுடு எந்தவொரு ஓட்டத்தையும் பெறாது பவிலியன் திரும்பினார். கடந்த போட்டிகளில் அணியின் வெற்றிக்கு பங்காற்றிய டோனி ரசிகர்களுக்கு ஏமாற்றமளித்தார். அதிகபட்சமாக கேதர் யாதவ் 58 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் எவரும் பெரிதாக சோபிக்கவில்லை. அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களை மாத்திரமே பெற்று வெற்றியைத் தவற விட்டது. பந்து வீச்சில் பாண்டியா, மலிங்க தலா 3 இலக்குகளையும், பெரன்டோப் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மும்பை அணியின் பாண்டியா தெரிவு செய்யப்பட்டார்.

# தடுமாறி வெற்றி பெற்றது சன்ரைஸ் ஹைதராபாத்

12ஆவது ஐ.பி.எல். போட்டியின் 16ஆவது போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் டெல்லி - ஹைதராபாத் அணிகள் மோதின. இதில் ஹைதராபாத் அணி 5 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் அணி முதலில் டெல்லி அணியைத் துடுப்பெடுத்தாடு மாறு பணித்தது. டெல்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அணி 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் 6 இலக்குகளை இழந்து பரிதவித்தது. அதிகபட்சமாக நரேஷ் ஐயர் 43 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் எவரும் சோபிக்கவில்லை. பட்டேல் ஆட்டமிழக்காது 2 ஆறு ஓட்டங்கள் ஓர் நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 23 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் புவனேஸ்குமார், மொகமட் நபி, ஹயுல் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர். ரசிட் கான், சண்டீப் சர்மா தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

இலகு இலக்குக்காகக் களமிறங்கிய ஹைதராபாத் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வோர்னர், பெயர்ஸ்ரோ களமிறங்கினர். இருவரும் அணிக்கு ஒரு நிலையான தன்மையை அமைத்துக் கொடுத்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் அடுத்தடுத்த பந்துப்பரிமாற்றங்களில் ஆட்டமிழந்து வெளியேறினர். வோர்னர் 10 ஓட்டங்களுடனும், பெயர்ஸ்ரோ தனது அரைச் சதத்தை தவறவிட்டு 48 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இறுதி நிமிடத்தில் ஹைதராபாத் அணியின் இலக்குகள் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டு டெல்லி அணி வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திய போதிலும் இறுதியில் பதான், மொகமட் நபி இருவரும் ஆட்டமிழக்காது களத்திலிருக்க அணி 17 பந்துப்பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

பந்து வீச்சில் லமிச்சனே, ரபாடா, பட்டேல், ரிவற்ரா, சர்மா ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.



## டோனியை பார்க்க வந்த மும்பை பாட்டி

இந்திய கிரிக்கெட் வீரர் டோனி ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக விளையாடி வருகிறார்.

பிற மாநிலங்களிலும் அவருக்கு மைதானங்களில் பலத்த ஆதரவு இருக்கும்.

மும்பை - சென்னை அணிகளுக்கிடையிலான போட்டியின் பின்னர் டோனியைப் பார்ப்பதற்காக மும்பை வான்கடே மைதானத்துக்கு வந்திருந்த பாட்டி ஒருவரை டோனி சந்தித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியுள்ளது.

சென்னை அணியை ஆதரிப்பதற்காக மும்பையைச் சேர்ந்த பாட்டி ஒருவர் தனது பேத்தியுடன் வந்திருந்தார். போட்டி முடிந்த பின்னர் அதிகாரிகள் இதனை டோனியிடம் தெரிவிக்க, அவரைக் காண்பதற்காக டோனி வந்தார். டோனியை கண்டவுடன் அந்த பாட்டி அவரின் கைகளை பிடித்துக் கலந்துரையாடினர். பின்னர் 'செல்பி'யும் எடுத்துக் கொண்டனர்.

# அடுத்த போட்டியில் மாற்றங்களுடன் களமிறங்கும் சென்னை - டோனி

சென்னை - மும்பை அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் சென்னை அணி 37 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்தத் தோல்வி குறித்து டோனி தெரிவிக்கையில்;

சில விடயங்களில் நாங்கள் தவறு செய்ததாக நினைக்கிறேன். பந்து வீச்சில் தொடக்கம் நன்றாகவே இருந்தது. 12 முதல் 13வது பந்துப்பரிமாற்றங்கள் வரை சரியாக இருந்தது. அடுத்து சில பிடியெடுப்புக்களைத் தவறவிட்டோம். களத்தடுப்பில் சொதப்பியிருந்தோம்.

இறுதிக் கட்டத்தில் பந்து வீச்சு மிக மோசமாக இருந்தது. பந்து வீச்சாளர்கள் நேர்த்தியாக பந்து வீசாமல் ஓட்டங்களை அள்ளிக் கொடுத்தனர். ஓட்டங்களைக் கட்டுப்படுத்துவது பற்றி பந்து வீச்சாளர்கள் தெரிந்து இருக்க வேண்டும்.

எங்கள் அணியோடு சில வீரர்கள் இன்னும் இணையவில்லை. பிராவோவும் தற்போது காயம் அடைந்துள்ளார். ஏற்கனவே சில வீரர்கள் காயத்தால் விலகிவிட்டனர். நிகிடி காயம் காரணமாகவும், டேவிட் வில்வே சொந்த காரணத்துக்காக விலகி உள்ளனர்.

அடுத்தடுத்து போட்டியின் போது ஆடுகள தன்மையை பொறுத்து அணியில் சில மாற்றங்கள் செய்யப்படும் - என்றார்.

# ஐ.பி.எல்லில் சென்னை தோல்வியின்றி வரலாறா

## ஹர்பஜன் கர்ச்சிப்பு



15ஆவது ஐ.பி.எல். போட்டியில் மும்பை - சென்னை அணிகள் மோதிய போட்டியில் சென்னை அணி தோல்வியடைந்திருந்தது. இந்த தோல்வி குறித்து அந்த அணியின் வீரர் ஹர்ப்ஜன் சிங் தெரிவிக்கையில்; அடிபட்ட சிங்கத்தோட மூச்ச காத்து அதோட கர்ஜனையை விட பயங்கரமாக இருக்கும். உலகில் தோல்விகள் காணாத வீரனே இல்லை. தோல்விகள் இல்லையென்றால் அவன் வீரனே இல்லை. மோதி எழுவோம் நாங்கள். தமிழே வெறும் கைதட்டலை மட்டும் நீங்கள் தாருங்கள். ஐ.பி.எல்லில் சென்.னை அணி தோல்வியின்றி வரலாறா-என்றார்.

---

**BARATHY**
**சித்தன்கேணி**

**A/L 2021**

**கலை, வர்த்தகப் பிரிவு**

**புதிய பிரிவு ஆரம்பம்**
06.04.2019 சனிக்கிழமை
யாழ். பிரபலம் பெற்ற ஆசிரியர் குழுவினர்

| | |
|---|---|
| பொருளியல் | - R.தர்ஷன் |
| கணக்கீடு | - S.திருக்குமரன் |
| வணிகக்கல்வி | - S.K.பாலசபேஷ் |
| I.C.T. | - T.தேவதர்ஷன் |
| தமிழ் | N.பாலா (பிரிவு 1) |
| | N.குகபரன் (பிரிவு 2) |
| இந்து நாகரிகம் / இந்துசமயம் | A.மேனன் |
| புவியியல் | - P.S.குமரன் |
| வரலாறு | - K.சுதன் |
| அரசியல் | - S.கோகுலன் |
| ஊடகவியல் | - K.கஜீதரன் |
| அளவையியல் | - E.S. பவன் |
| நாடக அரங்கியல் | - T.ஜெயசுதன் |
| விவசாய விஞ்ஞானம் | - S.சஞ்ஜீவன் |
| கிறிஸ்தவம் | - J.வசந்தன் |
| ஆங்கிலம் | - N.நிஷாந்தன் |

உங்கள் அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளவும்.
தொடர்புகளுக்கு - 077 940 8682

---

**DMI**
**A/L - 2K21**
நாளை ஆரம்பம்
(கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்)

**DMI JAFFNA** காலை: 9.00 மணி
**DMI CHUNNAKAM** மாலை: 3.00 மணி

---

**NEC** பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.

**A/L 2021**
**கலை, வர்த்தகம்**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
06.04.2019 சனி, காலை 8.00 மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

A/L 2019, 2020, Day Class
பிரிவுகளுக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

---

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்
**P.உமாசங்கர் & வளவாளர்களின்**
+ SLAS,SLEAS (open/Limited)
+ நீதிமன்றபதிவாளர் - எழுதுநர்
+ புள்ளிவிவரவியலாளர்- அலுவலர்
+ பாராளுமன்ற - உத்தியோகத்தர்
+ சிறைச்சாலை உத்தியோகத்தர் - காவலர்
+ பட்டதாரி ஆசிரியர்
+ சட்டக்கல்லூரி தெரிவு

**P.உமாசங்கர் & S. நவந்தன்**
பொது அறிவு, நுண்ணறிவு/ உளச்சார்பு, முகாமைத்துவம், முகாமைஉளச்சர்வு
07.04.2019 ஞாயிறு
9am to 4 pm
நவீன மாற்றத்திற்கு அமைய முற்றிலும் எதிர்பார்க்கை விடங்களுடன்

**நாவலர் கல்வி நிறுவனம்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 741 7143, 077 394 2964, 071 813 0390

---

இறுதிக் கருத்தரங்கு
**வரிப்பரிசோதகர்**
06.04.2019 சனி 9 am - 4 pm
எதிர்பார்க்கை நவீன விடயங்களுடன்
P. கமல்தாசன் SLPS
A. சுபாகரன் SLEAS
K. தெய்வேந்திரம் SLAS
A.K. கீர்த்திராஜன் MA

**நாவலர்**
கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T. P : 077 111 6739

---

**D.C.M**
**சுன்னாகம்**
**A/L 2021**
**வர்த்தகப்பிரிவு**
↓
ஆரம்பம் நாளை
3.00 PM

---

**வீடு வாடகைக்கு தேவை**
யாழ். நகர், நல்லூர், கச்சேரி, திருநெல்வேலி போன்ற பிரதேசங்களில் வீடு வாடகைக்கு தேவை.
076 43 89 429

---

**FRENCH LANGUAGE CENTRE**
**பிரெஞ்ச்** DELF A1
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம் 0779 789 456 021 221 7781
ஆரம்பம் : 06.04.2019 சனி மதியம் 12 மணி.
ஏனைய நிறுவனங்களில் கற்றோரும் இணையலாம்.

---

**ஹோமியோபதி வைத்திய சேவை**
I.A.S வைத்திய சேவை நிலையம்
A9 வீதி, பரந்தன் சந்தி
கூட்டுறவுச் சங்க வளாகத்தில்
நாளை (06.04.2019) சனிக்கிழமை நீரிழிவு (சலரோகம்) மூட்டு வாதம், ஆஸ்துமா உட்பட 19 நோய்களை முற்றாக மாற்றிக்கொள்ள கடந்த 37 வருடமான அனுபவம் வாய்ந்த வைத்திய சேவை நடைபெறும் பதிவிற்கும் முற்பதிவிற்கும் 077 444 1082
13.04.2019 சனிக்கிழமை நடைபெறவிருந்த யாழ் வைத்திய சேவை சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 18.04.2019 வியாழக்கிழமை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன். 077 908 8991

---

**சிங்களம்**
பாடசாலை மாணவர்களுக்கானது
தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5, தரம் 6, தரம் 7, தரம் 8, தரம் 9, தரம் 10.
* உங்களுக்கு விரும்பிய நேரத்தைத் தெரிவுசெய்து கற்க முடியும்.
**New Sky Computer Training Centre**
இல.716, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 5992

---

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af **பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

---

**BARATHY**
**சித்தன்கேணி**
மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் சித்தன்கேணி மண்ணில் A/L 2019, 2020, 2021
பொருளியல்
**R.தர்ஷன்**
சனி, ஞாயிறு பிரிவுகள் உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
**Note:**
ஆசிரியருடைய வகுப்பு சித்தன் கேணியில் எமது நிறுவனத்தில் மட்டும்தான் நடைபெறும்.

---

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம். - K.K.S. றோட், சுன்னாகம்.
(இரு இடங்களிலும்)

**A/L 2021**
கலை, வர்த்தகப் பிரிவு
யாழ். மாவட்டத்தின் பிரபலம் பெற்ற ஆசிரியர் குழுவினரால்
**பிரிவு 2 நாளை ஆரம்பம்**
**06.04.2019 சனிக்கிழமை**

| | |
|---|---|
| பொருளியல் | R.தர்ஷன் |
| | S.மகேந்திரன் |
| கணக்கீடு | - B.முகுந்தன் |
| வணிகக்கல்வி | - S.பிரதீபன் |
| I.C.T. | - T.சுதர்ஷன் |
| தமிழ் | - N.சத்தியவேந்தன் |
| இந்து நாகரிகம் | P.ஜோதீஸ்வரன் |
| | A.மேனன் |
| அளவையியல் | S.சயந்தன் |
| | N.ஜெயசுரேஸ் |
| புவியியல் | - P.S.குமரன் |
| வரலாறு | - K.சுதன் |
| அரசியல் | - S.கோகுலன் |
| ஊடகவியல் | - K.கஜீதரன் |
| விவசாய விஞ்ஞானம் | - S.சஞ்ஜீவன் |
| நாடக அரங்கியல் | - T.ஜெயசுதன் |
| இந்துசமயம் | - A.மேனன் |
| கிறிஸ்தவம் | - J.வசந்தன், |
| | - A.யுபின்சன் |
| ஆங்கிலம் | - K. நிஷாந்தன் |
| சங்கீதம் | - S.குமுதினி |
| மனைப்பொருளியல் | - K.றஜிதா |

உங்கள் அனுமதிகளை யாழ். நகர், சுன்னாகம் இரு இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு - 077 376 3511

---

கருத்தரங்கு தொடர் 6
SLAS, SLEAS, பதிவாளர் வருமான பரிசோதகர், எழுதுநர் சமய பாட ஆசிரியர் பரீட்சைகளுக்கானது
எதிர்பார்க்கை நவீன மாற்றங்களை உள்ளடக்கியது
P. கமல்தாசன் SLPS
C. அமல்ராஜ் SLAS
P.N. சுதர்சன் SLEAS
K. தெய்வேந்திரம் SLAS
K. குமணன் SLPS

**நாவலர்**
கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T. P : 077 111 6739

---

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**
நீதிமன்ற
**முகாமைத்துவ உதவியாளர்**
**வருமான பரிசோதகர்**
பிரிவு I
சனி 10.00 - 2.00
பிரிவு II
ஞாயிறு 9.00 - 1.00

**ஜேலர் தரம் II**
**புனர்வாழ்வு உத்தியோகத்தர்**
**சிறைக் காவலர்**
பிரிவு I
சனி 9.00 - 1.00
பிரிவு II
ஞாயிறு 11.00 - 3.00

**ஆசிரியர் தெரிவு பரீட்சை**
பிரிவு I
சனி 9.00 - 1.00
பிரிவு II
ஞாயிறு 10.00 - 2.00

பதிவாளர், புள்ளி விவரவியலாளர், சட்டமானி, SLAS, SLEAS வகுப்புக்களும் வழமை போன்று நடைபெறுகின்றன. யாழ். நகரில் விரிவுரையாளர் தவசேகரின் வகுப்பு இங்கு மட்டுமே.
076 688 3394
**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

---

**வேலைவாய்ப்பு**
கிளிநகரில் இயங்கிவரும் பிரபல ஐஸ்கிறீம் நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த 45 வயதுக்கு மேற்பட்ட பின்வரும் பணியாளர்கள் தேவை.
* **முகாமையாளர்**
* **வரவேற்பாளர்**
* **ஏனைய பணியாளர்கள்**

தொடர்புகட்கு - 077 023 2328

---

**D.C.M-யாழ்நகர்**
(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகில்)
**A/L - 2021**
**கலை, வர்த்தக** புதிய பிரிவுகள்
ஆரம்பம்:
**06.04.2019 சனிக்கிழமை**
நேரம்:
**காலை - 9.00 மணியளவில்**
077 011 9434 நிர்வாகி

---

**Techno World**
**தொழில்நுட்பப் பிரிவு**
**A/L 2021 ஆரம்பம்**
- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

**06.04.2019 சனிக்கிழமை காலை 8.30**
077 017 5346
077 170 3549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

---

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட் யாழ்ப்பாணம் | K.K.S றோட் சுன்னாகம்
(இரு இடங்களிலும்)
**தமிழ்**
திரு. சத்தியவேந்தன்
(BA (Hons) Tamil Spl. M.Phil Tamil)
**A/L 2021**
பிரிவு 2 நாளை ஆரம்பம் 06.04.2019 இரு இடங்களிலும் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்

**Note:** A/L 2018 வெளிவந்த பெறுபேறுகளில் 78 மாணவர்கள் A சித்தியும் 142 மாணவர்கள் B சித்தியும் பெற்றுக்கொண்டார்கள். இதுபோல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**T.P 077 376 3511**

**Note:** A/L 2019, 2020, A/L Day பிரிவுகள் யாழ்.நகர், சுன்னாகம் இரு இடங்களிலும் நடைபெறு கின்றன.

---

**கண்ணீர் அஞ்சலி**
யாழ்ப்பாண மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும்
**திருமதி சிவாஜினி ஸ்ரீதர்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி தங்கரத்தினம் சிவானந்தன்**
02.04.2019 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
**யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்**
(C 9835/15/17)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.